# வணிக ஒளி




* மெய்ப்பொருள் காண்பது அறிவு *
வைத்தீஸ்வர வித்தியாலயம் யாழ்ப்பாணம்

## வர்த்தக மாணவர் மன்றம்

யாழ்/வைத்தீஸ்வர வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

வைத்தீஸ்வர வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தின் பணி
தொடர்ந்து நிலைபெற எமது ஸ்தாபனத்தின்
நல்லாசிகள்

KUSHIPHA
DISRIBUTORS

17, Claessen Place,
COLOMBO-5

புதுமைகள் புரிவது
புரட்சிகள் செய்வது
எமது நோக்கம்
சிந்தனை உயர்வு பெறின்
அதுவே வணிக ஒளியின் வெற்றி

# வணிக ஒளி
# 1981

## உள்ளே ஒளி தருபவை....


1. வணிக ஒளி........
2. வருவாய் வணிக ஒளியே........
3. முன்னேற்றப் பாதையிலே........
4. தமிழ் இலக்கணப் பாரம்பரியத்தில் நாவலர்
5. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
6. இலங்கையின் கட்டுப்பாடற்ற பொருளாதாரமும் பணவீக்கமும்
7. மகாவலித்திட்டம் ஒரு நோக்கு
8. வர்த்தகப் பிரமுகர்களுடன் சில நிமிடநேரச் சந்திப்பு
9. கல்விப்பயன்
10. தாராள இறக்குமதிக் கொள்கையும் அதன் விளைவுகளும்
11. பொருளாதாரக் கல்வி
12. கூட்டுறவு வளர்ச்சிமீது ஒரு கண்ணோட்டம்
13. மனித சமுதாயத்தில் பணத்தின் முக்கியத்துவம்
14. வரவு செலவுத் திட்டமும் இலங்கையும்
15. ஐக்கியம் தவறு
16. இலங்கையில் திட்டமிடல்
17. சுதந்திர வர்த்தக வலயம்
18. இலங்கையின் பொருளாதாரம்
19. முதலாளித்துவம் மரணப்படுக்கையில்
20. நன்னாள் எந்நாளோ?
21. குறுக்கெழுத்துப் போட்டி

# நிர்வாகக்குழு 1981

காப்பாளர்: அதிபர்
திரு. எஸ். பி. பாலசுப்பிரமணியம்

போசகர்கள்:
திரு. எஸ். கே. சுந்தரலிங்கம்
திரு. எஸ். இராஜதுரை

பொறுப்பாசிரியர்:
திரு. சு. சந்திரபோஸ்

தலைவர்:- செல்வன். அ. அமிர்தரஞ்சன்

உபதலைவர்கள்:-
செல்வர்கள்:- பி. ரவிதரன்
ஏ. சிறீஸ்கந்தராசா
பி. ராஜா
எஸ். சிறிநாதன்
ஆர். ஞானேஸ்வரன்

கௌரவ செயலாளர்:-
செல்வன். தா. பாலகணேசன்

உப செயலாளர்:-
செல்வன்- என். ஜெயசிறி

பொருளாளர்:-
செல்வன். ப. சிவலிங்கம்

குறுக்கெழுத்துப்போட்டி
ஆசிரியர்கள்:
செல்வன். கே. ஞானதேவன்
செல்வன். ஆர். பாலராஜ்

பத்திராதிபர்:- ந. வத்சலகுமாரி

வகுப்புப் பிரதிநிதிகள்:-
12 B செல்வன். எஸ். புஸ்பராஜா
12 E Com ,, என். ரவிச்சந்திரன்
11 ,, ,, எஸ். ராஜசெல்வம்
11 Arts செல்வி. ஆர். விஜயலட்சுமி
10 A செல்வன் கே. மகேந்திரன்
10 C ,, எஸ். எம். அன்ரனி
10 D ,, கே. முகுந்தன்
10 E என். விக்கினேஸ்வர மூர்த்தி
10 F ,, என். மோகனருஜ்
9 A ,, பி. தேவானந்
9 B ,, எம். ராஜேந்திரன்



யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்

திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள்



# சமர்ப்பணம்



அந்நியர் ஆட்சியில் அகப்பட்டு கரை ஏற முடியாது தவித்த ஏழைப் பிள்ளைகளின் மத்தியில் காலம் அறிந்து கருமமாற்றும் பெருந் தகைகள் "ஆயிரத்தில் ஒருவரே.

இவர்கள் காலம் அறிந்து செயற்கரிய காரியத்தின் நிலை உணர்ந்து இலட்சியப் பாதையில் வழுவாது நின்று நாட்டுக்கு நல்லனவற்றைச் செய்து குன்றில் இட்ட விளக்கேன எல்லார் உள்ளங்களிலும் வாழ் வர்.

1913ம் ஆண்டில் இத்தகைய தியாகசிந்தை கொண்ட ரி. நாகமுத்து என்பவர் எமது பாடசாலையை ஆரம்பித்தார்.

அன்னார் தொடக்கிவைத்த வைத்தீஸ்வர வித்தியாலயம் அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அயராத சேவை என்னும் உரமிட்டு வளர்க்கப்பட்டு வருகின்றது. அப்படியான ஒரு மரத்தில் ஓர் கிளையாக வர்த்தக மாணவர் மன்றமும் அதில் ஒரு கன்னிமலராகிய வணிக ஒளி அகிலத்தில் புகழ் ஒளி வீசிநிற்கின்றது.

இந்த ஒளி என்றும் பேரொளியாக விளங்க வர்த்தக மாணவர் மன்றம் பூத்த கன்னிபபூவை அன்னார் திருவடிகளில் சமர்ப்பிக்கிறோம்.

மலர்க் குழு.

# வடமாநில கல்விப் பணிப்பாளரின்

# ஆசியுரை

பள்ளிச் சிறுர்களின் பயனுள்ள நடவடிக்கைகளுள் பத்திரிகை வெளியீடும் ஒன்ருகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக"

என்னும் வள்ளுவரின் வாசகத்திற்கு அமைய வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மாணவர்கள் தாம் கற்றறிந்த வழி ஒழுகி வணிக ஒளி என்னும் மலரினை வர்த்தக மாணவ மன்றத்தின் கன்னிப்படைப்பாகத் தருகின்றனர், இம்மலர் அனைவருக்கும், சிறப்பாக மாணவ உலகிற்குப் பயனுடைய தொன்ருகும்.

ஒவ்வொரு மாணவரின் இயல்பூக்கங்களையும் ஆக்கவழியில் நெறிப்படுத்தி அவற்றைச் சிறந்தமுறையில் வெளிக்கொணர இம் மலர்க்குழுவினர் எடுத்தமுயற்சி பாராட்டுக்குரிய தொன்ருகும் இத்தகைய மாணவர் வெளியீடாம் வணிக ஒளி மலருக்கு வாழ்த்துக்களை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் இம்மலர் வெளியீட்டுக்கு உறுதுணையாக நின்று உழைத்தோர் அனைவருக்கும் எனது பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

வர்த்தக மன்றத்தின் இம் முயற்சி ஆண்டுதோறும் தொடர வேண்டும் என ஆசியும் வழங்குகின்றேன்.

நன்றி

24-12-1980
கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்

க. சிவநாதன்
வட பிராந்திய கல்விப் பணிப்பாளர்

## யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினரின்

# ஆசியுரை

வைத்தீஸ்வர வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தினர் வெளியிடும் வணிக ஒளி வருடாந்த சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன் எமது தமிழ் மாணவர்கள் எத்தகைய துயரங்களுக்கு மத்தியிலும் தமது கல்வி அறிவை வளர்க்க துடிக்கின்றனர் என்பதை நான் நன்கறிவேன். எமது குறிப்பாக வர்த்தக மாணவரின் அறிவுப்பசிக்கு அரும் படைப்பாக இவ் வணிக ஒளி இதழ் அமைந்துள்ளது. என்று கூறுவதில் பெருமையடைகின்றேன்.

வைத்தீஸ்வர வித்தியாலயம் யாழ் மண்ணில் புகழ் பூத்த அறிவாலயங் களில் ஒன்று இவ் அறிவாலயத்தின் அறிவுச் சுடர் ஒளியில் ஒன்றாக கடந்த ஆண்டு ஆடி மாதத்தில் வர்த்தக மாணவர்கள் ஒன்று திரண்டு வர்த்தக மாணவர் மன்றம் எனும் அமைப்பை உருவாக்கியதை நான் அறிவேன் அன்றுமுதல் இவ் அமைப்பு கல்வி வளர்ச்சிக்கு கடந்த ஏழு மாதங்களிலும் கருத்தான பலரின் முயற்சிகளை எடுத்து வந்துள்ளது. இவ் வரிசையில் மாணவ மன்றத்தின் வணிக ஒளி வெளியீடு ஒரு முன்னோடியாக அமைகின்றது. இம் மன்றம் ஓங்கி வளர்ந்து அறிவுப் பணியில் சிறக்க வாழ்த்தும் அதே வேளையில் இவ் வணிக மலர் தொடர்ந்து ஒளிதர எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

24-12-1980
யாழ்ப்பாணம்.

வெ. யோகேஸ்வரன்
பா. உ
யாழ்ப்பாணம்.

# அதிபரின் ஆசியுரை

20ம் நூற்றாண்டு மனிதவரலாற்றில் பல்வேறு துறைகளில் பெரும் திருப்பத்தையும் புரட்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இவற்றுள் கல்வித் துறையின் மறுமலர்ச்சி மிக முக்கியமானதொன்றாகும். வாழ்நாள் முழுவதும் கல்விப்பயணம் (Life Long Eduction) என்பதும், தொழில் நோக்கின் அடிப்படையில் (Vocational Centred education) கல்வி அமைய வேண்டு மென்பதும் தற்காலக் கல்விக்கோட்பாடும் முக்கிய குறிக்கோளுமாகும். இத்துறையில் இளம் தலைமுறையினரின் வழிகாட்டுதலுக்கு ''வணிகக்கல்வி'' ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்ந்துள்ளது.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது தமிழறிஞர்களின் பெரும் குறிக்கோள் இளம் தலைமுறையினரின் எதிர்காலம் வணிகத் துறைக் கல்வியிலும், அபிவிருத்தியிலும், பெரிய அளவு தங்கி உள்ளது இப் பணியில் எமது பாடசாலை நீண்டகாலம் அரும்பெரும்பணியை ஆற்றி வருகின்றது. யாழ்ப்பாண நகரத்தில் உள்ள வணிக, வர்த்தகப் பெருமக்களில் பெரும்பாலானோர் எமது பாடசாலை பழையமாணவர்கள் என்பதில் இருந்து எமது பாடசாலையின்பணி புலப்படுகிறது. இன்றைய உலகில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த வணிகக்கல்வியை ஊக்குவித்து அபிவிருத்திசெய்து மேலும் இளம் தலைமுறையினருக்கு நல்ல எதிர்காலத்தை வழிவகுத்துக்கொடுப்பது எல்லோருடைய கடமையுமாகும். அப்பணியில் எமது பாடசாலை எப்போதும் முன்னணியில் நிற்கும்.

எமது பாடசாலையின் வர்த்தகப்பிரிவு மாணவர்கள், தமக்கென ஒரு வர்த்தக மாணவர்மன்றத்தை அமைத்து இவ்வருடம் தமது கன்னி முயற்சியாக வணிக ஒளி என்னும் இம்மலரினை வெளியிடுகின்றனர். இவ்விதழைச் சிறப்பாக வெளியிடுவதற்கு உற்சாகமாக ஈடுபட்ட ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறி மீண்டும், மீண்டும் எமது வணிக ஒளி புதப்பொலிவுடன் மலரவேண்டும் என வைத்திஸ்வரனை பிரார்த்திக்கின்றேன்.

22-12-1980 எஸ். பி. பாலசுப்பிரமணியம்

வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம்



எமது மன்றக் காப்பாளரும் பாடசாலை அதிபரும்

எஸ்.பி. பாலசுப்பிரமணியம் (B.A. Hons)

அவர்கள்



எமது மன்ற உபகாப்பாளரும்
பாடசாலை உப அதிபருமாகிய
எஸ். பன்னீர்ச்செல்வம் (B.S.C.)
அவர்கள்

# வட்டாரக்கல்வி அதிகாரியின்

# ஆசியுரை

தமிழ் பேசும் வணிக பெருங்குடி மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைந்துள்ள யாழ்- வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மாணவர்கள் வணிகமலர் ஒன்றை வெளியிடுவது மட்டில்லா மகிழ்ச்சியை தருகின்றது.

இங்கு வர்த்தக பாடபோதனை நிகழ்வது ஒரு அண்மைக்கால போக்கோ அல்லது ஏற்பாடோ அல்ல. இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கல்லூரிக் கலைத்திட்டத்தில் அதன் முக்கியத்துவம் உணரப்பட்டு சிறப்பான இடத்தைப் பெற்று வருகின்றது. யாழ்-மாவட்டத்தில் வர்த்தக பாடங்களை கற்பிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து உழைத்த வர்த்தக ஆசிரிய முன்னோடி கலைப்புலவர் க. நவரத்தினத்தின் ஆசியும் ஒத்தாசையும் இக்கலைக்கல்லூரிக்கு கிடைத்தமை. இவ்வேளையில் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும்.

நாடு விழையும் அபிவிருத்தி திட்டங்கள் நன்முறையில் செயற்பட வர்த்தக துறைப்பாடங்களில் தேர்ச்சி பெற்றோரின் ஆளணி அவசியமாகின்றது. குறிப்பாக நடுமட்ட நிர்வாகத்தில் (Mioldle Management) இவர்தம் பங்களிப்பு நிறையத் தேவை எனவே. இதனைப் பெற்றோர், ஆசிரியர், மாணவர் உணர்ந்து செயற்பட்டால் நாட்டின் வேலையில்லாப் படையில் வர்த்தக பாடங்கள் பயின்றோர் நிச்சயம் இடம்பெற மாட்டார்கள்.

G C.E. (O/L) (A/L) வகுப்புக்களில் தமிழ்மொழி மூலம் வர்த்தகவியற் பாடங்களை கற்க கற்பிக்க இம்மலர் போன்ற படைப்புக்கள் நிறைய தேவை. இம்மலர் தாங்கும் உள்ளடக்கங்கள் ஓரளவு இத்தேவையை ஈடு செய்யும் என நம்புகின்றேன். மேலும் பல புதிய அம்சங்களுடன் இம்மலர் பொலிவு பெற இருப்பதை அறிந்து அகமிக மகிழ்கின்றேன். இம்மலர் வெளியீட்டின் வெற்றிக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை பாராட்டிப் போற்றி இப்பணியினை இடைவிடாது தொடர்ந்தும் செய்ய எனது நல்லாசிகள்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
23-12-1980.

எம். ஏ. லீ. ஏ. ஸலாம்.
வட்டாரக் கல்வி அதிகாரி
(வர்த்தகம்)





# மன்றப் போசகர்கள் பேசுகிறார்கள்

## வாசகப் பெருமக்களுக்கு எங்கள் வணக்கங்கள்

எமது பாடசாலையில் எங்கள் அதிபர் திரு. S. B. பாலசுப்பிரமணியம் அவர்களால் பல மாணவ மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றான வர்த்தக மாணவ மன்றத்தின் போசகர்கள் என்ற முறையில் நாம் உண்மையில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம். ஏனைய மாணவமன்ற உறுப்பினர்களையும், ஏனைய மாணவமன்ற நிர்வாகிகளையும்விட எமது மாணவமன்றங்களுக்கு முன்னோடியாக பல இன்னல்களுக்கு மத்தியில் இத்தகையதொரு சிறப்பான மலரினை வெளிக்கொணரும் பணியில் இறங்கியமை பாரட்டுக்குரியதொன்றாகும்.

உங்கள் கைகளில் தவழும் இவ்வணிக ஒளியின் சிறப்பினை நாம் கூறுவது பொருத்தமல்ல இதனை வாசகப் பெருமக்களாகிய நீங்களே வாசித்து அறிந்து கொள்வீர்கள். ஆயினும் இன்றைய காலகட்டத்தில் ஒரு பத்திரிகை அச்சுப்பிரதியாக வெளிவருவதில் உள்ள பகீரதப் பிரயத்தனம் நீங்கள் அறியாதது ஒன்றல்ல. விலைவாசி உயர்வும் பணவீக்க நிலைமைகளும் ஒரு பத்திரிகையின் பிரசவத்தை கருவிலேயே அழித்துவிடும் காலம் இது. இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் எமது மன்ற அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்புடன் இத்தகையதொரு சிறந்த அறிவுப் பொக்கிஷமாக இவ்வணிக ஒளியினை வண்ணமுறப் பிரகாசிக்க செய்வதனை இட்டு மன்றப்போசகர்களாகிய நாங்கள் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம். இம்மலருக்கு ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக அறிஞர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

திரு. எஸ். இராஜதுரை
திரு. எஸ். கே. சுந்தரலிங்கம்

வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம். 20-12-1980



# தலைவரின் தகவல்

யாழ் நகரினிலே வண்ணார் பண்ணையிலே சூரியனும், அரவமும், அன்னமும், திருக்குறளும், தாமரையும் ஒருங்கிணைந்த இலட்சனையை கொண்டிலங்கும் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில், பூகோளத்தையும் அதற்கு ஒளி கொடுக்கும் விதத்தில் ஒரு அகல் விளக்கையும் கொண்ட வர்த்தக மாணவர்மன்றத்தின் தலைவர் என்ற கோதாவில் இங்கு பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன். எமது அதிபர் திரு. S. B. பாலசுப்பிரமணியம் அவர்களது அரும் முயற்சியினாலும் திருவாளர்கள் S. இராஜதுரை S. K. சுந்தரலிங்கம் ஆசிரியர்கள் ஆகியோரின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளினாலும் மன்ற மாணவர்களின் ஒத்துழைப்பினாலும் 1980-ம் ஆண்டு ஜூலைமாதம் 11ம் திகதி அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. அம் மன்றத்திற்கு முதல் தலைவராகவும், ஏகமனதாகவும் என்னை தெரிவு செய்த அத்தனை மன்ற அங்கத்தவர்களுக்கும் என் நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் கூறுவது சாலவும் பொருத்த முடையதே.

குறுகிய கால மன்றவரலாற்றுக்குள் நாங்கள் இத்தகையதொரு மலரை அச்சுப்பிரதியாக வெளியிடுவதற்கு எமக்கு சகல வழியிலும் ஒத்துழைப்புத்தந்த வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கும் அறிஞர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் இவ் மலருக்காக சுய ஆக்கங்கள் குறிப்பாக உள்ளங்களின் உணர்ச்சிக் குமுறல்களை எழுதித் தந்த அத்தனை நண்பர்களின் பிரசுரங்களையும் பிரசுரிக்க முடியாமைக்கு மனம் வருந்துவதுடன் அப்படியான நிகழ்ச்சிக்கு காரணம் எனக்கு அப்பாற்பட்ட சக்திகள் என்பதையும் அறியத்தருகின்றேன்.

வர்த்தகத்துறையில் ஒளிவிட்டு வளர்ச்சியடையும் எமது பாடசாலையில் குறிப்பாக எமது மன்றத்தில் முதலாவது மலரை வெளியிடும் பொழுது பல பொருளாதார நெருக்கடிகளையும் பல இன்னல்களையும் எதிர்நோக்கவேண்டி இருந்தது. ஆயினும் எமது மன்ற நிருவாகிகளின் தளராத மன உறுதியும் ஒத்துழைப்பும் இத்தகையதொரு சிறந்த படைப்பை உருவாக்க உதவின.

இம்மன்றம் அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் மேன்மேலும் வளர்ச்சியடைந்து மாணவ உலகிற்கு சிந்தனை வளர்ச்சியை தருவதற்கு ஓர் வழிகாட்டியாக அமைவதுடன் பாடசாலை முன்னேற்றத்திற்கு தன்னாலான பங்களிப்பினை செய்வதுடன் வணிக ஒளி மலரினை ஆண்டுதோறும் வண்ணமுற வெளியிட வேண்டுமெனவும் எங்கள் இளவல்களுக்கு அன்புக்கட்டளை இடுகின்றேன்.

மேலும் எமது மன்றத்தின் அங்கத்தவர்கள் ஆசிரியர்கள் ஆகியோரிடம் இன்றுபோல் என்றும் ஒற்றுமை நிலவி மன்றம் எமது நிர்வாகத்தின் கீழ் சிறப்பாக இயங்கியது போல தொடர்ந்தும் சிறப்பாக இயங்க என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

19-12-1980
வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

மன்றத்தலைவர்
செல்வன் அ. அமிர்தரஞ்சன்
(வர்த்தகபிரிவு இரண்டாம் வருடம்)

---


போற்றுவார் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுவார், தூற்றட்டும் தொடர்ந்து
—செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம்
—என்றால்
எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன்
—அஞ்சேன்

---

நீங்கள் செய்யும் எந்தக் குற்றத்திற்காகவும் சந்தர்ப்பம், சூழ்நிலை என்ற பெயரைச் சொல்லி, குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்காதீர்கள். நீங்கள் செய்யும் ஆயிரம் குற்றங்களைக்கூட மற்றவர்கள் அறியாமல் இருக்கும்படி செய்துவிடலாம் ஒரு சிறு குற்றத்தைக்கூட உங்களுடைய மனச்சாட்சியிடமிருந்து மறைக்க முடியாது. அது சாகும்வரை உங்களைக் குத்திக்கொண்டே இருக்கும்.

— ஹனோர் டிபால் ஸாக்

---



# செயலாளர் அறிக்கை

வைத்திஸ்வர வித்தியாலயத்தின் வர்த்தகக்கல்வி பயிலும் மாணவர்களுடைய மன்றமாகிய வர்த்தகமாணவர் மன்றத்தின் செயலாளர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வித்தியாலயத்தின் பெயர் தொனிக்க பண்பாடுவளர ஒழுக்கம் நிறைய உண்மை துலங்கவேண்டும் என்ற பல காரணங்களை முன்வைத்து எமது அதிபரும் ஏனைய ஆசிரியர்களும தந்த நல் ஆதரவால் எமது பாடசாலையில்வர்த்தக மாணவர்மன்றம் 1980ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி தோற்றமானது 1980ம் ஆண்டின் அரையாண்டுகாலப்பகுதியில் ஆக்கபூர்வமான பணிகளை நடைமுறைப் படுத்தவேண்டும் எனத் தோற்றமான எமது மாணவர்மன்றம் பயனளிக்கத்தக்க பல விடயங்களை பயனுள்ளமுறையில் தயார்செய்து ஊக்கமும் ஆக்கமும்தந்து மாணவர் சமுதாயத்தின வருங்கால வாழ்வு வளம்பெற வாய்ப்பளித்து வந்துள்ளது.

இம்மன்றம் குறுகிய காலத்தில் நிறுவியதிட்டம் பல இதன்மூலம் பயன் பெற்றவர்கள் பலர் ஆக்கபூர்வமான பணிகளை ஆக்கி அவற்றுக்கு சிறப்பு அளிப்பதில் இம்மன்றம் கொண்ட ஆர்வம் போற்றுதற்குரியது. மன்றம் ஆக்கிய திட்டங்களையும் செயற்திறமையையும் குறிப்பிடுவதில் நான் பெருமையும் உவகையும் கொள்கிறேன்.

சிந்தனையைத் தூண்டி அறிவியலைப் பெருக்கி பரிசினைப்பெற ஆக்கிய திட்டம்பல அவற்றுள் குறுக்கெழுத்துப் போட்டித் திட்டத்தை அமுலாக்கி அதனை சிறப்புற நடாத்தி இரு ஆசிரியர்களையும் ஆலோசகரையும் தெரிவுசெய்து வெற்றி எனும் வீரப்பாதைக்கு காலடி எடுத்து வைத்துள்ளது அத்தோடு நின்றுவிடாது அல்லும்பகலும் அயராதுழைத்து! கருத்தினை நிறைத்து இளமதி கையெழுத்துப் போட்டியில் பங்குபற்றி பத்திரிகை உலகில் வணிக ஒளி வீசியது வீசுகின்றது.

நேசமுடன் பல மாணவர்கள் முன்நின்று உழைத்து இத்தகையதோர் பணியை சித்தமுடன் செய்து நின்றனர் எனும்போது நாம் நன்றியும் ஆனந்தமும் கொள்ளவேண்டியவர்களாகவே உள்ளோம்.

மன்றத்தில் கிழமையில் ஓர் தடவை நடைபெறும் பொதுக் கூட்டங்களில் பல பிரமுகர்களையும் ஆதரவாளர்களையும் அழைத்து கருத்துக்களைப் பெற்று வந்துள்ளது.

1980ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் தினம் யாழ் மத்திய கல்லூரியில் சிங்க சமாசத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது அவ்விழாவில் ஒழுங்குசெய்யப்பட்ட மாதிரி ஐக்கியநாட்டுப் பொதுச்சபைக் கூட்டத்தில் எமதுமன்றச் செயலாளர் குறுக்கெழுத்துப் போட்டி ஆசிரியர் ஆகியோர் பங்கு பற்றி யப்பான் நாட்டுப் பிரதிநிதிகளாக கலந்துகொண்டு வல்லரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள வீற்றோபவர் பற்றி பேசினர்கள் அவர்களுக்கு பாராட்டுக்கிடைத்தது இதனால் மன்றமும் நமது பாடசாலையும் பெருமகிழ்ச்சியுறுகிறோம்.

அப்படியிருந்தும் பாடசாலைவாழ் மாணவர்களிடையே மறைந்துகிடக்கின்ற இயல்பூக்கங்களை பெறுவதில் இது கொண்ட ஆர்வம் கூறும் தரத்தோ!

கவியரங்கம் கருத்தரங்கம் பேச்சுக்கள் பாட்டுக்கள் பலவற்றை தொகுத்தளித்து வருகிறது.

இத்தோடு நின்றுவிடாது முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் எனும் தமிழ் மூதாட்டியின் வாக்குக்கு இணைந்து இது போன்ற ஆக்கபூர்வம் நிறைந்த பயனுள்ள பணிகளில் மலர்வெளியீடு செய்தலும் ஒன்றாகும். அதன்பிரகாரமாய் பல எதிர்ப்புக்களையும் தடைகளையும் சந்தித்தபோதும் சிந்தனையுடன் செயற்பட்டு வந்துள்ளது மன்றத்தின் நிர்வாகத்தாலும் அது தொடர்ந்து வாழவேண்டும் என்ற உள் உணர்வாலும் இத்தகையதோர் பணியினை செயற்படுத்தி வெற்றிவாகை சூடி வெளிவருகின்றது ஒவ்வொரு மாணவர் மனதிலும் மன்றத்தின் நினைவு அழியாத நிலையினைப் பெற ஆக்கமும் ஊக்கமும்தந்த காப்பாளருக்கும் அவ்வப்போது அரிய கருத்துக்களை கூறிவைப்பதில் சலியாத போஷகருக்கும் இதன் வளர்ச்சியினைக்கண்டு பெருமையும் ஆனந்தமும் கொள்ளும் ஏனைய ஆசிரியர்கட்கும் செயற்திறமைவாய்ந்த மன்ற நிர்வாகிகளுக்கும் குறுக்கெழுத்துப்போட்டி, கையெழுத்துப்பத்திரிகை, திறமைவாய்ந்த செயல்வீரர்கட்கும் அங்கத்தவர்கட்கும் எனது நன்றியை தெரிவிப்பதோடு மலர் மலர அரும்பணியாற்றிய அன்பர்கட்கும் மன்றத்தின் பணிதொடர்ந்து பல்லாண்டு வாழ பணிபுரிவர் என்ற நம்பிக்கையோடு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

மன்ற கௌரவ செயலாளர்
செல்வன் ஆ. ந. பாலகணேசன்
(வர்த்தபிரிவு இரண்டாம் வருடம்)

# "வணிக ஒளி"

— ஆக்கம்: செல்வன். தா. பாலகணேசன் —
இரண்டாம் வருடம் வர்த்தகப்பிரிவு

வருகிறது வருகிறது வணிகஒளி
வர்த்தகமாணவர் மன்ற வரப்பிரசாதமாய்
தருகிறது தருகிறது வணிகஒளி
வண்ணைதனில் இதமான ஒளி வீசிடவே.

தத்தும் குழவியின் மழலை மொழியிலே
தரமாய் கட்டுரை கவியனைத்தும்
தம்பியர் தங்கையர் படைப்புடனே
தண்ணொளி வீசும் வணிக ஒளி.

பருகுது பருகுது பார் ஒளியை
பகலவன் சாய்ந்திது மாய்ந்திடவே
பெருகுது பெருகுது புது ஒளியாய்
புதுப்பூம் புனலாய் பாய்ந்திடவே

பத்தும் பலதுமாய் ஆக்கங்கள்
பள்ளி மாணவர் தந் திட்டார்
துள்ளிவரும் அவர் சிந்தனைகள்
துணிந்தே சேர்த்திட்டோம் எம் ஒளியில்.

# வருவாய் வணிக ஒளியே

செல்வி. எஸ். ஸ்ரீரஞ்சினி
முதலாம் வருடம் வர்த்தகப்பிரிவு

வணிக ஒளியே வா. வா. வா
வண்ணையின் விழியே வா. வா. வா
கண்ணைக் கவரும் எழிலுடன்
கருத்தினை நிறைக்க வா. வா. வா

அறிவின் ஒளியே வா. வா. வா
அவனியின் நிதியே வா. வா. வா
பவனிப் புரவிகள் பாய்வதுபோல்
பைந்தமிழ் நதியே வா. வா. வா

வர்த்தக ஒளியே வா. வா. வா
வித்தகர் படைப்பே வா. வா. வா
வித்தியாலய மாணவர் தம்
விந்தைகள் பொழிய வா. வா. வா

---

ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு புத்தகம் இப்புத்தகங்களில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களும் உண்டு கழித்துவிட வேண்டிய விடயங்களும் உண்டு.

—எஸ். போஸ்—

---

உயிரை எடு மறவன் பொறுப்பான்
மானத்தைப் பழிக்காதே
நாவை அறுப்பான்

---

# முன்னேற்றப் பாதையில்.....

ஆக்கம்: செல்வன்: அ. அமிர்தரஞ்சன்
(இரண்டாம் வருடம் வர்த்தகப்பிரிவு)

மன்றத்தின் வயதோ ஏழுமாதம்
பங்கமின்றி வந்த இதழ் இது ஒன்று
இங்கிடையில் வந்ததடை பலநூறு
இதற்கிடையில்...........

மலர்ந்தது புதுவருடம்
உதித்தது வணிகஒளி
சென்றபல ஆண்டுகளில்
பல்கலைகள் பயின்றென்ன
பயனற்று பல்லிளித்து
நிற்கவைத்தார் நடுத்தெருவில்
நமதருமை நண்பர்களை
ஆனாலும்............

மலர்வெளியீடுதன்னை கச்சிதமாய் நடத்திடவே
நிதியில்லை என்றெண்ணி ஏங்குகையில்
கதிஉண்டு என்று சொல்லி
வணிகர்களை நாடிடவேநம் தோழர்
பத்துநூறு ஆயிரமாய் சேர்த்திட்டார்.
நல்லமன்றம் நாம் வளர்க்க
நல்கிடுக உதவிஎன்றால்
இக்காலத்தில் உதவிதர யார்வருவார்
நல்லமன்றம் வளர்த்திட
நாம் வருகிறோம் என்றுசொல்லளவில்
நில்லாமல் செயலளவில் உதவிசெய்த
வல்லநம் தோழர் அனைவருக்கும்
நன்றி பல............

அத்தோடு...........
வர்த்தக மன்ற வளர்ச்சியிலே
அங்கத்தினர் பெரிதுவக்க தோன்றும்
பெருமைதன்னில் பாடசாலை தலைதூக்க
ஆண்டுகள் பலகண்டு மலர்கள் பல வெளியிட்டு
மன்றம் நீ முன்னேற்றப் பாதையிலே
போவாய் என வாழ்த்துகிறேன்.

# தமிழ் இலக்கணப் பாரம்பரியத்தில் நாவலர்

— கலாநிதி. அ. சண்முகதாஸ் —
(பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பாரம்பரியம் பல்வேறு துறைகளை உள்ளடக்கியது. தமிழியல் என்பது தமிழ்மொழி பேசுவோர்களுடன் தொடர்புறக்கூடிய எல்லாத் துறைகளையும் உள்ளடக்குவதாகும். இலக்கணத்துறை அத்தகைய துறைகளுள் ஒன்றாகும். இலக்கணம் என்ற சொல்லினைக் கேட்டவுடன் தமிழ் மக்களில் ஒருசாரார் அது தம்முடைய துறையெனச் சொந்தம் கொண்டாடுகின்ற வழக்கம் காலங்காலமாக எம்மிடையே ஏற்பட்டு வந்துள்ளது. ஆனால், உண்மையிலே எந்த மொழியினைப் பேசுகின்றவனும் அந்த மொழியின் இலக்கணத்தை உட்கொண்டவனாகவே வாழுகின்றான்; பேசுகின்றான் என்பதனை நாம் எண்ணுவதில்லை. நாம் பேசுகின்ற அல்லது எழுதுகின்ற மொழியினைப் புறநிலையாக வைத்து அதனைப் பகுப்பாய்வு செய்து அதன் இய்ல்புகளை எடுத்துக்கூறுமிடத்து அவ்வியல்புகளே அம்மொழியின் இலக்கணங்களாக அமைகின்றன என்பதனை நாம் உணர்வதில்லை.

இலக்கணம் என்பது ஒருவகையான பாடநெறி என்ற எண்ணமே எம் மாணவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய மரபிலிருந்து எமது தமிழ் இலக்கணகாரர் எவராவது விலகி உண்மைநிலையினை விளக்கி உள்ளார்களா என்னும் வினாவுக்கு எதிர்மறையாகவே மறுமொழி அமையும். "இலக்கணச் சுருக்கம்", "நன்னூற் காண்டிகை உரை" விளக்கக் குறிப்புக்கள் ஆகியன எழுதிய நாவலரும் இதற்கு விதிவிலக்கல்ல என்றே கூறலாம்.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுக்கும் மரபே எம்முடைய தமிழ் இலக்கணப் பாரம்பரியமாகும். எள்ளில் இருந்துதான் எண்ணெய் வரும் என்பது எம்மவரின் எண்ணம். என் என்பது என்ன என்று கேட்டால், அது இலக்கியம் என்பது அவர்களுடைய ஆட்ட அசைவற்ற நம்பிக்கை. தமிழ் மக்களுடைய சாதாரண பேச்சும் எள்ளாகலாம் என்பதைத் தமிழ் இலக்கணகாரர்கள் ஏன் தீவிரமாகச்' சிந்திக்கவில்லை என்பதை நாம் இவ்விடத்திலே மனதின் கொள்ளவேண்டும். பல நூற்றாண்டுகள் கொண்ட ஒரு இலக்கிய பாரம்பரியமுடைய எமது மொழியினை ஒட்டி இம்முறையிலே நாம் சிந்திக்கலாம். ஆனால் அத்தகைய பாரம்பரியம் இல்லாத ஒரு மொழிக்கு இலக்கணம் என்று கூறும்போது அம்மொழியின சாதாரண பேச்சுவழக்கின் இயல்புகளைக் குறிப்பதாகவே அது அமையும். ஆனால் தமிழ்மொழியைப் பொறுத்தவரையிலே, அம்மொழி உலகிலுள்ள ஏனைய சில மொழிகளைப் போன்று (அரபி, துருக்கி மொழிகளைப் போல) "இரு வழக்குப் பண்பினை" உடையதாக அமைகின்றது. இப்பண்பு இன்றைய தமிழ்மொழியிலே நன்கு உணரப்பட்டதாயின் முற்காலத் தமிழ்மொழியிலே இப்பண்பு உணரப்படவில்லையா? பழந்தமிழ் இலக்கணகாரர்கள்கூட 'வழக்கும் செய்யுளும்' என்று கூறுவதில் இருந்து அப்பண்பு உணரப்பட்டுள்ளது என்பதுபெறப்படுகின்றது. ஆனால் பல்வேறு காரணங்களுக்காக, செய்யுள் வழக்கினையே தமிழ் இலக்கணகாரர் தம் இலக்கணங்களுக்கு மூலமாக கொண்டுள்ளனர். அதனால், செய்யுள் வடிவிலமைந்த இலக்கியங்களுக்கே அவர்கள் இலக்கணம் வகுத்தனர். ஒலி அதிகாரத்திற்குப் பதிலாக அவர்களுடைய இலக்கணங்களிலேயே எழுத்ததிகாரம் அமைந்தது ஆச்சரியப்படுவதற்கில்லை. இத்தகையதொரு இலக்கண மரபினையே ஆறுமுகநாவலரும் பின்பற்றினார். அவருடைய இலக்கணச் சுருக்கம் இத்தகைய இலக்கண மரபின் சுருக்கமாக அமைந்துள்ளது.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் அமைக்கும் மரபு தமிழ் இலக்கணகாரரிடையே வேரூன்றி இருந்த காரணத்தினாலே தமிழ் இலக்கணப் பாரம்பரியத்திலே இன்னொரு பண்பும் தலைதூக்கிவந்துள்ளது. அதாவது, இலக்கியங்களிற் கையாளப்பட்டுள்ள மொழி, செய்யுள் வடிவம், இலக்கிய வடிவம், பொருள் ஆகியவற்றை விவரணம் செய்வதற்கு இலக்கணம் என்னும் கோட்பாடு உருவானதாகும். இலக்கணம் எனும் சொல்லினை அவர்கள் எமது மொழியின் ஒலி, எழுத்து, சொற்றொடர், சொற்பொருள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே காணப்படும் பொதுப் பண்புகளையுஞ் சிறப்புப் பண்புகளையும் விவரணம் செய்வதற்காக மாத்திரம் உபயோகிக்கவில்லை. மொழி பற்றிய ஆய்வினையும் இலக்கியம் பற்றிய ஆய்வினையும் ஒன்றாக்கி நோக்குகின்ற போக்கே எமது தமிழ் இலக்கணப் பாரம்பரியத்தின் போக்காக அமைந்துவந்துள்ளது. இத்தகைய போக்கு மேலைத்தேசத்திலும் மொழியியல் என்னும் அறிவியல்துறை தோன்றுவதற்கு முன்னர் அவர்களுடைய இலக்கணப் பாரம்பரியத்தின் போக்காகவும் அமைந்திருந்தது. தமிழ் மொழியிலே இப்போக்கின் காரணமாக மொழி பற்றிய ஆய்வு எல்லாம் இலக்கியப் பொருளை அறிதற்கான கருவியை எண்ணும் எண்ணம் இன்றுவரை நிலவி வந்துள்ளது இவ்வெண்ணம், மொழி இலக்கியத்துக்குக் கருவியாவது ஒருபக்கமும், சமய சிந்தனைகளுக்குக் கருவியாவது இன்னொரு பக்கமுமாக வளர இடமளித்தது. எழுத்துச் சொற் கருவியாகப் பொருள் உணரப்படும் என்னுமிடத்துப் பொருள், இலக்கியப் பொருள் சமயப் பொருள் என இருவகையாக நோக்கப்பட்டது. உரைகாரரிலே பெரும்பாலானோர் இலக்கியப் பொருளையே கொண்டனர். ஆனால் வைதீக, சமயநெறி வந்த தமிழ் இலக்கணகாரர் பொருள் என்பது வீடுபேறே எனக் கொண்டனர்.

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித் திறத்தின் முட்டறுப்பானாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபெறும்"

என்னும் பாடல் இக்கோட்பாட்டினை நன்கு தெளிவுறுத்துகின்றது. இக்கோட்பாடுடையோர்களின் நியாயம் எத்தகையது என்பதற்குச் சபாபதிநாவலரின் 'திராவிடப்பிரகாசிகை'யிலிருந்து தரப்படும் நீண்ட பகுதி விளக்கமளிக்கின்றது;

"எழுத்துஞ் சொல்லும் ஆராய்ந்தார் அவ்வுணர்ச்சிக் கருவியாகப் பொருளாராய்ந்து வீடுபேற்றுறுதிப் பயன் தலைக்கூடற்பாலர் என்பதொக்குமன்! அவ்விழுப்பமுடைய பொருநூல்தாம் இறைவன் அருளிச்செய்த முதனூல்களும் அவைபோல்வனவாம் மெய்நூல்களுமேயாம். அவற்றின்கணன்றேல் தத்துவம் ஆராயுமாறும், பொய்ப் பொருள்களின் வேறாக மெய்ப் பொருள் காணுமாறும், வீடு தலைக்கூடுமாறும், வீடுபேற்றிலக்கணமும் கூறப்பட்டன. தொல்காப்பியப் பொருளதிகாரம் உலகியல் வழக்குரைப்பதொன்றாதலின் அதனாராய்ச்சியானே வீடுபேற்றுறுதிப்பயன் தலைகூடுமாறு யாங்ஙனமெனின் —நன்று வினவினாய்! வீடுபேறடைவிக்கும் விழுப் பொருள்நூல் இறைமுதற்கடவுள் அருளிச் செய்த முதல்நூல்களும் அவ்வியல்புடைய மெய்ந்நூல்களும்" என்பது நன்மக்களெல்லார்க்கும் ஒப்பமுடிந்ததேயாம்.

இவ்வாறு மொழியாராய்ச்சி ஒரு கருவி நூல் ஆய்வு முயற்சி என்பது தமிழ் இலக்கணப் பாரம்பரியத்திலே நன்றாக வேரூன்றி வந்துள்ளதொன்றாகும். அதற்கு ஆறுமுகநாவலரும்விதிவிலக்காக அமையவில்லை. எழுத்தையுஞ் சொல்லையுஞ் சொற்றொடரையும் உள்ளடக்கிய மொழி இலக்கணம் கருவிநூல். எனவே அவராலும் கொள்ளப்பட்டுள்ளது இலக்கணச் சுருக்கத்தில்.

"இலக்கண நூலானது உயர்ந்தோர் வழக்கத்தையுஞ் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுவதற்கும் பேசுதற்கும் கருவியாகிய நூலாம்"

என்னும் முதல் வாக்கியம் அவருடைய எண்ணக்கருத்தினை நன்கு புலப்படுத்திவிடுகின்றது. ஆனால் நாவலர் இலக்கணத்தைக் கருவி

நூலாகக் கொண்டபோதிலும், அக்கருவியின் பயன் பற்றிச் சபாபதிநாவலர் தன்னுடைய நூலிலே கூறியிருப்பதுபோல விதித்துக்கூற முய்ன்றாரில்லை. அத்துடன் எழுத்துஞ் சொல்லும் கருவி நூலெனக் கொண்ட தமிழ் இலக்கணகாரர் பலர் யாப்பினையும், பொருளினையும் தம்முடைய இலக்கணங்களின் அங்கங்களாகக் கொண்டதுபோல் நாவலர் கொள்ளவில்லை. அது ஒருவகையிலே தமிழ் இலக்கணப் பாரம்பரியத்திலிருந்து நாவலர் சிறிது விலகிச்செல்கிறாரென்பதை உணரவைக்கின்றது. குறிப்பாக வைதிக சமய இலக்கண மரபிலிருந்து இது வேறுபடுகின்றது. இலககணமென்பது "எழுத்து, சொல், தொடர்மொழி ஆகிய மூன்றினையும் கொண்டமைவது" என்றே நாவலர் வரையறுத்துள்ளார். இவ்வாறு வைதீக சமய இலக்கணச் சிந்தனைகளினின்று நாவலர் வேறுபட்டதை மாதவச் சிவஞானயோகிகள் வழிவந்தவரும், நாவலர் மரபுவழி வந்தவருமான சபாபதிநாவலர் விரும்பவில்லைப்போலும்; அதனால்தான் தன்னுடைய நூலிலே இலக்கண மரபினை விளக்கமாக எழுதி எல்லா இலக்கண நூல்களையும் வரிசைப்படுத்தும் அவர் 1874ல் வெளியாகிய இலக்கணச் சுருககத்தினைக் குறியாது விட்டார்போலும். (திராவிடப் பிரகாசிகை) 1899ல் வெளியிடப்பட்டது.

இலக்கணம் என்பது தமிழ்ப்பாரம்பரியத்திலே வெறுமனே மொழி ஆய்வை மாத்திரம் சுட்டிநிற்கவில்லை என்பதனை முன்னர் குறிப்பிட்டோம். இலக்கணம் என்பது எழுத்து, சொல், யாப்பு, பொருள், அணி எனும் 5 பகுதிகளையும் கொண்டமைய வேண்டுமென தமிழ் இலக்கணக்காரரிற் பெரும்பாலார் கருதிவந்துள்ளனர். இலக்கணமென்பது எழுத்து, சொல் பற்றிக் கூறுவதே எனக் கருதி வகுக்கப்பட்ட நூல்களைக்கூட இத்தகைய பாரம்பரியத்திற் கேற்ப மாற்றியமைக்கவும் முயன்றனர். உதாரணமாக நன்னூல் இலக்கணம் எழுத்து சொல் இலக்கணங்கள் கூறும் நூலாகவே எமக்குக் கிடைத்துள்ளது பல உரைகள் கண்ட நூல் இதுவாகும். இதற்கு யாரோ ஒருவர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார். இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரமாக விளங்கும் அப்பாடல் யார் இயற்றியது என்று தெரியவில்லை" என ஆறுமுகநாவலர் ஓர் அடிக்குறிப்புக் கொடுத்துள்ளார் இப்பாயிரத்திலே

"அரும்பொருளைந்தையும் யாவரும் உணர" என்றொரு அடி இடம்பெறுகின்றது இதனால் நன்னூலகர் ஐந்திலக்கணங்களையும் வகுத்தார். அவற்றுள் யாப்பு, பொருள், அணி ஆகியன மூன்றும் பிற்காலத்திலே இறந்துபட்டன என்று கூறமுற்பட்டனர் இத்தகைய கருத்துக்கு நன்னூலில் எவ்வித ஆதாரமும் இல்லை. அத்துடன் நன்னூல் எழுதப்பட்டபோதே பாயிரமும் எழுதபபட்டதெனக் கூறுவதற்குமில்லை. இது ஐந்திலக்கணத் தமிழ்ப் பாரம்பரியத்துக்குள் நன்னூலை அடக்க எடுத்த முயற்சியேயாகும். பிற்காலத்திலே உரையிலே இலக்கணச் சுருக்கங்கள் எழுதிய சிலரும் இவ் ஐந்திலக்கணப் பாரம்பரியத்தினின்று விடுபடவில்லை. விசாகப்பெருமாளையரின் இலக்கணச் சுருக்க வினாவிடை ஐந்திலக்கணச் சார்பானது. இத்தகைய ஐந்திலக்கணப் பாரம்பரியத்திலிருந்து ஈழத்து நாவலா சிறிது விலகிச் செல்வதைக் காணலாம். நாவலர் நன்னூல் இலக்கணத்தினை இலகுவான வசன நடையிலே தமிழ் மக்களுக்கு அளிப்பதற்கு எடுத்த முயற்சியின் விளைவே இலக்கணச் சுருக்கமாகும். நன்னூல், ஐந்திலக்கணம் கூறியது என்ற கருத்தினை நாவலர் முற்றாக நிராகரித்துள்ளார். அத்துடன் இலக்கண நூலொன்றின் அமைப்பு என்ன என்பதை

"அந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர்மொழியதிகாரம் என மூன்றதிகாரங்களாக வகுக்கப்படும்"

என்று அவரே இலக்கணச் சுருக்கத்தில் எடுத்துக் கூறியுள்ளார்.

இலக்கணச்சுருக்கம் என்ற பெயரிலே நாவலருக்கு முன்னர் விசாகப் பெருமாளையர் ஒரு நூலினை எழுதியிருந்தபோதிலும் நாவலருடைய இலக்கணச் சுருக்கம் பல்வேறு வகைகளிலே சிறப்புற்றதாக திகழ்கின்றது

1. விசாகப் பெருமாளையரின் இலக்கணச் சுருக்க வினாவிடை ஐந்திலக்கணப் பாரம்பரியத்து நாவலரின் நூல் அத்தகையதில்லை யென்பதை முன்பு குறித்துள்ளோம்.

2. தன்னுடைய காலவழக்குகளை குறிக்கும் விசாகப்பெருமாளையர் முன்னையோர் கூறியவற்றுட் காலத்துக் கொவ்வாதனவற்றை தள்ள முயன்றாரில்லை ஆனால் நாவலரோ தொல்காப்பியரும் நன்னூலாரும்குறிப்பிட்ட சார்பெழுத்து, பிறபபியல, இயற்சொல், திரிச்சொல், திசைச்சொல், வடசொல் என்னும் சொற்பாகுபாடு ஆகியனவற்றை சில காரணங்கட்காக தன்னுடைய இலக்கணச் சுருக்கத்திலே குறியாது விட்டார் நாவலரின் இலக்கணச் சுருக்கத்தின் சிறப்புப்பற்றி "ஈழத்து இலக்கண முயற்சிகள் என்னும் கட்டுரையிலே பண்டிதர் க. வீரகத்தி பின்வருமாறு குறிப்பிட்டார் "நாவலரோ அதனையும் தனி அதிகாரமாக்கி எழுத்ததிகாரம், சொலலதிகாரம், தொடர்மொழி அதிகாரம் என 3 அதிகாரம் கண்டு இலக்கணக் கருத்துக்களை தெளிவும், திருத்தமுமான வசன நடையிலே முதன்முதலாக எழுதினர். சூத்திர யாப்பில் எழுந்த நூல்களிலே தொல்காப்பியத்துக்கு எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு மதிப்பு வசன நடையில் அமைந்த நூல்களில் இதற்குமுண்டு"

இப்பொற்றிவாய்ந்த இந்நூலினை சுருக்கம் என்று கூறுதல் பொருத்தமோ என்பது சிந்திக்கற்பாலதாகும். நாவலருடைய இலக்கணச் சுருக்கத்தை படிக்குமிடத்து அது கொள்ளவேண்டியவற்றை கொண்டு தள்ள வேண்டியவற்றை தள்ளி நன்னூல் இலக்கணத்தின் முடிவடிவினை வசன நடையிலே தந்துள்ளது என்று கூறின் தவறாகாது அப்படியிருக்க நாவலர் தன் நூலைச் சுருக்கம் என்றார்? காண்டிகை உரைகளும் விருத்தி உரைகளும், தெளிவுரைகளும் எழுதி சூத்திரயாப்பிலமைந்த இலக்கண நூல்களை பெருப்பிப்பதுபோன்று தன்னுடைய நூல் பெருப்பிக்கப்படவேண்டிய தொன்றன்று என்று கருதி சுருக்கம் என்று குறிப்பிட்டாரோ தெரியவில்லை.

நாவலருடைய இலக்கண முயற்சிகளை மூன்றுவகையாக பாகுபாடு செய்யலாம்.

1. பண்டைத்தமிழ் நூல்கள் அழிந்து போகாவண்ணம் பேணிப் பாதுகாக்கும் பரந்த எண்ணத்தினை இலக்கண நூல்களை புதுப்பித்து அவற்றை அழியவிடாமல் காத்தல் வேண்டுமென்பது ஓர் அம்சமாக அமைந்தது அந்தவகையில் 1851ம் ஆண்டு நன்னூல் விருத்தி உரையினை நாவலர் முதன்முதலாக அச்சுவாகனமேற்றி பதிப்பித்தார்.

2 ஏற்கனவே இருந்த நன்னூல் உரையினைப் புதுப்பித்தது நாவலரின் இலக்கண முயற்சியின் இரண்டாவது வகையாகும். 1880ல் வெளியாகிய ஆறுமுக நாவலரின் நன்னூல் காண்டிகை உரைப்பற்றியும் சபாபதி நாவலர் தன்னுடைய நூலிலே குறிப்பிடாது விட்டுள்ளதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேம்

3. நாவலரின் 3 வது வகையான இலக்கண முயற்சி புது நூல் ஆக்கமாகும். அதன் விளைவே இலக்கணச்சுருக்கம்.

நாவலரின் இலக்கண முயற்சிகளின் நோக்கம் என்ன என்பது பற்றிய அவரது சில கூற்றுக்களாலும் அவருடைய நூல்களை பதிப்பித்தோர் கூற்றுக்களாலும் ஓரளவு உணரக்கூடியதாகவுள்ளது. நாவலரின் நன்னூற் காண்டிகை உரையின் 23 வது பதிப்புரையிலே

"மாணவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடியவாறு அவவுரைகளில் அவர்களுக்கு விளக்கவேண்டுவனவற்றை மேலும் விளக்கியும், அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய குறிப்புகள் பல கூட்டியும், பகுபதமுடிபுசில காட்டியும் சொல்லிலக்கண சூசி சேர்த்தும், மாணவர்க்கு இன்றியமையாத அப்பியாசங்களை தொகுத்தும் நாவலர் பெருமான் புதிய முறையில் காண்டிகை உரை ஒன்றை எழுதித் தமிழகத்திற்கு அச்சிட்டு உதவினர்கள்"

என்று பதிப்பாசிரியர் கூறியுள்ள கூற்று நாவலருடைய இலக்கணமுயற்சியின் நோக்கினை நன்கு வெளிப்படுத்துகின்றது. பாடசாலைகளைத்தும், இலவசக்கல்வி வழங்கியும் கல்வித்தொண்டுபுரிந்த நாவலர் இன்

றைய பாடவிதான சபையினர் செய்வது போல பாடப்புத்தகங்கள் எழுதியும் பணி புரிந்தார் மாணவர்களை மனதிற்கொண்டே அவரது இலக்கண நூலாக்கமும் நடை பெற்றது என்பது இதுறை பெறப்படுகின்றது நாவலரே தனது காண்டிகை உரையிலேயே

''இலக்கணம கற்றவர், இலக்கியத்தில் அவ்விலக்கணம் அமைந்து கிடக்குமுற மையை ஆராய்நது விதியோடு கூறப் பயிலல் வேண்டும். அது செய்யப் பயிலாவிடத்து இலக்கண நூற்கல்வியால் ஒரு பயனும் இல்லை.''

எனும்,

''பேசும் பொழுதும் எழுதும் பொழுதும்' இலக்கணப் பிழையறப் பேசவும் எழுதவும் பழகல் வேண்டும். பிழைபடப் பேசினும் எழுதினும் இலக்கணக் கல்வியால் பயன் ஒரு சிறிதுமில்லை''

என்றும் கூறிச் சென்றுள்ளார். நவீன மொழியியல் நோக்கிலே இவை ஒரு வகையில பொருத்தமற்ற கூற்றுக்களாக அமையினும், நாவலர் இலக்கணக் கல்வியிலே எத்தனை உண்மையான ஈடுபாடு கொண்டு இருந்தார் என்பதனை அவை எமக்கு தெளிவுறுத்துகின்றன அத்துடன் இலககணக் கல்வியின் பயன் வீடு பேறடைதல் எனும் தமிழ் இலக்கண பாரம்பரியத்தின் ஒரு சார்ராரின் கோட்பாட்டினைத் தள்ளி இலக்கணக் கல்வியின் பயன் இலக்கியத்தை பயிலுதல், இலக்கணப் பிழையற எழுதுதல் பேசுதல் ஆகியபயன்களை விளைவிக்கும் என்னும் கருத்தினையும் நிலை நாட்டியுள்ளார்.

---

ஒரு மனிதன் கூறுகின்றான் நான் காலையில் எழுந்ததும் முதலில் கடிகாரத்தையு' பின்னர் நாட்காட்டியையும் (கலண்டர்) பார்ப்பேன் என்றார் அதனைக் கேட்ட மறுமனிதன் நான் கடிகாரத்தை மட்டுமே பார்ப்பேன் ஏனெனில் எனது கடிகாரத்தில் கலண்டரும் உண்டு என்றான். அதற்கு முதலாம் மனிதன் கூறினான் நீர் உமது கடிகாரத்தில் நேரத்தையும், நாளினையும், திகதியையும் அறிந்து கொள்வீர். ஆனால் நானோ கடிகாரம் மூலம் நேரத்தையும், நாட்காட்டி மூலம் நான் தேதியையும் பார்ப்பதுடன் வாழ்க்கைக்கு வேண்டிய பொன் மொழிகளையும் அறிந்து கொள்கிறேன்.

— எஸ். சி. போஸ் —

---

உலகில் பாரமான பொருள் எது என்று என்னிடம் கேட்டால் நான் கடிதம் என்றே பதில் கூறுவேன். கடிதம் எத்தனையோ மனிதர்களின் இதயச் சுமைகளைத் தாங்கி வருவதனால் அதுவே உலகில் மிகவும பாரமான சுமையாகும். இதனைத் தூக்கிவரும் தபால்காரனே உண்மையான சுமைதாங்கி ஆவான்.

— எஸ். சி. போஸ் —

---

# அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

செல்வி: எஸ். கேதாரகௌரி 10-ம் வகுப்பு

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பது நமது ஆன்றோர் வாக்கு இவ்வாக்கினை மாணவர்களாகிய நாமும் மனதிற் பதித்துக் கொள்ள வேண்டும். இவ்வாக்கினை உலகுக்குத் தந்த தமிழ் சமூகமே இன்று இவ்வாக்கினை மறந்துவிட்டதோஎன்ற ஐயம், தோன்று கின்றது.

கடும்புயலில் கடல்நடுவில் கதியற்ற கலம் போல தமிழினம் தத்தளிப்பதனைக் காணும் தோறும் இவ்வாறே எண்ணத் தோன்று கின்றது. நமது கையில் உள்ள விரல்கள் ஒவ்வொன்றும் தனித் தனியே நான்தான் பெரியவன், நான்தான் பெரியவள் எனக் கூறிக் கொண்டு ஒன்றோடு ஒன்று முரன்படத் தொடங்கினால் கையின் கடமைகள் எங்ஙனம் சரிவரச் செய்ய முடியாதோ அங்ஙனம் எமது சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒற்றுமையற்று, சுய நலம் தலை தூக்க, வர்க்கபேதங்களும், வகுப்புபேதங்களும், தலைவிரித்தாடும் வேளையில் அடம்பன் கொடி போன்று திரண்ட தொரு சமூக அமைப்பினை நாம் நம்மிடையே காணமுடியாது. மாறுகத் தொட்டவுடன் ஒடியும் தடிபோன்றதாகவே பலமிழந்து சமுதாயம் காட்சிதரும்.

எமது தமிழ் சமூகத்தில் இரு வேறுபட்ட சாராரைக் காணலாம். ஒருசாரார் எப்பொழுதும் பழம் பெருமையே தொடர்ந்து பேசிக் கொள்வார்கள். இவர்கள் ஆக்கபூர்வமான சிந்தனைகள் அற்று அரைத்தமாவையே அரைக்கும் நிலையில் நிற்பார்கள். ஒரே இடத் தில் இருந்து செக்குமாடுகளாகச் சுற்றுவார்கள்.

இவர்களைவிட மற்றுமொரு சாரார் எம்மால் ஆவது ஒன்றுமே இல்லை எம்மால் எதையும் சாதிக்கமுடியாது மேற்கு நாட்டவனே மேலான வன் பிற நாட்டுச் சரக்கென்றால் அனைத்தும் உயர்வானது. எனத்தம்மைத்தாமே தாழ்த்தும் தன்னம்பிக்கையற்ற கூட்டமொன்று. இப்படியாகத் தொடர்ந்து பழமை போற்றுபவராகவோ, அன்றி எம்மால் எதுவுமே சாதிக்கமுடியாது என்று அலுத்துக்கொள்பவ ராலோ எமது சமூகத்திற்கு நன்மையில்லை. மாற்றான் தோட்டத்து மல் லிகைக்கும் மணமுண்டு என்று அறிஞர் அண்ணா கூறினாரே தவிர மாற் றான் தோட்டத்து மல்லிகைக்கே மணமுண்டு என்று கூறவில்லை நம்மில் சிலர் நம்வீட்டு மல்லிகைக்கு மணமில்லை ஏன் அது மல்லிகையே இல்லை என்று வாதிக்கும் போலித்தன்மை கொண்டவர்களும் எம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர். இது எமது சமூகத்திற்கு நல்லதல்ல.

நமது சமூகத்தில். திறமைசாலிகள், அறிவாளிகள், அரசியல் மேதைகள், இலக்கிய விற்பன்னர்கள், சமயச் சான்றோர்கள்எனப் பல துறை சார்ந்த துறை போகிகள் இருக்கின்றனர். ஆயினும் அத்தகையோரின் பணிகளும் சேவைகளும், அப்பழுக்கற்றுக் காணப்படாமையினாலேயே, எமது சமூகம் உலக அரங்கில் உன்னதநிலையை அடைய முடியாது இருக்கின்றது குறுகியவகுப்புவாதங்களும் சுயநலப்போக்கும் சமூக ஒற்றுமைக்கு சாவுமணியடிக்கின்றன.

தியாகிகள் எனப்படுவோர் யார் என வினவினால், எதுவித பிரதிபலனும் எதிர்பாராமல் தனது உடல், பொருள், ஆவி, அனைத்தையும் தான் கொண்ட இலட்சியத்திற்காகத் தத்தம் செய்பவனே தியாகி ஆவான். ஆனால் இன்று எமது தமிழ்ச்சமூகத்தில் திடீர்த் தியாகிகள் தோன்றுகின்றனர் சிறை சென்று மீண்டசெம்மல், களம் பல கண்ட வீரர் என மக்கள் போற்றவேண்டும், மாலை, மரியாதைகள் மலர்க்கிரீடங்கள், மக்கள்மன்றப்பதவிகள் தமக்குக் கிடைக்கவேண்டும் என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்டே தம்மைத்தியாகிகளாகக் காட்டிக்கொள்ள முன்வருகின்றனர். சிலர் தாம் அதைச் செய்தோம் இதைச் செய்தோம் என்று தமக்குத்தாமே சுயவிளம்பரம் செய்து தம்மைத் தியாகிகளாக்கிக் கொள்கின்றனர். அதற்கும் சமூகத்திடம் பிரதி உபகாரம் கேட்டு யாசிக்கின்றனர் இவை எல்லாம் சமுதாய முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் வழிகோலா?

சமூகத்தில் கருத்து மோதல்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது ஆயினும் அக்கருத்து மோதலின் மூலம் அறிவுவளர்ச்சி ஏற்பட வேண்டும்' உண்மைகளையும், நன்மைகளையும், ஆராய்ந்து அறிந்து அதன் படி அனைவரும் ஒழுகவேண்டும். அதனை விடுத்து நான் வளத்த முயலுக்கு மூன்று கால் என வாதிப்பதும், வரட்டு வேதாந்தம் பேசுவது, குதர்க்க வாதம் செய்வதும், சரியல்ல சொல்லுபவர்கள் யாராகவும் இருக்கலாம், ஆனால் சொல்லும் பொருள் மெய்ப்பொருளா எனக் காண்பதே அறிவாக அமையவேண்டும்.

எம்மிடம் போட்டிகள் ஏற்பட வேண்டும், போட்டிகளில் வரும் வெற்றி தோல்விகளை ஏற்கும் மனப்பக்குவம் வேண்டும் நேர்மை வழியில் பெறும் வெற்றிகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். அப்பொழுது தான் சமூதாயம் ஒன்றுபட்டு உயர்வடையும்.

மாணவர்களாகிய நாம் தாழ்வுற்று நிற்கும் தமிழ்ச்சமூகத்தை வையத்தில் உயர்த்திட பேதங்கள் அனைத்தும் களைந்து ஒன்றுபட்டு உழைப்பதற்கு உறுதி பூணுவோம். அடம்பன் கொடிபோற் திரளுவோம்.

**Studio DILKA**

**PHOTOGRAPHERS**

202, HOSPITAL ROAD, JAFFNA.

OPPOSITE BUS-STAND

படப்பிடிப்பாளர்கள்

**ஸ்ருடியோ டில்கா**

202,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

8174

பஸ் ஸ்ராண்டுக்கு முன்பாக

10 வருடகாலமாக சுன்னுகத்தில் நகை உற்பத்தி செய்து வழங்கி வரும் ஓரேயொரு ஸ்தாபனம்



**முருகன்**

**ஆபரண மஹால்**

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னுகம்

**With Best Compliments Of**



**YAPPAN Jewellers**

(K. Arumugampillai & Son)
64, Kannathiddy Road,
Jaffna.
PHONE: 518

உங்களுக்கு வேண்டிய சிறந்த
நகைகளை புதிய டிசைன்களில்
காலத்திற்கும் தரத்திற்கும்
உகந்தவாறு தயார் செய்ய
சிறந்த ஸ்தாபனம்



**ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ்**
25, கே. கே. எஸ். ரோட்,
சுன்னுகம்.

அலங்கார பொருட்கள்
அழகு சாதனங்கள்

மற்றும்

பாத அணிகள்
விற்பனையாளர்கள்.

**சிப் சென்ரர்**

டாக்டர் சுப்பிரமணியம் வீதி.

சுன்னுகம்.

சிறந்த வேலைப்பாடுள்ள
தங்கவைர நகைகளை
விரும்பிய டிசைன்களில்
தெரிவு செய்யலாம்.

**செல்லையா சிவபாதலிங்கம்**

வைரக்கல் நகை வியாபாரம்
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7794.

With the Best Compliments

of

**K. S. SELLAPPAH & SONS**

No: 140, Kochikadai Road,

COLOMBO.

அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்கள்

கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 585

தங்கவைர நகை வியாபாரம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

கே. கே. வி.
யாழ்ப்பாணம் நகை
மாளிகை

82/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 362

தரமான சுவையான
குளிர்பானங்கள்
சிற்றுண்டிகள்
ராஜா பீடா

மற்றும்

விழாக்கள் களியாட்டங்கள்
அனைத்திற்கும்
தேவையானவற்றை குறித்தநேரத்தில்
பெற்றுக்கொள்ளலாம்

ராஜா கிறீம் ஹவுஸ்
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7430

With the best Compliments
from

Newnham Stores

General Merchants
Commission Agents
and News Agents

No: 12, Jampettah Street,
COLOMBO-13

Phone: 35682.

*With Best Wishes*

*from*

**PRABAA JEWELLERY**

134, Sea Street,

COLOMBO-11

22350

*Space Donated By*

# K. SELVARAJAH & CO

**204, GasWorks Street,**

**COLOMBO-11**

☎ **32107**

கேக், மட்டன் ரோல்,
கட்லட், பற்றிஸ், சுவீற்ஸ்
கல்யாணி பீடா

மற்றும் சகலவிதமான ஐஸ்கிறீம்
வகைகள் முதலியவற்றைப்
பெற்றுக்கொள்ள யாழ் நகரில்
சிறந்த இடம்

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

73, கஸதூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

போன்: 8077

Special Hires will be
Undertaken for:-

- WEDDINGS
- TOURS
- PILGRIMAGE
- PICNICSetc

Contact

**Neilanthi Travels**

274, K.K.S. Road,
(Sivan Koviladty), Jaffna.

Phone: 7348.

With the Best Compliments
from

Famous Tutory for

COMMERCE
AND
ARTS in JAFFNA

Vickna Tuition
Center

52, Stanley Road, Jaffna.

Engineering (London)
Diplomain
Draughtsman Ship
Graduate Ship in
Chemistry
(Spl. degree Chem.)
City and Guilds)
London (A/L)
Ceylon (A/L)
Please Contactus

JASE INSTITUTES

Stanley Road, Jaffna.

வர்த்தக மாணவ மன்றத்திற்கு
எமது நல்லாசிகள்

சிறந்த புகைப்படங்களுக்கு
இன்றே நாடுங்கள்

ஸ்ருடியோ சற்குணம்ஸ்

51, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

7893

நவநாகரிக நகைகளுக்கும்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
பெற்றுக்கொள்ளவும்
சிறந்த ஸ்தாபனம்

**நியூ சோதி ஜுவல்லர்ஸ்**

127, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

With the Best Compliments

from

**The Bombay**

**Stores**

General Merchants
Wholesale and Retail

142, Maliban Street,

COLOMBO-11

வணிக மாணவர் மன்றத்திற்கு

எமது நல்லாசிகள்

**அரஸ்கோ இன்டஸ்ரியல்**

எக்ஸ்போட் லிமிட்டெட்

*163, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

விவசாயிகளே

உங்களுக்குத் தேவையான

* உரவகைகள்
* கிருமி நாசினிகள்

அனைத்திற்கும் நாடவேண்டிய
இடம்

எஸ். பி. சாமி அன் கொம்பனி

193, மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 7025

அன்பளிப்பு

தா. திருநாவுக்கரசு. பா. உ.

கல்லூரி வீதி,

காங்கேசன்துறை.


போசகர்கள்:



திரு. எஸ். கே. சுந்தரலிங்கம்



திரு. எஸ். இராஜதுரை



பொறுப்பாசிரியர்:
எஸ். சந்திரபோஸ்



பொருளாளர்:
செல்வன் ப. சிவலிங்கம்

# இலங்கையின் கட்டுப்பாடற்ற பொருளாதாரமும் பணவீக்கமும்.

ஆக்கம்: செல்வன். க. ஞானதேவன்
(வர்த்தகபிரிவு இரண்டாம் வருடம்)

பண வீக்கமென்பதன் பொருள் ஒரு நாட்டின் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் விலைகள் தொடர்ந்து அதிகரிப்பதனையே குறிக்கின்றது. இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பண வீக்க நிலையை குறிக்காது! ஏனெனில் கடுமையான விலைக் கட்டுப்பாடுகள், பங்கீட்டு முறையின் மூலம் விலையை கட்டுப்படுத்தும் வேளையிலும் பண வீக்கமேற்படலாம். நாட்டின் பொருட்கள் சேவைகள் ஆகியவற்றின் மொத்தக் கேள்விக்கு இருக்கும் மொத்த நிரம்பல் அதிகரிக்காதவிடத்து ஏற்படும் நிகழ்வினையே பணவீக்கம் குறிக்கின்றது. சுருங்கக் கூறின் பணத்தின் பெறுமதி குறைகின்றதெனலாம்.

இப்பண வீக்கம் நான்கு வழிகளில் சாத்தியமாகின்றது.

(1) கேள்வித்தூண்டல்ப் பணவீக்கம்

ஒரு பொருளுக்கான கேள்வி அதிகரிக்கும் போது விலை மட்டம் அதிகரிக்கும். இவ்வாறு கேள்வி அதிகரிப்பால் விலை மட்டம் உயர்வதனையே கேள்வித்தூண்டல்ப் பண வீக்கமெனலாம்.

(2) செலவுத் தூண்டல்ப்பண வீக்கம்

பொருட்களின் உற்பத்திச் செலவுகள். அதிகரிப்பதன் காரணமாக விலைகள் அதிகரிப்பதனையே செலவுத் தூண்டல்ப்பண வீக்கம் என்பர்.

(3) அந்நிய வர்த்தகத்தினல் தூண்டப்படும் பணவீக்கம்.

பணவீக்கம் காணப்படும் நாடுகளோடு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் இப்பணவீக்கத்தினை எதிர் நோக்க வேண்டும்.

(4) துறைசார் பணவீக்கம்.

மொத்த நுகர்வு மாருத நிலையில் ஒரு துறையில் இருந்து இன்னேர் துறைக்கு நுகர்வு மாற்றம் அடைவதனல் விலை மட்டங்கள் அதிகரித்துச் செல்வதைத் துறைசார் பணவீக்கம் என்பர்.

பணவீக்கப் பொருளாதார நிலையிலேயே நுகர்வோனையும் விற்பனையாளனையும் பல்வேறு விதத்தில் பதுக்கலானது தூண்டுகின்றது. அதாவது விலையின் அதிகரிப்பால் எதிர்காலத்தில் மேலும்இலாபத்தைப்பெற வியாபாரிகள் முனைவர் மற்றும் சில வியாபாரிகள் பொருட்களை பதுக்க முனைய நுகர்வோர் விலை ஏற்றம், தட்டுப்பாடுகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு மறுமுனையில் பொருட்களைப் பதுக்கமுனைவர். இந்த இரு சார்பாரும் பதுக்குவதால்

மொத்தக் கேள்வியில் பெரும் அதிகரிப்பு ஏற்படும். சில தனவந்தர்கள் வரி ஏய்ப்புக்காக பணத்தினை இன்று பெருமளவுக்குத் தங்கம், நிலம் போன்ற விலை மதிப்புள்ள பொருட்களை கொள்வனவு செய்வதில் ஈடு செய்கின்றனர். இதனால் இத்தகைய பண்டங்களின் கேள்வி அதிகரிப்பதுடன் பணவீக்கப்பிரச்சனை பெரிதாகவுள்ளது.

இலங்கையின் கைத்தொழில் விவசாயத்துறைகளின் உற்பத்தி அதிகரிப்பு முதலீடு தொழில் நுட்ப மாற்றம், பற்றாக்குறை என்பவற்றால் தடைப்பட்டமையால் கேள்விக்கு ஏற்ப உற்பத்தி அதிகரிக்கவில்லை. இலங்கையில் வெளிநாட்டு மூலப் பொருட்களையும் இயந்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர் இதனால் வெளிநாட்டில் ஏற்படும் விலை ஏற்றங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலையேற்றத்திற்கு வழி வகுக்கின்றது. நாணயமாற்றுப் பற்றாக் குறையினால் அரசு இறக்குமதி செய்கின்ற மூலப் பொருட்களுக்கு வரியை விதிப்பதனால் விலை அதிகரிக்கின்றது. இவ்வாறு கள்ளக் கடத்தல், கறுப்புச் சந்தை, நாணய மாற்றுப் பற்றாக் குறை. சனத் தொகை மாற்றம் போன்றன பணவீக்கத்தை நிர்ணயிக்கும் காரணிகளாகும். இப்பணவீக்கத்தின் சக்திகளாக மேற்கூறியவை இருந்த போதிலும் இவற்றினால் பல பாதகமான விளைவுகள் உண்டு.

பணவீக்கத்தின் விளைவுகளை பின்வருமாறு எடுத்துக் கூறலாம்.

இப்பணவீக்கத்தின் போது பொது விலை மட்டம் தொடர்ந்து அதிகரிக்கும் மக்கள் தம் வாழ்க்கைத் தரத்தினை சம நிலை செய்ய பணச் செலவு செய்யவேண்டிய கட்டாயம் இருக்கும். இலங்கை போன்ற பணவீக்க நாடுகளில் மக்களின் வருமானமும் வாழ்க்கைத் தரமும் கீழ் மட்டத்தில் இருப்பதால் மக்கள் மிகவும் வறுமைக் குள்ளாவார்கள் அப்படி இருக்கும் போது சில சமூக விரோதிகளின் பதுக்கல், விலையேற்றம் ஆகியன துரித கதியில் முன்னேறும் பொருளாதாரம் தளப்பும் தன்மையும் இலாப நோக்கமும் உருவாகும்.

பணவீக்கத்தை நிர்ணயிக்கும் காரணிகளைக் கட்டுப்படுத்தபின்வரும் மூன்று நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(1) நாணயக் கட்டுப்பாடு.

ஒரு நாட்டின் பண நிரம்பலை ஒழுங்கு படுத்துவதன் மூலம் பொது விலை மட்ட அதிகரிப்பைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளைக் குறிக்கும். மத்திய வங்கியால் வட்டிவீதம் அதிகரிக்கப்பட வர்த்தக வங்கிகள் வழங்குகின்ற கடன் களுக்கான வட்டியும் வாடிக்கையாளரின் வைப்புக்களுக்கான வட்டியும் அதிகரிக்கும் இதனால் கடன்களுக்கான கேள்வி குறையும் வைப்புக்கள் அதிகரிப்பதால் பணநிரம்பல் குறையும் இதனால் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படும் ஆனால் இது இலங்கையைப் பொறுத்தவரையில் வெற்றியளிக்கமாட்டாது. இலங்கை ஓர் வளர்முக நாடாக இருப்பதனால் இவ் நடவடிக்கைகளின் மூலம் அபிவிருத்தி குறையும்.

(2) நிதிக் கட்டுப்பாடு.

அரசு தனது வரிச்சலுகையை மாற்றுவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளைக் குறிக்கும் அதாவது நேர் வரிகளை அதிகரிப்பதன் மூலம் மக்களின் கொள்வனவாற்றல் குறையும் இதனுல் பொருளின் விலை குறையும் மறைமுக வரிகளை அதிகரித்தால் அது பொருட்களின் விலையை அதிகரிக்கச் செய்யும் எனவேதான் மறைமுக வரிகள் பணவீக்க இயல்புடையவை எனக் கொள்ளப் படுகின்றது.

(3) பௌதீகக் கட்டுப்பாடு:-

அரசாங்கம் உற்பத்தியை அதிகரிக்கச் சில ஊக்குவிப்புநடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம உள்நாட்டில் பற்றுக் குறையான பொருட்களின் நிரம்பலை அதிகரிக்கச் செய்தல்.

பணவீக்க நிலையை நிர்ணயிக்கும் பிரதான காரணியாகப் பற்றுக்குறை வரவு செலவுத்திட்டம் உள்ளது. இலங்கை போன்ற வளர்முக நாடுகள் பொருளாதார அபிவிருத்தி கருதியும் தேசிய நலன் கருதியும் அரசு பல சமூக பொது முதலீடுகளில் ஈடுபட வேண்டி இருப்பதால் பற்றுக்குறை வரவு செலவு திட்டத்தை நிறைவு படுத்தல் சாத்தியமற்றது அத்துடன் தற்பொழுது இலங்கையில் வட்டி% உயர்த்தியமை. சேமிப்பு முறைகளை செயற்படுத்தியமை ஆகியவற்றின் மூலம் வைப்புக்களைப் பெற்றுக் கொடுகடனை கட்டுப்படுத்தியதனுல் நாட்டு உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப் படும்.

நுகர்வுப் பண்டங்களுக்குக்கட்டுப்பாட்டுவிலை விதிப்பின் கள்ளச் சந்தை ஒன்று உருவாகும். அக்கள்ளச் சந்தையில் பொருட்களின் விலை அதிகரிக்கும் விலைக் கட்டுப்பாடு, பங்கீட்டு முறை. என்பனவற்றின் ஊடாக இந்நிலையைச் சமாளிப்பது. இங்கு பொருத்தமற்றது. காரணம் இலஞ்ச ஊழல், தேசப்பற்றுள்ள அதிகாரிகள் இங்கு குறைவாகவே உள்ளனர் எனவே இன்றைய பொருள்தார அமைப்பில் சில மாற்றங்கள் செய்வதன் மூலம் இந்நிலையைக் கட்டுப்படுத்த முடியாது. புரட்சிகரமான திட்டமிட்ட பொருளாதாரமாக மாற்றி அமைப்பதன் மூலம் இப்பணவீக்கத்திற்கு ஓர் தீர்க்கமான முடிவு காண முடியும்.

---

தற்காலத்தில் மாணவனே எந்த நேரமும் புத்தகக் குவியலுக்கு உள்ளேயே வாழ வேண்டியிருக்கிறது. அந்தப் புத்தகக் குவியலே அவனை மூச்சு திணரும்படி செய்துவிடுகின்றது.

மாணவர்கள் ஆராய்ந்து அலசாத விடயம் எதுவுமே இல்லை: என்பது எனக்குத் தெரியும்.

நாட்டில் நடக்கும் அரசியல் இயக்கம்களில் முதலாவது பங்கு பெறுவது மாணவர்களின் கடமையாகும்.

காந்தி.

# மகாவலித் திட்டம் ஒரு நோக்கு

ஆக்கம்: செல்வன் இ. பாலராஜா
(வர்த்தகபிரிவு இரண்டாம் வருடம்)

இலங்கையில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஓர் பலநோக்கு நீர்ப்பாசனத் திட்டமாகும். இது 1930-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் மகாவலி நவின மயமான பாரிய திட்டமானது 1965ல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், உலக உணவு விவசாய ஸ்தாபன நிபுணர்களும், இலங்கை பொருளாதார நிபுணர்களும், ஒன்று கூடி மகாவலித் திட்டம் பற்றிய அறிக்கையைத் தயாரித்தனர்.

இத்திட்டமானது 1968-ம் ஆண்டு கையளிக்கப்பட்டது. 1969-ம் ஆண்டு இத் திட்டத்திற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் ஆரம்பமாகின. இருந்தும் 1967-ல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து இதுமூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இம் மூன்று கட்டங்களும் 30 ஆண்டுகளில் பூர்த்தியாக்குவதாக முடிவு செய்யப்பட்டது. மேலும் இதை பொதுவாக ஆராயும்பொழுது ஒரு வருடத்தில் 72 லட்சம் ஏக்கர் அடிநீரை வெளியேற்றுகின்றது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்படி 9 லட்சம் ஏக்கர் நீர்ப்பாசன வசதியை பெறக்கூடியதாக இருக்கும் இதில் 6,54,000 ஏக்கர் புதிய நிலங்களும் 2,46,000 ஏக்கர் பழைய நிலங்களும் காணப்படுகின்றன. மகாவலி கங்கையானது பள்ளத்தாக்கு வழியில் 4,78,000 ஏக்கர் வரண்ட பிரதேசமும் வடக்குக் கிழக்கு, வடமத்திய மாகாணங்களின் 4,22,000ஏக்கர் நிலங்களும் நீர்ப்பாசன வசதியைப் பெறும் இதற்குப் பொதுவாக 670 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப் பட்டது. தற்போதைய அரசானது அதாவது 1977-ல் பதவிக்கு வந்த அரசு அத்திட்டத்தை துரித மகாவலித் திட்டமாக மறுசீரமைத்தது. இது ஒரு வகையில் விசைப் படுத்திய திட்டமெனவும் அழைக்கப்படுகின்றது.

துரித மகாவலித்திட்டம் என்பது ஆறுஆண்டுகளில் பூர்த்தி செய்வதாக பதவிக்கு வந்த அரசு தீர்மானித்ததைக் குறிக்கும் மகாவலித்திட்டத்தின் மூன்று கட்டங்களில் ஏற்கனவே 1-ம் கட்ட வேலைகள் 1971—1976 வரை இடைப்பட்ட காலங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு 1977-ல் மேற்கொண்ட மதிப்பீட்டின்படி 1,500 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டது. துரித மகாவலித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக அரசு அதை ஆறுசெயற் திட்டங்களாக வகுத்துள்ளது. அவையாவன:

## 1. கொத்மலைத் திட்டம்;

இது துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சிகளின் கீழ்வரும் 1-வது பலநோக்கு நீர்த்தேக்கமாகும். இச்செயற்திட்டப் பூர்வாங்க வேலைகள் 1973 தொடக்கம் 1976 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. 1979-ம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி அண்ணளவாக 450 கோடி ரூபா செலவாகுமெனஎதிர்பார்க்கப்பட்டது. இதில் 3,31,000 ஏக்கர் அடிநீர் இங்கு தடுத்து வைக்கப்படக் கூடியதாய் உள்ளது. இதில் 67 மெகவாட் கொண்டு 3 கூறுகளை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2. விக்டோரியா செயற்திட்டம்:

இதன் தொடக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது, இச் செயற் திட்டமானது 1984- இன் இறுதியில் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 1,20,000 கிலோவாட்ஸ் மின்சக்தியை உற்பத்தி செய்யக் கூடியதாக விருக்கும். இதில் 74,000 ஏக்கர் புதிய நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுகின்றது. 1977-ம் ஆண்டு விலைமட்டத்தின்படி அண்ணளவாக 500 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்படுகின்றது.

### 3. மதுறு ஓயாத் திட்டம்:

இது 46.7 கோடி கனமீற்றரைக் கொண்ட நீர்த்தேககமாகும். இப் பூர்வாங்க வேலைகள் 1982-ல் முடிவடையுமென நம்பப்படுகிறது. இத்திட்டத்திற்கு 1979-ம் ஆண்டு விலைக் கணிப்பீட்டின் படி 210 கோடி ரூபா செலவாகும்.

### 4. றண்டெனிகலத் திட்டம்:

இது 1979-ம் ஆண்டு ஆரம்பிக்கபபட்டு 1980-ம்ஆண்டு பிற்காலப்பகுதியில்முடிவடையும். என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மொத்தக் கொள்திறன் 86 ஆயிரம் ஏக்கர் அடி நீரைக் கொண்டது. இங்கே 112 மெகவாட் மின்சக்தியை உற்பத்தி செய்யலாம்.

### 5. மொறக்கந்தைத் திட்டம்:

மகாவலி கங்கையின் கிளையாறுனது 26 மெகவாட் மின்சக்தியை உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்டது. இது 28,000 ஏக்கர் அடி நீரை உள்ளடக்கும். 1977-ம் ஆண்டு விலைக்கணிபபீட்டின் படி 86 கோடி ரூபா செலவாகும்.

### 6. சமநலவேவாத் திட்டம்:

மகாவலித் திட்டமானது முழுமையாக நிறைவேறும் பொழுது உணவு உபஉணவு உற்பத்தி அதிகரிக்க ஏதுவாகின்றது. பிரதான உணவான நெல்லின் உற்பத்தியானது பெருமளவிற்கு அதிகரிப்பதுடன் உபஉணவுப் பொருட்களும் பெருமளவிற்கு உயர்வடையக்கூடும். உதாரணமாக கரும்புப் பயிர்ச் செய்கையை கொள்ளலாம். இது போன்ற மூலப்பொருட்களின் உற்பத்தியும் அதிகரிக்கக்கூடும். இதனுல் வேறுபல விளைவுகளையும் எதிர் நோக்கக்கூடும்.

இத்துரித மகாவலித் திட்டத்தில் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இத்திட்டமானது விசைப்படுத்தப்பட்டதால் 2 அல்லது 3 வருடங்களின்பின் வேலையில்லாப் பிரச்சனையை கட்டுப்படுத்தக்கூடியதாகவுள்ளது. இத்திட்டம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் உதாரணமாக விவசாயம் செய்வதற்கு அணைகட்டல், அவற்றைப் பராமரித்தல் போன்ற ஏனைய மறைமுக வேலை வாய்ப்பினை உருவாக்கக்கூடியதாயிருக்கும். இத்திட்டத்தின் மூலம் நீர் மின் சக்தியையும் பெருமளவிற்கு அதிகரிக்கலாம். இதன் மூலம் 540 மெகவாட் மின் சாரத்தை உற்பத்தியாக்கலாம். இதனுல் இலங்கையின் எரிபொருள் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு நிவிர்த்தி செய்யலாம்.

இத் திட்டத்தின் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருளாகிய நெல் உற்பத்தி அதிகரிப்பு அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியை குறைவடையச் செய்யும். இதனுல் அந்நிய செலவாணிப் பிரச்சனையைக் கட்டுப்படுத்துவதுடன் மேலும் மூலப்பொருட்களின் இறக்குமதிக்காகவும் அவ் அந்நிய செலவாணியைப் பயன் படுத்தலாம். இதன் மூலம் மூலப் பொருட்களின் அதிகரிப்பால் கைத் தொழிற் சாலைகள் வளர்ச்சியடையும். இதன் மூலம் இப்பிரதேசத்தில் சிறு முயற்சிகள், சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்க முடியும். இதன் மூலம் பெரும் வேலைவாய்ப்பினை அதிகரிக்க முடியும். இதன் மூலம் பெருமளவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடையச் செய்யலாம்.

மேலும் இத்திட்டத்தின் மூலம் 1,50,000 குடும்பங்களுக்கு இதனை அண்மித்த பகுதிகளில் குடியமர்த்தலாம். இக்குடும்பங்கள் தொகுதியின் அடிப்படையில் அமர்த்தப்படும். இதன் மூலம் சனத்தொகை பரம்பலடைகின்றது. இத்திட்டத்தின் மூலம் பெரும் நன்மையே பெறக்கூடியதாயிருக்கும். இருந்தும் மகாவலி கங்கையிலோ அல்லது அப்பிரதேசத்திலோ பெருமளவு காடுகளை அழிப்பதால் காலநிலை பாதிப்படையலாம். அதாவது காடுகள் இல்லாததால் மழை பெய்வது இல்லாமற் போகலாம். இதை நிவர்த்தி செய்வதற்காக புதிய மரங்களை நடுவதன்மூலம் இத் தீமையை நிவர்த்தி செய்யலாம். இருந்தும் மகாவலிகங்கைத்திட்டத்தில்பெரிதும் நன்மையே பெறக்கூடியதாகவிருக்கும்.

# வர்த்தகப் பிரமுகர்களுடன் சில நிமிடநேரச் சந்திப்பு.

இம் மலராம் "வணிக ஒளி"யின் தயாரிப்பில் உற்சாகத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது மலர்க் குழுவில் இடம் பெற்ற சில அன்பர்கள் வணிக ஒளியின் சார்பில் யாழ் குடாநாட்டிலுள்ள வர்த்தகத்துறைத் தொழிற்துறைப பிரமுகர்கள் சிலரைப் பேட்டி கண்டு அவர்களது தொழிற்துறை, வர்த்தகத்துறை, அறிவு அனுபவங்களையும், அவர்களது சாதனைகளையும், அச் சாதனைகளை அடைய அவர்கள் எதிர் நோக்கிய பிரச்சனை களையும் வணிகத்துறையில் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் அறியத் தரவேண்டும் என்ற நோக்கத்திற்காக இப்படியான ஒருசந்திப்பினை ஏற்படுத் தும்படி வலியுறுத்தினர். அவர்களுடைய ஆலோசனை யின் பேரில் வர்த்தகத்துறைத், தொழிற்துறைப் பிரமுகர் களான,

*மில்க்வைற் தொழிலதிபர்*

திரு. க. கனகராசா ஜே. பி.

*சின்னத்துரை அன் பிறதர்ஸ்*

உரிமையாளர் திரு. எஸ். சின்னத்துரை

*அரஸ்கோ தொழில் ஸ்தாபன அதிபர்*

திரு. இ. அரசரட்ணம்

S. T. R. *பிலிம்ஸ் உரிமையாளர்*

திரு. எஸ். தியாகராஜா (M. M. C.)

*திசா ரோய்ஸ் உரிமையாளர்*

திரு. மு. ஜெகதீசன்

*வட்டுக்கோட்டை பா. உ.*
*யாழ் மெற்றல் உரிமையாளருமான*

திரு. தா. திருநாவுக்கரசு

*ஆகியோரை எமது மலர்க் குழுவினரான*

செல்வன் க. ஞானதேவன்
,, அ. அமிர்தரஞ்சன்
,, சு. கிருஷ்ணகுமார்
,, த. ராஜேந்திரராசா

*ஆகியோர் பேட்டி கண்டனர்.*

*இப் பேட்டியினைக் கீழே பேட்டியாளர்கள் தொகுத்துத் தருகின்றனர்.*

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலையின் அதிபர்

# திரு. க. கனகராசா

## அவர்களின் பேட்டியின் தொகுப்பு.



நாங்கள் இச்சந்திப்பவை முன்கூட்டியாக மில்க்வைற் தொழிலதிபர் திரு. கனகராசா அவர்களைச் சந்திப்பதற்காக 10-12-80 அன்று காலை தொழிற்சாலைக்குச் செல்கிறோம். அவர் எங்களை இன்முகத்துடன் வரவேற்றுத் தொழிற்சாலையைப் பார்வையிட அழைத்துச் செல்கிறார். அதன் பின் மணி மண்டபத்தில் அமர்ந்து பேட்டியை ஆரம்பிக்கின்றோம்.

மாணவர்கள் ''இளமையிற் கல்'' எனும் முதுமொழியினை நன்கு கடைப்பிடித்து வாழ வேண்டும் எனும் அறிவுரையுடன் அவர் எமக்குப் பேட்டியளிக்க ஆரம்பிக்கிறார். 1927ம் ஆண்டில் தனது தந்தையாராகிய வி. மு. கணபதிப்பிள்ளை அவர்களினால் தான் தனது சவர்க்காரத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதென்றும், அத்தொழிலில் 1956ம் ஆண்டில் தந்தையிடம் இருந்து அப் பொறுப்பை ஏற்று இன்றுவரை சிறப்பாகவும், பொறுப்பாகவும் நடாத்திவருவதாகக் கூறினார்.

உள்ளூர் மூலப்பொருட்களையே பெரிதும் பயன்படுத்தி இத்தொழிலைச் செய்வதுடன், உள்ளூர் மக்களுடைய சவர்க்காரத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கத்துடனும், உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதற்காகவும் இத் தொழிலைச் சிறப்புடன் நடாத்திவருகின்றேன். இத்தொழிலைச் செய்வதனால் நான் திருப்தியும் அடைகின்றேன். எனது பிரதேசத் தொழிற்துறை அபிவிருத்திக்கு உதவி செய்கின்றேன் என்ற உற்சாகமும் இத்தொழில் மூலம் பெறும் வருமானத்தின் மூலம் என்னால் இயன்ற அளவு பொதுச் சேவையில் ஈடுபடச் சந்தர்ப்பம் இருப்பதனாலும் நான் இத்தொழிலைத் திருப்தியுடன் மேற்கொள்ளுகின்றேன். எமது தொழில் வெற்றிக்கும், மக்களின் அபிமானம் எங்கள் மேல் தொடர்ந்து இருப்பதற்கும் தொழிற்துறையில் நாங்கள் கொண்டுள்ள அக்கறையும், இடைவிடாத முயற்சியுமே காரணமாகும். இதனாலேயே எமது பிரதேச மக்களுக்குத் தரமான உற்பத்தியைத் தந்து அவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளோம் என்றெல்லாம் கூறினார்.

மாணவர்கள் சிறந்த அறிவினைப் பெற்றுப் பல அறிஞர்கள் கூறியவற்றை மனதில் பதித்து விடாமுயற்சியுடனும், நம்பிக்கையுடனும் செயற்பட்டால் வர்த்தகத் துறையில் மட்டுமன்றி எல்லாத் துறைகளிலும் வெற்றிபெறமுடியுமென்று தனது பேட்டியின் இடையே கூறினார். ஒவ்வொரு மனிதனும் தனக்கென மட்டும் வாழாது, நல்லதோர் சமுதாயம் உருவாகவும், மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கும் தம்மால் இயன்ற சேவையினைச் செய்யவேண்டும் என்றும் கூறினார். மரம்நாட்டு இயக்கம், வீட்டுத் தோட்ட விருத்தி, நீர்நிலைகளின் புனருத்தாரணம், கிராமம் தோறும் சன சமூகநிலையங்களுக்கு நூல்கள் வழங்குதல், பக்திநெறியில் பரமனைப் பணிந்து வாழப் பயிற்றுதல், நல்லறிஞர்களின் அறிவுரை

களை அச்சிட்டு மக்களுக்கு விநியோகித்து: அதன்படி வாழப் பயிற்றுதல் போன்ற சேவைகளை என்னுல் இயன்றவரை செய்து வருகின்றேன். இதேபோன்ற பணிகளில் மாணவர்களும் ஈடுபடவேண்டும் எனவும் வலியுறுத்திஞர்.

கல்வி கற்றும், வேலைவாய்ப்பு இழந்து நிற்கும் இளைஞர்களின் வாழ்வு வளம்பெற முதலில அவ்விளைஞர்கள் "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவர் வாசகத்தை மேற்கொண்டு தமது வாழ்வினை அமைத்துக்கொள்ள வேண்டும். சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளுதல் இளம் தலைமுறையினருக்கு இன்றியமையாத ஓர் அம்சமாகும். அரசாங்கமும் வேலைவாய்ப்பை அளிப்பதற்கும் வேண்டிய உதவிகளை அளிக்க முன்வரவேண்டும். உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி வர்த்தகத்துறை மாணவர்கள் புதிய தொழிறதுறைகளை எமது பிரதேசத்தில் உருவாக்க முன்வரவேண்டும் எனவும் இளந் தலைமுறையினருக்கு இவ்வாருன கருத்துக்களை எடுத்தியம்பிஞர்.

வள்ளுவர் வாய்மொழியிலும், மகாத்மாவின் வாழ்க்கை முறையிலும், இன்னும் பல பெரியார்களின் விரிவுரைகளையும் ஏற்று ஒழுக்க சீலர்களாகத் திகழவேண்டும் எனவும் யோகாசனக் கலையில் மாணவர்கள் ஈடுபட்டு அதன் மூலம் திடகாத்திர மாணவர்களாகவும், அக, புறத்தூய்மை உடையவர்களாகவும் வாழ்ந்து தாம் சார்ந்த வர்த்தகத்துறைகளை வளம்பெறச் செய்து தமது வாழ்வில் சிறக்கவேண்டுமெனவும் கூறியதுடன் எமது வர்த்தக மாணவர் மன்றத்துக்கும் வெளிவரும் வணிக ஒளிக்கும் தமது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி விடைபெறுகிருர்.

நாமும வணக்கம் கூறி விடைபெற்ருேம்.

## யாழ்நகரின் பிரபல வர்த்தக ஸ்தாபனமாகிய எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ் உரிமையாளர்

# திரு. எஸ். சின்னத்துரை

## அவர்களின் பேட்டியின் தொகுப்பு.

சந்திப்பின் அடுத்த கட்டமாக நாங்கள் சின்னத்துரை அன் பிறதர்ஸ் உரிமையாளரும், பிரபல தொழிலதிபருமான திருவாளர் S. சின்னத்துரை அவர்களை K. K. S. வீதியிலுள்ள அவரது வியாபார நிலையக் காரியாலயத்தில் 12-12-80 காலை 10 மணி அளவில் சந்தித்தோம்.



அவர் தமது பேட்டியில் கல்விப் பராயத்தில் இருந்தே தனக்கு வியாபாரத்துறையிலே நாட்டம் இருந்ததாகவும். இதனுல் பதுளையில் தனது மாமஞரின் பலசரக்குக் கடையில் பணிபுரிந்து பெற்றுக்கொண்ட வியாபார. தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு தனது வர்த்தக முயற்சிக்காக

1935ம் ஆண்டளவில் புதிய பலசரக்குக் கடை ஒன்றைக் கோண்டாவிலில் ஆரம்பித்ததாகவும் கூறினார். இறைவன் திருவருளினாலும், தனது விடாமுயற்சியினாலும் தற்போது வியாபாரம் அமைந்துள்ள இடத்தில் 1945ம் ஆண்டு வர்த்தகத்தை ஆரம்பித்து, அதில் ஓரளவு வளர்ச்சியின் பின் உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கும்முகமாகவும், பலருக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் முகமாகவும் 1950ம் ஆண்டு கல்கி பீடித் தொழிற்சாலையை ஆரம்பித்ததாகவம், அதனைத் தொடர்ந்து பல வர்த்தகப் பிரமுகர்களுடன் கூட்டாக இணைந்து சிமா சில்க் இன்டஸ்றீஸ் எனும் உள்ளூர்ப் பிடவை உற்பத்தி நிலையத்தையும் ஆரம்பித்ததாகவும் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் வியாபாரக் கிளை ஸ்தாபனங்களை அமைத்து வணிகத்துறையின் வளர்ச்சியில் உன்னத ஸ்தானத்தை அடைந்ததாககவும் கூறினார்.

தனது 40 வருடச் சேவையில் பெற்ற அனுபவங்கள் மூலம் மாணவர்களாகிய எங்களுக்குப் பின்வரும் அறிவுரைகளைத் தந்தார். வருங்கால இளம் சந்ததியினர் கல்வியில் உயர் தேர்ச்சிபெற்று கல்வி அறிவுடன் வர்த்தகத் தொழிற்துறை அனுபவ அறிவையும் பெற்று, மேன்மேலும் நாட்டிற்குச் சேவை செய்யவேண்டும் என்றும், ஏட்டுக் கல்வியுடன், தொழில் நுட்பக் கல்வியையும் பெற்று வாழ்வில் முன்னேற்றம் அடையவேண்டும் எனவும் கூறினார்.

அவருடைய சமூக சேவைகள் சம்பந்தமாகச் சில வினாக்களை வினவியபொழுது தான் அவற்றில் ஈடுபாடு கொண்டுள்ளதாகவும், ஆனால் அவற்றைத் தனித்தனியாகக் கூற விரும்பவில்லை எனவும் கூறினார். அரசியல் ஈடுபாடு சம்பந்தமாக நாங்கள் வினவியபோது வர்த்தகத் தொழிற்துறை அபிவிருத்திக்காகப் பல்வேறு அரசியல்வாதிகளை நாடியபோதிலும் தனிப்பட்ட ரீதியில் அரசியல் ஈடுபாட்டில் ஆர்வம் குறைவு எனவும் கூறினார். இறுதியாக எமது மன்றத்திற்கும் மன்றத்தின் புதிய மலராகிய வணிக ஒளிக்கும வாழ்த்துக் கூறித் தமது பேட்டியை முடித்துக்கொண்டார்.

நாமும் வணக்கம் கூறி விடைபெற்றோம்.

## அரஸ்கோ இன்டஸ்ரியல் எக்ஸ்போட் லிமிட்டெட் உரிமையாளர்

# திரு. இ. அரசரெத்தினம்

## அவர்களின் பேட்டியின் தொகுப்பு.



அடுத்து நாங்கள் அரஸ்கோ ஸ்தாபன உரிமையாளரும், தொழிலதிபருமான திரு. அரசரத்தினம் அவர்களைக் கண்டிவீதிக் காரியாலயத்தில் 12-12-80 பிற்பகல் 3 மணியளவில் சந்திக்கச் சென்றோம். அவர் அப்பொழுது தொலைபேசியில் யாருடனோ உரையாடிக்கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் புன்சிரிப்புடன் இருக்கையைக் காட்டி அமரும்படி சைகை காட்டினார். சிலநிமிடங்களில் தொலைபேசித் தொடர்பை முடித்துக்கொண்டு எங்களுக்குப் பேட்டி தரத் தன்னைச் சுதாகரித்துக்கொண்டார்.

அவர் தமது பேட்டியில் தாம் ஈடுபடும் தொழிற்துறைகளைப் பற்றி எடுத்துக்கூறினார். பழங்களைப் பதனிட்டு ''ஜாம்'', ''மாங்கோ நெக்ரார்'' போன்ற பழச்சாறு வகைகளை உற்பத்தி செய்வதாகவும், ரொபி வகைகள்,, இனிப்பு வகைகள், மரங்களின்

மூலம் பொம்மைகளும், அலங்காரப் பொருட்களும் செய்யும் தொழில்களிலும் ஈடுபடுவதாகக் கூறினர்.

இத்தொழில்களின் ஈடுபாடு 1948ம் ஆண்டு கொழும்பில் தம்மால் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இத்தகைய தொழில்களில் ஈடுபாடு ஏற்படத் தாம் பிறநாடுகளுக்குச் சென்று பெற்றுக்கொண்ட தொழில் அனுபவங்களும், தொழில்நுட்ப அறிவுமே காரணம் என்றார். சிறுவயதில் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் இந்த நிலையை எய்தியதாகவும் வணிகத்துறையில் ஈடுபட விரும்பும் மாணவர்களும் தாம் எந்தத் தொழிற்துறையைத் தேர்ந்தெடுத்தாலும் தாம் செய்யும் தொழிலே தெய்வம் எனப் பாராட்டி, மதிப்பளித்துக் கூடிய ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் ஈடுபட்டிருப்பதன் மூலமே மாணவர்கள் வாழ்வில் வெற்றிபெறமுடியும் என வலியுறுத்தியதுடன் இதனை மாணவர்கள் மனத்திற் கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

1958ம் ஆண்டின் பின் தனது தொழில் முயற்சிகளனைத்தையும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றியதுடன், எமது பிரதேச அபிவிருத்திக்குத் தம்மாலான பங்களிப்பைச் செய்ய முன்வந்ததன் விளைவே இன்று தனது முதலீடுகள் யாவும் யாழ். குடாநாட்டிற்குள் முதலிடப்பட்டதாகவும் கூறினர்.

உள்ளூர் மூலப் பொருட்களான பழவகைகள், மரங்கள் என்பவற்றைப் பயன்படுத்தியும் உள்ளூரில் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் ஓரளவுக்கேனும் வேலைவாய்ப்பினை வழங்கலாம் எனும் நோக்குடனும் உள்ளூரிலே எமது உற்பத்திக்கான தேவைகளைப் பூர்த்திசெய்வதுடன் எமது சில உற்பத்திப் பொருட்களைப் பிற நாடுகளுக்கும் அனுப்பி அந்நிய செலாவணியைச் சம்பாதிக்க உதவலாம் என்பதும் எனது வாழ்க்கை நிலையை மேம்பெறச் செய்யலாம் என்பதும் எனது தொழில் முயற்சியின் நோக்கங்களாகும்.

இத்தொழில் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்கங்கள் உண்டா எனக் கேட்டபோது நிச்சயமாக அப்படி ஒரு நோக்கம் இருப்பதாகவும், அவ்விதம் தொழிற்துறையை விஸ்தரிப்பதன் மூலம் இன்னும் கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கமுடியும் என்றும் கூடிய அளவில்மேன்மேலும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் வாய்ப்புக்கள் உண்டு என்றும் கூறினர்.

அவரது சமூக சேவைகள் ஈடுபாடு சம்பந்தமாகக் கேட்டபோது பல்வேறு சனசமூக நிலையங்கள், அனாதை இல்லங்கள், போன்றவற்றிற்குத் தம்மாலான உதவிகளைச்செய்வதுடன் றோட்டறிக் கழகத்தின் முன்னைநாள் தலைவராகவும் தற்பொழுது அங்கத்தினராகவும் இருந்து சமூக சேவை செய்வதுடன் தமிழாராய்ச்சி இலங்கைக் குழுவில் அங்கத்தினராக இருந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தன்னாலான உதவிகளை நல்குவதாகவும் கூறினர். இவ்வேளையில் மீண்டும் தொலைபேசி மணி ஒலித்தது நாங்கள் எங்கள் பேட்டியை முடித்துக்கொண்டு விடைபெற்றோம்.

---

*மாணவர்களே!*

*நீங்கள் வகுப்பறைகளிலோ, பிரார்த்தனை மண்டபங்களிலோ, வேறு எங்குமோ எழுந்து நிற்கும் போது உங்களின் இரு சொந்தக் கால்களில் நிமிர்ந்து உறுதியாக நிற்கக் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் உங்கள் எதிர்காலச் சமூகமும் சுயமாகவும், உறுதியுடனும் நிமிர்ந்து நிற்கும்.*

— எஸ். சி. போஸ். —

## யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயப் பழைய மாணவரும் தற்போதைய யாழ் மாநகரசபை உறுப்பினரும் S-T-R- பிலிம்ஸ் உரிமையாளருமான

# திரு. எஸ். தியாகராஜா

அவர்களின் சந்திப்புக்களின் தொகுப்பு.



எமது பேட்டியின் அடுத்ததாக யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயப் பழைய மாணவரும் யா/மாநகராளுமன்ற உறுப்பினரும் S. T. R பிலிம்ஸ் உரிமையாளருமாகிய திரு. S. தியாகராஜா அவர்களை 15-12-80 காலை 9-30 மணியளவில் அவரது இல்லத்தில் சந்தித்தோம் அவர் தமது பேட்டியில் ''முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'' எனும் வாக்கியத்துக்கமைய ''வாழ்க்கையினை வளம்படுத்தியவன் நான்'' என்ற பெருமையுடனும், நான் கல்வி கற்ற பாடசாலை மாணவர்கள் வெளியிட இருக்கும் ''வணிக ஒளி'' மலருக்கு எனது அனுபவங்களை பகிர்ந்துகொள்வதில் பூரிப்பும் அடைகின்றேன் என்று புன்னகை பூத்து தமது பேட்டியை ஆரம்பித்தார். எனது வாழ்க்கை, வர்த்தக அனுபவங்களை நான் கூற நாள் ஒன்று போதாது ஆயினும் உங்களுக்காக முடிந்தவரை எனது அநுபவங்களைப் பகிர்கின்றேன்.

எனது தொழிற்துறை ஆரம்பம் சிறு வயதில் இருந்தே தொடங்கியதொன்றாகும். எனது தமையனாருடன் ஆரம்பத்தில் தொழிற் துறையில் பயிற்சி பெற்றேன். எனக்கென நான் 1951ம் ஆண்டு சொந்தத்தில் ஒரு சிறு வர்த்தக ஸ்தாபனத்தை ஆரம்பித்தேன். இக்காலகட்டத்தில் எனக்குக் கலைத்துறை ஈடுபாடு இருந்தது. இதன் காரணமாக நான் சென்னைக்குக் கலைவிழா இசைவிழாகாணச் செல்வது வழக்கம் இச் சந்தர்ப்பத்தில்தான் சினிமாத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த சென்னை நண்பர் ஒருவர் என்னையும் சினிமாத் தொழிற் துறையில் ஈடுபடத் தூண்டினார். அவ்வேளையில் ''வெற்றிவீரன்'' என்னும் படச்சுருளை வாங்கினேன். ஆயினும் அக்காலத்தில் அதற்கான முழுப்பணத்தையும் உடனடியாகச் செலுத்தவேண்டிய அவசியமிருக்கவில்லை. படத்தினை வெளிவரச் செய்து மிகுதிப் பணத்தினைச் செலுத்தலாம் என்ற வாய்ப்பும் இருந்தது அக்காலத்தில் இலங்கையில் மூன்று பெரிய சினிமா வெளியீட்டு நிறுவனங்களே ஏகபோகம் செலுத்தின. அவர்களிடம் இப் படத்தை வெளியிடுமாறு கேட்டபோது அவர்கள் அதற்கு அனுமதிவழங்க மறுத்துவிட்டார்கள். இதுவே எனது வாழ்க்கையில் மறக்கமுடியாததும், புதியதோர் மன வலிமையினையும் உறுதிப்பாட்டினையும் ஏற்படுத்தியது. இந்நிகழ்ச்சியில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் விளைவே குறைந்தது 5, 6 தியேட்டர்களாவது இலங்கையில் சொந்தத்தில் நிர்மாணிக்க வேண்டுமென்ற வைராக்கியத்தை என் எண்ணத்தில் விதைத்தது. இச் சந்தர்ப்பத்தில் அவர் சற்று உணர்ச்சிவசப்பட்டவராக காணப்பட்டார். ஒவ்வொரு மாணவன் மத்தியிலும் ஒரு திடமான

கொள்கையும் உறுதிப்பாடும் ஏற்பட வேண்டும் எனவும் கூறிக்கொண்டார்.

''எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவே எண்ணல் வேண்டும் திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல் அறிவு வேண்டும்'' என்ற பாரதி பாடலையும் மாணவர்கள் மனத்திற் பதித்தல் வேண்டுமெனவும் கூறினார். எனவே இத்தகையதொரு மனத்திட சங்கற்பத்தை 1955ல் சென்னையில் எடுத்த பின்பு இலங்கை திரும்பிவந்து ஏழு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி எனது சபதத்தை நிறைவேற்றும் பணியினை மேற்க்கொண்டேன் அதற்கிடையே எத்தனையோ இன்னல்கள்...... ஆயினும் மனம் தளராது விடாமுயற்சி கொண்டகுறிக்கோளை நிறைவேற்றுவதில் வெற்றிகொண்டேன், யாழ்குடாநாட்டில் மட்டுமன்றி மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை வவுனியா ஆகிய இடங்களிலும் படமாளிகைகளை நிறுவினேன் அனைத்தும் தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களிலேயே எனது முதலீடுகள் இருக்க வேண்டுமென்ற எனது இலட்சிய நோக்கும் இதற்கு இயைபாக அமைந்தது.

நான் சார்ந்த தொழில் நாட்டுமக்களுக்கு நன்மை பயக்குமா என்று நீங்கள் கேட்கும் கேள்வி நல்லதொன்றே! மக்கள் வாழ்வில் கலை ஓர் அம்சமாகவும் சிறந்த பொழுது போக்காகவும் திகழ்கின்றது. இதனை எவரும் மறுக்கமுடியாது. இத்தகைய கலையோடு சம்பந்தமுடைய பொழுது போக்கு அம்சத்தை வழங்கும் ஒரு தொழிலில் ஈடுபட்டு இருப்பதனால் நான் பெருமையும் திருப்தியும் அடைகின்றேன். இத்துடன் உல்லாசப்பயண விடுதிகள் சில எமது பிரதேசத்துக்குள் அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளேன்.

வாழ்வின் வெற்றி தோல்விகளைப்பற்றி என்னிடம் நீங்கள் வினவுகின்றீர்கள் வாழ்வின் வெற்றியும் தோல்வியும் அவனவன் எண்ணத்தை பொறுத்ததுதான் தெய்வ நம்பிக்கை உள்ளத்தூய்மை பிறருக்கு துன்பம் தரும் வழிகளற்று வாழ்வதே மனிதனை உயர்த்தும் அவனுக்கு வெற்றிதரும் இதுவே என் கருத்தாகும், இதனை மாணவர்களும் பின்பற்றவேண்டும்.

தமிழ்ச் சமுதாயச் சேவை நலன்கருதி அரசியல் ஈடுபாடும் அதன் மூலம் பல சமூக சேவைகளும் நான் சார்ந்துள்ள இந்து மதத்திற்குப் பலதிருப்பணிச் சேவைகளையும் ஆற்றி வருகின்றேன் எனக் கூறி தமது பேட்டியை முடிக்கின்றார். நாமும் அவரிடமிருந்து விடை பெற்றோம்.

---

வெற்றுக் கோஷங்களும், சுவர் இலக்கியங்களும் பிரச்சினைகளைத் தீர்க்குமா? ஒரு இனம், மொழி, என்பதெல்லாம் எந்த அளவிற்கு அவை உள்ளடக்கும் அத்தனை பெயரையும் பிரிதிபலிக்கும். ஒரு ஆளும் வர்கமாக்கி ஆட்சிப்பீடமேற்ற மட்டுமே இவை உதவும் கருவிகளாகுமே அன்றி சமூக நீதியினைத் தருபவையாக அமையா!

— எஸ். சி. போஸ்

---

இரக்கமின்மை மூலம் செய்து காட்டும் அற்புதங்களை விட அன்பினூடே சாதிக்கும் சின்னக்காரியம் மனிதாபிமானமுள்ளது.

— அன்னை திரேசா

---

## யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயப் பழைய மாணவரும் யாழ்நகர் திசா ரொய்ஸ் உரிமையாளருமான

# திரு. மு. ஜெகதீசன்

## அவர்களின் பேட்டியின் தொகுப்பு.



இப் பேட்டியின் அடுத்தகட்டமாக எமது வித்தியாலயப் பழைய மாணவரும் பழைய மாணவர் சங்கச் செயலாளரும் பாடசாலை நலன்விரும்பியும் "திசா ரோய்ஸ்" நிறுவன உரிமையாளருமான திரு. முத்துக் குமாரு ஜெகதீசன் அவர்களை அவரது தொழில் ஸ்தாபனத்தில் 24-12-80 மாலை 5 மணியளவில் சந்தித்தோம்.

அவர் தனது பேட்டியில் மரத்தாலான விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தியிலும், மரத்தளபாட உற்பத்திகளிலும், நகை அடைவுபிடித்தல் தொழிலிலும் ஈடுபட்டிருப்பதாகக் கூறினர். இம் மரதளபாட உற்பத்தித் தொழிலில் கடந்த 10 ஆண்டுகளாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினர். உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு உள்ளூர்த் தொழிலாளர்களின் உதவியுடன் இதனை நடைமுறைப்படுத்துவதாகக் கூறினர். மரங்களில் விளையாட்டுப் பொருட்கள் செய்யும் இயந்திரங்கள் பெரும்பாலும் உள்ளூரில் தாமே திட்டமிட்டு உருவாக்கியவை என்று கூறினர். 1977ம் ஆண்டுக்கு முன்பிருந்த அரசாங்கம் கடைப்பிடித்த வர்த்தகக் கொள்கையினுல் எமது உற்பத்திகளுக்கு உள்ளூரில் பெரும் கிராக்கி இருந்தது. அக்காலத்தில் எமது பொருளுக்கிருந்த கேள்வியின் அளவுக்கு எம்மால் நிரம்பல் செய்ய முடியாமல் இருந்தது. தற்போதைய ஐ. தே. க. அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையினுல் எமது விளையாட்டுப் பொருட்களுக்கான கேள்வி குறையத் தொடங்கியது. இதனுல் தற்போது விளையாட்டுப் பொருட்களின் உற்பத்தியைக் குறைத்து மரத்தளபாட உற்பத்தியினைப் பெருக்க உள்ளோம். வெளிநாடுகளுக்குக்கூட எமது மரத்தாலான அலங்காரப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்களும் எம்மிடம் உண்டெனக் கூறினர்.

தன்னுடைய தொழிற்சாலையில் தற்பொழுது 24பேர் கடமைபுரிவதாகக்கூறினர் இத் தொழிலாளருக்குக் கூடியளவு வேதனம் வழங்குவதற்குத் தனக்கு ஆர்வம் இருந்தபோதிலும் கூட தமது உற்பத்திப் பொருட்களை மிகக் குறைந்த விலையிலேயே சந்தைப்படுத்தக் கூடியதாக இருப்பதனுலேயே தொழிலாளர்களுக்குக் கூடிய வேதனம் வழங்குவது சிரமமாகவிருப்பதாகவும் கூறினர். ஆயினும் கூட ஏனைய ஸ்தாபனங்களோடு ஒப்பிடுமிடத்து அவர்களுக்குக் கூடிய வேதனம் கொடுப்பதாகவும் கூறினர்.

தனது தொழில் முயற்சியின் மூலம் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் உற்பத்தி, தொழில் வாய்ப்பு என்ற விதத்தில் தம்மாலான பங்களிப்பினைச் சிறப்புடன் செய்யத்தான் முன்வருவதாகவும் இதற்கு அரசாங்கங்கள் கடைப்பிடிக்கின்ற கொள்கைகளும் இதற்கு அனுசரணையாக இருக்கும் சந்தர்ப்பத்திலேயே எமது பங்களிப்பின் வெற்றியும் தங்கியிருக்கும் என்றும் கூறினர். அவருடைய தொழிற் துறையின் விருத்திபற்றி வினவியபோது மேலும் உற்பத்தி சம்பந்த

மான தொழிற்துறையையே பெரிதும் விரும்புவதாகவும் பாடசாலைப் பிள்ளைகளுக்கான பஸ் சேவை ஒன்றைக் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டென்றும் வெளிநாடுகளுக்குத் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியை நம் நாட்டிற்குச் சம்பாதித்துத் தருவதில் தம்மாலான பங்கைச் செலுத்தும் ஆர்வமும் உண்டென்றும் கூறினர்.

இத்தகைய பேட்டிகள் மூலம் மாணவ உலகிற்கு ஏற்படக்கூடிய நன்மைகளைப்பற்றி அவரிடம் கேட்டபோது மாணவர்கள் புத்தகப் படிப்புடன் மட்டும் நின்றுவிடாது இத்தகைய தொழில் அநுபவங்களையும், தொழில் நடத்துனர் எதிர்நோக்கும் சிரமங்களையும் பிரச்சனைகளையும் விளங்கிக்கொள்ளவும் தங்களது அறிவு ஆற்றல்களை இத் தொழிற் துறைகளில் எவ்வண்ணம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் அறிந்துகொள்ள உதவுகின்றது. மாணவர்கள் பொறுப்புடையவர்களாகவும் அவர்களுக்குரிய கடமைகளை சரிவரச் செய்து நேர்மையுடனும், உண்மையுடனும் தம் நலத்துடன் பொது நலத்தையும் பேணி வாழ வேண்டுமென்றும் இவர் பேட்டியின் மத்தியில் வலியுறுத்தினர்.

இவரது சமூக அரசியல் ஈடுபாடுபற்றி வினவிய போது "புதினப்பத்திரிகை வாசிக்கும் ஒவ்வொரு மனிதனும் அறிந்தோ அறியாமலோ அரசியலில் ஈடுபாடு கொண்டவனாகின்றான் என்பது தனது தாழ்மையான அபிப்பிராயம் எனவும் ஆகவே தானும் அதற்கு விதிவிலக்கல்ல என தனது அரசியல் ஈடுபாடுபற்றிக் கூறினர். சமூகப் பணிபற்றிக் குறிப்பிட்டபொழுது ஒவ்வொரு மனிதனும் தம்மாலான பங்கினை சமூகத்துக்கு அளிக்க வேண்டுமெனக் கூறும் இவர் தம்முடைய பாடசாலைக்கும் அநாதை விடுதிகள், வைத்தியசாலை போன்றவற்றுக்கும் தம்மாலான சேவைகளைச் செய்வதாகக் கூறினர்.

கல்விகற்றும் வேலையற்றிருக்கும் மாணவர்கள் எத்தொழிலையும் ஏற்று செய்யும் மனப்பக்குவம் அடைய வேண்டு மென்றும் தாம் விரும்பும் தொழிலையே எதிர்பார்த்துத் தமக்கும் சமூகத்துக்கும் பாரமாக இருக்கக் கூடாதென்றும் எடுத்துக் கூறினர்.

இறுதியாக எமது மலர் வெளியீடுபற்றி வினவியபோது சிறந்ததோர் முயற்சி என்றும் இதனை ஊக்குவித்தவர்களுக்குத் தனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் மாணவர்களுக்கு தனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொண்டு பேட்டியினை நிறைவுசெய்தார்.

யாழ்- உலோகத் தொழிற்சாலையின் அதிபரும்
வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினருமாகிய

## திரு. தா. திருநாவுக்கரசு

அவர்களின் பேட்டியின் தொகுப்பு.



யாழ் உலோகத் தொழிற்சாலை தொழில் அதிபரும் வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. தா. திருநாவுக்கரசு அவர்களைச் சந்திப்பதற்காக 1-1-81 அன்று 4-30 மணியளவில் அவரது காங்கேசன் துறை இல்லத்திற்குச் செல்கின்றோம். அவர் நித்திரையில் இருந்து விடைபெற்று எங்களுக்கு ஆதரவு தந்து பேட்டியைத் தொடருகிறார். அப் பேட்டியின் தொகுப்பினை தொகுத்து இங்கு தருகிறோம்.

இலங்கையில் முதன் முதலாக 1957ம் ஆண்டு அலுமினியத் தொழிற்சாலையை ஆரம்பித்த பெருமை என்னையே சாரும் நான் 1956ம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றிருந்த சமயம் அங்குள்ள அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைப் பார்வையிட்ட பொழுது நான் யோசித்தேன் இலங்கையில் அலுமினியப் பொருட்களையாவும் இறக்குமதி செய்யப்படுகின்றனவே ஆகவே நானும் இலங்கையில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் அதன்மூலம் பலருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கலாம் என்ற எண்ணத்துடன் அங்கேயே இதற்குத் தேவையான இயந்திரங்களையும் மூலப் பொருளான அலுமினியத் தகடுகளையும் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்தேன் அத்துடன் இங்குள்ள தொளிலாளர்களுக்கு வேலை பழக்கும் முகமாகவும் இத் தொழிலை ஆரம்பிக்கும் முகமாகவும் ஐந்து தொழில் நுட்ப வல்லுநர்களையும் என்னுடன் கூட்டி வந்தேன் அவர்கள் சுமார் 5 வருடகாலம் இலங்கையில் தங்கியிருந்து எமது ஸ்தாபனத்தை வழிநடத்தி வந்தார்கள்.

தற்போது எனது தொழிற்சாலையில் என்னிடம் தொழில் பயின்றவர்களில் பத்துக்கு மேற்பட்டோர் தமது சொந்த முயற்சியினால் ஒவ்வொரு அலுமினியத் தொழிற்சாலையை ஆரம்பித்து நடாத்தி வருகிறார்கள் இது கண்டு நான் பெருமை கொள்கின்றேன் யாழ் உலோகத் தொழிற்சாலையின் கிளை ஒன்று தற்பொழுது அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டையிலும் இயங்கி வருகின்றது இரண்டு தொழிற்சாலைகளிலும் மொத்தம் 135 தொளிலாளர்கள் கடமை புரிகின்றார்கள் இதன்மூலம் 135 குடும்பங்கள் வாழ்க்கை நடத்துகின்றன எனலாம் எனது தொழிற்சாலையாகிய யாழ் உலோக தொழிற்சாலையில் ஐந்து பிரிவுகள் உண்டு.

1. அலுமினியத் தொழிற்சாலை
2. பித்தளைத் தொழிற்சாலை
3. செம்புத் தொழிற்சலை
4. மின் முலாம் பூசும் தொழிற்சாலை
5. அலுமினியம் பித்தளை ஆகியவற்றை உருக்கிப்பாத்திரங்கள் செய்யும் தொழிற்சாலை.

அச்சுவேலிக் கைத்தொழில்ப் பேட்டை அமைந்துள்ள பகுதியில் நவீன முறையில் இயங்குகின்ற இயந்திரங்களைக் கொண்டு அத் தொழிலையும் விரிவாக்கும் திட்டம் எனக்குண்டு.

அரசியல் ஈடுபாடு பற்றியும் மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றியும் கேட்டபோது நான் ஆரம்பகாலத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் 1970ம் ஆண்டு தந்தை செல்வா அவர்களை எதிர்த்துக் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டேன். பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகிய பொழுது அதில் அங்கத்தவனாகச் சேர்ந்து 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் கூட்டணி வேட்பாளனாக போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டேன்.

மேலும் மாவட்ட அபிவிருத்தி சபைகள் இயங்குவதால் மீன்பிடி, சுகாதார சேவை, கைத்தொழில், கல்வி, வீடமைப்பு, வேலைவாய்ப்பு, காணி, காணி அபிவிருத்தி கிராம முன்னேற்றம், விவசாயம் விலங்கு வேளாண்மை போன்றன அந்த அந்த மாவட்டத்திற்குள்ளேயே இடம் பெறும் இதற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் எது வித தொடர்பும் இருக்கமாட்டாது இதனூடாக மாவட்டமக்கள் நன்மை அடைவர்.

மற்றும் மாணவர்கள் கட்டாயமாக ஒரு தொழில் நுட்ப கல்வியைக் கற்று இருக்க வேண்டும் அவ்வாறு பெற்றிருந்தால் உள்ளூரிலே அல்லது வெளிநாட்டிலே வேலை

வாய்ப்பைப் பெறலாம் இவ் வழிகளைப் பின் பற்றுவதால் இலங்கையின் அடிப்படைப் பிரச்சனையாகியவேலையின்மைப் பிரச்சனையை நீக்குவதுடன் வாழ்க்கையில் ஒவ்வோர் மகனும் முன்னேற்றம் அடையலாம். எங்கள் பகுதியில் குறிப்பாகத் தமிழ் மாவட்டத்தில் கண்ணாம்புக்கல், களிமண், உப்பு, கண்ணாடி செய்யக்கூடிய மண் ஆகியன உள்ளன. இவ் மூலப் பொருட்களை உபயோகித்துக் கைத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டியதும் அத் தொழில் துறையில் இளைஞர்களை பங்குபற்றச் செய்தலும் எமது தலையாய கடமை ஆகும்.

பெரும்பான்மையான தமிழர் வாழும் பகுதி கரையோரப் பிரதேசமாக இருப்பதால் மீன்பிடித்தொழிலை ஊக்குவித்து நாங்கள் மீனில் சுயதிருப்தி அடைவதுடன் வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புண்டு அதேபோல் விவசாயமும் செய்யக் கூடிய கூடியளவு வசதிகளைக் கொண்டன அவ் தொழிலையும் நாங்கள் ஊக்குவித்தல் வேண்டும். எனவும் வருங்கால சந்ததியினராகிய உங்களின் கையில்தான் தங்கியுள்ளது என்றும்கூறினார்.

இத்துடன் அவரிடம் இருந்தும் இது வரை எடுத்த பேட்டிகளில் இருந்தும் விடை பெறுகின்றோம்.

---

## கல்விப்பயன்


பெற்றதாய். அவள் பிள்ளைக்கடைக்கலம்
பிள்ளை, தாயொடு தந்தை தளர்நிலை
உற்ற நாளினில் அன்னார்க் கடைக்கலம்
உரிமையோடு உயர் பெண்மை வாழ்ந்திட
நற்றவப் பேராண்மை அடைக்கலம்
நாடு காத்திடும் மன்னன் ஆயினும்
பெற்றிபோய் நலிவுற்ற காலையில்
பேறுபெற்ற பெண், ஆண்மைக்கடைக்கலம்

நற்றவம் பொலி நாடு யாரது?
நாமதன் எஜமானர் அல்லரே?
கற்றகல்வி, நம்நாட்டின் அரசியல்
காணவும் சமுதாயப் பழங்கொள்கை
இற்று வீழ உழைத்துப் பொருள்வளம்
ஈடிலாப் பொலிவோடு தேடவும்
உற்றதாம் பணியாதலால், இனி,
உறுதியாய் உயர் வாழ்வுக் கடைக்கலம்!

— ஆக்கம்: **என்.கே. ரகுநாதன்**

ஆசிரியர்
யா/மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## மன்ற நிர்வாகக் குழு 1981



நிழற்படத்திற்கு சமூகமளித்துள்ளோர்
இடமிருந்து வலமாக இருப்பவர்கள்:-
பத்திரிகைக் குழு உறுப்பினர். செல்வி. எஸ். சநூரியா
பொருளாளர்: செல்வன். ப. சிவலிங்கம்
போசகர்! திரு எஸ். கே. சுந்தரலிங்கம்
தலைவர்: செல்வன். அ. அமிர்தரஞ்சன்
காப்பாளர்: திரு. எஸ். பி. பாலசுப்பிரமணியம்
செயலாளர்: செல்வன். தா. பாலகணேசன்
உப காப்பாளர்: திரு. எஸ். பன்னீர்ச்செல்வம்
போசகர்: திரு. எஸ். இராஜதுரை
பத்திராதிபர்: செல்வி. ந. வத்சலகுமாரி
இடமிருந்து வலமாக நிற்பவர்கள்
உப தலைவர்: செல்வன். எஸ். சிறீநாதன்
,, ,, ஏ. சிறீஸ்கந்தராஜா
,, ,, எல். ஆர். ராஜா
பத்திரிகைக்குழு உறுப்பினர் செல்வி கே. சித்திநுவைசா
வகுப்புப் பிரதிநிதிகள்:- செல்வன். பி. தேவானந், கே. முகுந்தன்,
எம். இராஜேந்திரா, எஸ். புஸ்பராஜா

மாதவனின் புகழ் பாடும்
வண்ணப்படம்

சுப்ரபாதம்

"கண்ணன் சொன்னன் கீதையிலே
கடமையைச் செய்வாய் பாரினிலே"
என்ற கருத்தினை வண்ணமுறத்
தந்துள்ள ஓவியம்

சுப்ரபாதம்

(யாழ் ராஜா வெண்திரையில்)



அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

★

கோபால் ஜுவல்லர்ஸ்

துரையப்பா பத்தர் கோபாலசாமி
தங்கவைர நகை வியாபாரம்

82/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 270

றெடிமேட் சூட்
பிறசியர், பேபி சூட்,
தயாரிப்பாளர்கள்

செல்லம்ஸ் காமென்ஸ்

157, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக ஒளிக்கு

எமது நல்லாசிகள்

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் குளிர்பானங்கள்

31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

போன்: 7166 தந்தி, யாழ்

With the best Compliments

from

**Jeyanth Foto**

62/1, Pannai Road,

JAFFNA.

Home: 8299

Super Eight Movies, Out - Door Flash
Colour Prosscing and Printing
under taken.

வணிக ஒளிக்கு

எமது நல்லாசிகள்

சுபாஸ் நிறுவனம்

யாழ்ப்பாணம்.

**Accountancy**

76(222) Hospital Road,
JAFFNA.

க.பொ.த. [சாதாரண தரம்] மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பம் 25-1-1980

க.பொ.த. [உ/த] புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

G, A, Q, I-st IN COMMERCE
B.A. இறுதித் தேர்வு வகுப்புகளும்
நடைபெறுகின்றன.

With the best Compliments

of

Ambiha Jewels

59, Kannathiddy Road,

Jaffna.

With the best Compliments

from

SCIENCE ACADEMY

310, Clock Tower Road,

JAFFNA.

சுவை குன்றாமல் உடனுக்குடன்

உங்கள் முன் வறுத்து

அரைத்துப் பெற்றுக்கொள்ள.

இன்றே விஜயம் செய்யுங்கள்

அண்ணா தொழிற்சாலை

இணுவில்,

கிளைகள்:

4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,

1, மத்திய சந்தை, சுன்னாகம்.

போன்: 7413

With the best Compliments.

of



M/S. Pearl Metal Industries.

No: 60, Clock Tower Road,

Jaffna.

வர்த்தக மாணவர் மன்றம் பல ஆண்டு வாழ்ந்து
வணிக ஒளி தொடர்ந்து வெளிவர
எமது தாபனத்தின் நல்லாசிகள்

திருமண அன்பளிப்புகள்
பிறந்தநாள்ப் பரிசுகள்
அன்ருட பாவனைப்பொருட்கள்
இல்லத்தரசிகளின் இல்லத்தேவைகள்
அழகுசாதனப்பொருட்கள்
பாட்டா பாதணிகள்
மின் உபகரணங்கள்
சைக்கிள்கள்
கடிகாரங்கள்

அனைத்தும் தரமான ரகத்தில் மலிவான விலையில் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சி. சின்னத்துரை அன் பிறதர்

**39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

தந்தி: 'கல்கி' த.பெ. எண்: 101 போன்: 284

# தாராள இறக்குமதிக் கொள்கையும் அதன் விளைவுகளும்.

ஆக்கம்: செல்வி. அ. விக்கினேஸ்வரி
(வர்த்தக பிரிவு, 2-ம் வருடம்)

தாராள இறக்குமதிக் கொள்கை 1977ம் ஆண்டு நவம்பர் மாதம் அறிமுகப் படுத்தப்பட்ட போதிலும் அதன் தாக்கம் 1979ம் ஆண்டிலேயே அநுபவிக்கக் கூடியதாக இருந்தது. 1977-ம் ஆணடுக்கு முன்பு ஏற்பட்ட பொருட் பற்றுக்குறைப்பிரச்சனையை தீற்பதற்காகவே இத் தாராள இறக்குமதிக் கொள்கை அறிமுகப் படுத்தப்பட்டது .இக் கொள்கையை அறிமுகப் படுத்தியவுடன் அரசாங்கம் எதிர் பார்த்த அளவிற்கு. பொருட்கள் நாட்டில் வந்து குவியவில்லை வர்த்தகத் தொடர்புகளை ஏற்ப்படுத்த ஏற்ப்பட்ட கால தாமதம். எப் பொருளை இறக்குமதி செய்வது என்ற தீர்மானம் பாவனையாளரின் விருப்பு வெறுப்பு போன்ற பல்வேறு காரணங்களே இறக்குமதிக் கொள்கையின் கால தாமதத்திற்கு காரணமாகும்.

1979-ம் ஆண்டிலிருந்து பெருமளவு பொருட்களை இறக்குமதி செய்ததன் விளைவாக வர்த்தகப் பற்றுக்குறை 1978-ம் ஆண்டை விட 1979-ம் ஆண்டு நான்கு மடங்காக அதிகமாயிற்று. நாட்டின் வர்த்தகப் போக்கில் மிகவும் ஏமாற்றத்துக்குரிய அம்சம் எதுவெனில் 1979-ம் ஆண்டு இறக்குமதிச் செலவு நான்கு மடங்காக உயர்ந்த அதே வேளையில்.. ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம் இறக்குமதி செலவுக்கு மிகச் சொற்ப அளவுகூட ஈடுகொடுக்க முடியாது போய்விட்டது. இவ் இறக்குமதிச் செலவை ஈடு செய்வதற்காக வெளிநாட்டு உதவிகள், நன்கொடைகள், கடன்கள், போன்றவற்றை பயன் படுத்தியதால் எமது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்படுவதற்கு இக் கொள்கை ஏதுவாக அமைகின்றது.

இத்தாராள இறக்குமதிக் கொள்கைளின் படி சகல இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டு தாராளமாகப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படலாம் என்பதனால் பெருமளவு மூலப் பொருட்களை இறக்குமதிசெய்து கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் பெருமளவு உற்பத்தி அதிகரிக்கும் என்றும் இதனால் பொருளாதாரப் பிரச்சனைகளாகிய வேலையில்லாப் பிரச்சனை, நுகர் பொருட்கள் பற்றுக்குறை ஆகியவற்றைத் தீர்க்க முடியுமென்றும் அரசு கருதுகின்றது. இவ் நோக்கத்தின்படி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் 53% ஆனவை இயந்திரங்களென்பது குறிப்பிடத்தக்கது. இப்படியான சந்தர்ப்பத்திலும் அரசு எதிர்பார்த்த அளவுக்கு இவ் நடவடிக்கைகள் கைகூடவில்லை.

தாராள இறக்குமதிக் கொள்கைக்கு முன்பு குறித்த சில நாடுகள்

மட்டுமே எமது நாட்டின் இறக்கு மதியில் தனியுரிமை பெற்றன. உதாரணமாக 1977ம் ஆண்டுவரை எரிபொருட்களின் இறக்குமதியில் சவூதி அரேபியா மட்டுமே தனியுரிமை வகித்து வந்தது. தற்பொழுது ஈரான், ஈராக் போன்ற நாடுகள் பங்குபற்றுகின்றன. இக் கொள்கையினூடாக பெருமளவு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதனால் உள்நாட்டு உற்பத்தி பாதிப்படையும். விவசாயப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது மட்டுமல்லாமல் கைத் தொழிற் பொருட்களின் உற்பத்தியும் குறைந்தது. இதனால் வேலையில்லாப் பிரச்சனையும் உருவாகுமெனலாம். எனவே இக் கொள்கை எந் நோக்கத்திற்காக புகுத்தப்பட்டதோ அவ் நோக்கத்திலிருந்து விலகி அதற்கு எதிர்மாறான செயற்பாடுகளை செய்து வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது

1977ம் ஆண்டுக்கு முன்னர் இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கை நிலவியதால் வெளிநாட்டுப் பொருட்கள் இங்கு பற்றாக்குறையாகவே காணப்பட்டன. இதனால் கள்ளக் கடத்தல், அந்நியசெலாவணி மோசடி போன்றன ஏற்படுவதற்குச் சாதகமானசூழ்நிலைகள் உருவாகியது. ஆனால் தற்பொழுது நாட்டில் தேவையான பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதால் மேற் கூறிய குறைபாடுகள் நீக்கப்பட்டு மக்கள் எதுவித சிரமமுமின்றி தங்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் பெறக்கூடியதாக இருக்கின்றது.

எமது அரசின் நோக்கம் இலங்கையை ஓர் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே ஆகும். இதற்காக வேண்டிப் பல அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்கிக் கொண்டு வருகின்றது. உணவில் தன்னிறைவு அடையவும் மக்கள் சுபீட்சமாக வாழவும் இத் திட்டங்கள் வழிவகுக்கும் எனலாம். இங்குள்ள மக்களுக்கு தொழில் நுட்ப அறிவு குறைவாக இருப்பதன் காரணமாக வெளிநாடுகளிலிருந்து தொழில்நுட்ப வல்லுநர்களை எமது நாட்டுக்கு வரவழைப்பதன் ஊடாக எமது நாட்டு மக்களும் தொழில்நுட்ப அறிவைப் பெறக் கூடியதாகவிருக்கும் எனவே இலங்கையில் எதிர்காலத்தில் சிறந்த பொருளாதார அமைப்பைத் தொழில் நுட்பம் வளருவதால் உருவாக்கலாமென நம்பப்படுகின்றது.

இக் கொள்கைகளின் ஊடாக நன்மையான விளைவுகளும் உண்டு. அதே வேளையில் தீமையான விளைவுகளுமுண்டு. ஆனால் தற்பொழுது இது பாதகமாக அமைந்தாலும் கூட எதிர்வரும் ஆண்டுகளில் சாதகமான முடிவைத் தரலாம். உதாரணமாக மேலைத்தேய நாடுகளைப் பார்க்கும் போது ஆரம்பத்தில் இக்கொள்கையைக் கடைப்பிடித்து நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட பின்னர் இக்கொள்கையை நீக்குவதன் மூலம் நாடு தன்னிறைவு பெற்று பொருளாதாரம் வளர்ந்திருப்பதை நாம் நேரடியாக காணக்கூடியதாக வுள்ளது. எனவே இக் கொள்கையில் எவ்வளவு பாதகமான விளைவுகள் இருந்தாலும் பின்பு சாதகமாக அமையும் எனலாம்.

# பொருளாதாரக் கல்வி

திரு. ச. கி. சுந்தரலிங்கம்
ஆசிரியர்: வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

பொதுவுடைமை நாடுகளிலும் சோசலிச நாடுகளிலும் சமூக பொருளாதார அடிப்படையிலேயே கல்வி திட்டமிடப்பட்டுப் போதிக்கப்படுகின்றது. இது கட்டாயமாகும். பொருளாதார அறிவு மக்களின் நல்வாழ்க்கைக்கும் நாட்டு அபிவிருத்திக்கும் அடிப்படையானது என்பதனல் அத்தகைய நாடுகள் இக் கல்வி முறையில் கவனம் செலுத்துகின்றன. இது நாட்டின் மூல வளங்களையும் மனிதனின் உழைப்புச் சக்தியையும் ஒன்றிணைப்பதன் மூலம் அந்நாட்டின் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்ப கல்வி விஞ்ஞான பூர்வமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

முதலாளித்துவ நாடுகளில் ஒரு தனிமனிதனை எடுத்துக் கொண்டால் அவனது வாழ்வின் அடிப்படைப் பிரச்சனை பொருளாதாரப் பிரச்சனை என்பதை நாம் காணக்கூடியதாயிருக்கின்றது. தனது நாளாந்த தேவைகள் எவை? அவற்றை எப்படி நிறைவு செய்யலாம்? தனது வருமானத்தை பலவித தேவைகளுக்கு மத்தியில் எவ்வாறு பங்கீடு செய்யலாம்.? என்பன போன்ற கேள்விகள் அவனது அன்ருட வாழ்க்கையில் பின்னிக் கிடக்கின்றது. வருமானத்துக்கு மேல் செலவு செய்யும் மனிதனும், குடும்பமும் நாடும், இறுதியில் கடன் பழுவால் கஷ்டமுறுவதையும் பொருளாதார நிலைமையை அறியாமல் ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் குடும்பங்கள் அல்லலுறுவதையும் நாம் காண்கின்ருேம் அதே போல சொந்த மூலவளங்களை பயன்படுத்தக் கூடிய அறிவும் திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கைகளுமற்ற அரசாங்கங்களும் வெளிநாட்டு இறக்குமதியிலேயே தங்கி வங்குருேத்து நிலைமைக்குள்ளாவதையும் காணமுடிகின்றது.

எனவே ஒரு நாட்டின் பிரஜைகள் பொருளாதார அறிவு உள்ளவர்களாக இருக்க வேண்டியது முக்கியம். இந்த அறிவு ஒரு பிரஜையின் இளமைக் காலத்திலிருந்தே ஊட்டப்படல் வேண்டும்.

வாழ்க்கையில் முக்கியஇடத்தைப் பெற்றிருக்கும் இப் பொருளாதார அறிவு எமது நாட்டின் பாடவிதானத்தில் எவ்வித இடத்தைப் பெற்றிருக்கின்றது. என்பதை நோக்கினல் சிரேஷ்ட வகுப்பு மாணவர்களில் ஒரு சிறிய விகிதாசாரத்தினரே பொருளாதாரத்தை ஒரு பாடமாக கற்கின்றனர். சகல மாணவர்களுக்கும் பொருளாதார அறிவு ஊட்டப்படுகின்றதா? என்ருல் அது இல்லை. ஆகவே சிரேஷ்ட வகுப்புக்களில் பொருளியலை ஓர் பாடமாக கற்பவர்கள் மட்டுமல்ல சகல

மாணவரும் பொருளாதார அறிவைப் பெற நாம் யாது செய்ய வேண்டுமென்பதைக் கல்வியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

ஆரம்ப வகுப்பிலிருந்தே பொருளியலறிவு புகட்டப்பட வேண்டும். இதைக் கேட்டு சிலர் வியப்படையலாம். ஆரம்ப வகுப்புகளில் பாலர் எழுதப் பழகு முன் ஆரம்ப எழுத்துப் பயிற்சி கற்பிக்கப்படுதல் போலவும் ஆரம்ப கணிதம் விளையாட்டுப் பொருட்கள் மூலம் கற்பிக்கப்படுதல் போலவும் ஆரம்ப விஞ்ஞானம் பாலர்கள் இலகுவாகச் செய்து பார்க்கக் கூடிய செயல்களைத் தாங்களே செய்யக் கூடியதாக உதவுவது போல ஆரம்பத்திலிருந்தே பல்வேறு வழிகளில் பாலருக்கு இவ்வறிவு ஊட்டப்படல் வேண்டும். இது இடை நிலைப் பருவ மாணவருக்குச் சற்று விருத்தியடைந்து தங்கள் சூழலிலுள்ள கழிவுப் பொருட்களை மூலப்பொருட்களாக்கும் ஆக்க முயற்சியிலும் தேவைகளுக்கேற்ப பொருட்களை உருவாக்கும் ஆக்க முயற்சியிலும் கிடைக்கும் வருவாயைத் தேவைகளுக்கேற்ப திட்டமிட்டுச் செலவு செய்யும் பழக்கத்தையும் கற்றுக் கொடுத்தல் வேண்டும். உயர் வகுப்புக்களில் இவை மேலும் விபரிக்கப்பட்டு மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்திப் பொருட்களை ஆக்கக்கூடிய திறமையையும் தொழிற் கல்வியின் நன்மைகளையும் வருமானத்தைத் தேடிக்கொள்ளும் வழிகளையும் வருமானத்தைத் திட்டமிட்டுச் செலவிடும் பழக்கத்தையும் கற்பிக்க வேண்டும். தொழில் நிலையங்களையும் அவைகள் பணம் திரட்டித் தொழில்களை அமைத்து நடாத்தும் முறைகளையும் கற்பிக்க வேண்டும். இவை வெறும் ஏட்டுச் சுரைக்காயாய்'' அமையாமல் செயல் முறைத் திட்டங்களாக அமைய வேண்டும்.

இவ்வாறு செயல்முறைத் திட்டங்களாகப் பொருளாதார அறிவு புகட்டப்படுமாயின் மாணவர்கள் பலர் தாங்களாகவே தொழில்களைத் தேடிக் கொள்வார்கள். நாட்டின் முக்கிய பிரச்சனைகளில். ஒன்றுன வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவில் குறைய ஒரு வழியாகும். வீணுகக் கிடக்கும் மூலப்பொருட்கள் உற்பத்திப் பொருட்களாக்கப்படும். இதனுல் எமது தேவைகளில் அனேகமானவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் திட்டமிட்டு வரவு செலவு செய்யப் பழகிக்கொள்வதால் வாழ்வில் இன்றுள்ள ஏகப்பட்ட சமூகப் பிரச்சனைகள் தீரும். "வரப்புயர நீர் உயரும்'' என்பது போல அரசின் துண்டு விழும். வரவு செலவுத் திட்டம் அற்றுப்போகும். அபிவிருத்தி உண்மையான வேகத்தில் முன்னேறும் நாம் கூடுதலான பொருட்களை ஏற்றுமதி செய்து குறைந்தளவு பொருட்களை இறக்குமதி செய்யும் நாடாக திகழ்வோம் என்பதில் ஐயமில்லை.

# கூட்டுறவு வளர்ச்சியின் மீது ஒரு கண்ணோட்டம்

ஆக்கம்: செல்வன், ப. சிவலிங்கம்
(வர்த்தக பிரிவு 2-ம் வருடம்)

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற தத்துவத்துக்கமைய கூட்டுறவு இயக்கமானது 18ம் 19ம் நூற்றுண்டுகளில் சமூக அங்கத்தினர் மத்தியில் சிறப்பான அம்சங்களுடன் வளர்ந்த ஓர் இயக்கமாகும். இவ் நூற்றுண்டுகளுக்கு முன் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு வளர்ச்சியடையாத காரணத்தால் கூட்டுறவு அமைப்பானது சிறப்பாக வளர்ச்சியடையவில்லை எனலாம். அச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் காரணமாக உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டது. இதனுல் முதலாளித்துவப் பொருளாதார்ர அமைப்பு அபிவிருத்திப் போக்கைக் கொண்டு காணப்பட்டது. இவ் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் அபிவிருத்தி கொள்ளை இலாபம், சுரண்டல் போன்ற சமூக விரோதச் செயல்களுக்கு வழி வகுத்துக் கொடுத்தது. இதனுல பாதிப்படைந்த தொழிலாளர் வர்க்கம் ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்ற கருத்துக்கிணங்க 27 தொழிலாளர்கள் சேர்ந்து இங்கிலாந்திலே முதலாளித்துவப்பொருளாதார அமைப்பின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த ஆரம்பிக்கப்பட்ட ஓர் இயக்கமே கூட்டுறவு இயக்கமாகும்.

இங்கிலாந்து யப்பான் போன்ற நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் துரிதமாக முன்னேற்றமடைவதற்கும் இக்கூட்டுறவே வழிவகுத்துக் கொடுத்தது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்த அல்லது வளர்ச்சியடையாத நாடுகளும் கூட்டுறவு அமைப்பை தமது நாடுகளில் கைக்கொண்டனர். இதன் பயனுக பொதுவான பொருளாதாரப் பிரச்சனைகள் நீக்கப்பட்டு பொருளாதார அபிவிருத்தி ஏற்பட ஏதுவாக அமைந்தது. இக் கூட்டுறவு சமூகத்தில் காணப்படும் பொதுவானபொருளாதாரப்பிரச்சனைகளைத்தீர்த்து வைக்கத் தக்க முறையிலும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பைப் போலல்லாமல் சமூக, சமுதாய சேவை நோக்குடன் சமூக மக்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சகல சமூக மக்களும் சமமான ஓர் வாழ்வினை வாழக்கூடிய அமைப்பாக தொழிற் படுகின்றதெனலாம்.

எமது அயல் நாடான இந்தியாவில் 1907-ம் ஆண்டு அமுல் நடாத்தப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தினைப் பின்பற்றி எமது நாட்டில் 1911-ம் ஆண்டு கூட்டுறவு அமைப்பானது உருவாக்கப்பட்டது. இதன்படி ஐக்கிய நாணயச் சங்கம் என்னும் ஓர் அமைப்பு வெளிக் கொண்டுவரப்பட்டது. அவ்வேளையில் இச்சங்கம் தவிர்ந்த ஏனைய அமைப்புக்கள் எதுவும் கூட்டுறவு அமைப்பாகக் கருதப்படவில்லை. 1913-ம் ,ஆண்டு தொடக்கம் 1920-ம் ஆண்டு வரை கூட்டுறவு அமைப்பின் வளர்ச்சி, நிர்வாகம், மறுசீரமைப்பு ஆகியன இலங்கைக் கமத்தொழில் இலாகாவின் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனுல் 1920-ம் ஆண்டு கூட்டுறவு வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் முகமாக அதன் நிர்வாகம் மறுசீரமைப்பு ஆகியன கூட்டுறவு இலாகா என்னும் புதிய அமைப்புக்குக் கைமாற்றம் செய்யப்பட்டது. இதன் பின் இவ்வமைப்பு கூட்டுறவு இலாகாவினுல் பராமரிக்கப்பட்டு வந்தது.

கூட்டுறவு இலாகாவிடம் கூட்டுறவு அமைப்பானது ஒப்படைக்கப்பட்டதன் விளைவாக 1920-ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் மறுசீரமைப்புச்செய்யப்பட்டது. இதன் விளைவாக முன்னர் குறிப்பிட்ட ஐக்கிய நாணயச் சங்கங்கள் தவிர்ந்த ஏனைய அமைப்புக்களும் கூட்டுறவு அமைப்பாக மாற்றமடைய வழிவகை செய்யப்பட்டது. 1920-ம் ஆண்டு மறுசீரமைப்பின் பயனுக முதன் முதலில் யாழ் மாநகரிலே 1928-ம் ஆண்டு கூட்டுறவு மாகாண வங்கி என்னும் ஓரமைப்பு உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1929-ம்

ஆண்டு கண்டியிலும் 1930-ம் ஆண்டு மட்டக்களப்பிலும் ஆரம்பிக்கப்பட்டது.

1930-ம் ஆண்டு கூட்டுறவு அமைப்பில் ஏற்பட்ட மறுசீரமைப்பின் காரணமாக ஐக்கிய பண்டகசாலைகள் உருவாக்கப்பட்டன. இவை மக்களின் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களைக் கண்டறிந்து அவற்றினை நியாயமான விலையில் மக்களுக்கு விநியோகம் செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இயங்கியது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் காரணமாக உலக நாடுகளிடையே உணவுப் பற்றுக்குறையும், உணவு விநியோகத்தில் சீர்கேடும் காணப்பட்டது. இதைத் தீர்க்க அரசுக்குப் பெருமளவு நம்பிக்கை உள்ள தாபனமாக பண்டகசாலைகள் அமைந்தன. இதனால் ஐக்கிய பண்டகசாலைகள் மீது பொதுமக்களின் கவனம் திரும்பியது, இதனால் இவ்வமைப்பு துரித வளர்ச்சியடைந்தது எனலாம். 1936-ம் ஆண்டு கூட்டுறவு மறுசீரமைப்பு அமுல் செய்யப்பட்டது, ஆனாலும் அது இரண்டாம் உலக மகாயுத்தத்தின் காரணமாக அது சிறப்புற நடைமுறைப் படுத்தப்படவில்லை.

1944-ம் ஆண்டு இலங்கையில் உணவு விவசாயத்துறையில் அதிக நாட்டம் காட்டப்பட்டதால் விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் எனும் ஓரமைப்பு உருவாக்கப்பட்டது. 1956-ம் ஆண்டு இலங்கைக் கூட்டுறவு வளர்ச்சியில் முக்கியமான மாற்றமொன்று நிகழ்ந்தது. அதாவது ஒவ்வொரு நோக்கங்களுக்கும் தனித்தனி ஒவ்வொரு கூட்டுறவு அமைப்புக்கள் இருந்த காரணத்தால் தோன்றிய பல சிக்கல்களைத் தவிர்க்கும் முகமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இதன்பின்னர் 1964-ம் ஆண்டு கிராமிய மக்களுக்கு புது வாழ்வளிக்கும் முகமாக கூட்டுறவுச் சங்கங்களினூடாக கிராமிய வங்கிகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

1971-ம் ஆண்டு கூட்டுறவு புனரமைப்புச் செய்யப்பட்டது. இதன் பின்னர் 1975-ம் ஆண்டு புதிய கூட்டுறவு அமைப்பு மாகாண ரீதியில் புனரமைப்புச் செய்யப்பட்டது. 1971-ம் ஆண்டு புனரமைப்பின் விளைவாக சிறுசிறு அமைப்புக்களாகக் காணப்பட்ட மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் ஓர் பெரிய அமைப்பின் கீழ் இயங்கத் தக்க வகையில் மாற்றியமைக்கப்பட்டது. அங்கத்துவப்பணம் 50/- இலிருந்து 1/- குறைக்கப்பட்டது. 15 பேர் அங்கத்துவம் கொண்ட ஓர் இயக்குநர் குழு நியமிக்கப்பட்டது. கூட்டுறவு ஊழியரின் அதி குறைந்த சம்பளமாக 150- நிர்ணயிக்கப்பட்டது.

1975-ம் ஆண்டு மாவட்டப் புனரமைப்புச் செய்யப்பட்டதன் விளைவாக. இலங்கையின் கூட்டுறவு அமைப்புக்களனைத்தையும் மாவட்ட அமைப்புக்களாக வகுத்து தனிப்பிரிவாக மாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக நிர்வாகம் நடாத்த வழி செய்யப்பட்டது, இதன் விளைவாகக் கூட்டுறவு இயக்கம் பல சிக்கனங்களையும், திறமைகளையும் அனுபவிக்குமென எதிர் பார்க்கப்பட்டது. இவ்வகையான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வவுனியாவில் அமுல் செய்யப்பட்டது.

இவ்வாறு கூட்டுறவு அமைப்பானது பல்வேறு சிறப்பான அம்சங்களுடன் வளர்ந்து வரும் ஓர் வளரும் பயிராகின்றது. இதை மேன்மேலும் தொடர்ந்து வளர்த்து சமுதாய மக்கள் சுபீட்சமாக வாழ நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

---

பலமின்மை அச்சத்தை வளர்க்கிறது.

மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிகமிகக்கொடியதும் மோசமானதுமான நோய் அச்சம் என்பதுதான். நோயால் செத்துப் போகிறவர்களைவிட அச்சத்தால் செத்துப் போகிறவர்கள் அதிகம். ஆகவே எவரும் அச்சத்திற்கு அஞ்சாதீர்கள். —காந்தி

# மனித சமுதாயத்தில் பணத்தின் முக்கியத்துவம்

ஆக்கம்: செல்வி. எம். ரலீரு
(10-ம் வகுப்பு)

பண்டைய கால மக்களிடையே நாகரீகம் சிறிது வளர்ச்சியடையத் தொடங்கிய காலகட்டத்திலே மனிதனுடைய தேவைகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அச் சந்தர்ப்பத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அடிப்படையிலே உற்பத்தி அமைந்தது. இதனால் கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பு வாய்ந்தனவாக அமையவில்லை. இக் காலகட்டத்தின் பிற்பகுதியிலே மனித தேவைகள் அதிகரிக்கவே அவன் பரும்படியாக்க உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டான். இச் சந்தர்ப்பத்தில் தான் ஆக்கியவற்றை வேறு ஒருவனுக்குக் கொடுத்து அவனிடம் உள்ளதும் தனது தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதுமான பொருட்களைப் பெற்றுக் கொண்டான். இதுவே பண்டமாற்று என அழைக்கப்பட்டது.

நாளடைவில் இப்பண்டமாற்றானது பல சிக்கல் வாய்ந்த அம்சங்களைக் கொண்டு காணப்பட்டது. சமூகத்திலுள்ள மக்கள் ஒன்றைக் கொடுப்பதற்கும் இன்னொருவர் அதை பெற்றுக்கொள்வதற்கும் தயாராக இருத்தல் வேண்டும். இன்னொரு வகையில் அப்படி அமையாவிடில் கொடுக்கல் வாங்கல் நடைபெறமாட்டாது. மாறாக பண்டைய சமூகத்தில் மக்கள் தமது சொத்துக்களைத் திரட்டி வைக்க முடியவில்லை. சுருக்கமாகக் கூறின் சேமிப்புக்கு ஏற்ற சாதனமில்லை. அதனால் அன்றைய சமூகத்தில் இன்றைய சமூகத்தைப்போல் ஏழை பணக்காரன் என்ற இடைவெளி அகன்று மனிதகுலம் மந்தைக் குலமாக மதிக்கப்படவில்லை. மற்றும் பண்டைய காலத்தில் ஒரு பொருளின் பெறுமானத்தை இன்ன அளவு என வரையறை செய்ய முடியவில்லை.

மேற்கூறிய குறைபாடுகளை நீக்கும் முகமாக தற்போதைய சமூகத்திலுள்ள பணமானது கண்டு பிடிக்கப்பட்டது. ஆகவேதான் இன்றைய சமூகத்தினை பணத்தாலான சமூகம் என அழைக்கக்கூடியதாக இருக்கின்றது. முதலாளித்துவத்தின் மறைகரம் இலாபம் என்பது போல் சமுதாயத்தின் மறைகரம் பணம் எனலாம். பணத்தாலேற்படும் மாற்றங்களும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சிறப்பாக விளக்கியதைத் தொடர்ந்து பணம் முக்கியத்துவம் பெறலாயிற்று. இத்தனை அம்சங்கள் பொருந்திய பணம் அண்மைக்காலங்களில் மரப் பலகைகளுக்கு பூட்டும் திருக்காணியாக மாறியதைக் கொண்டு பணத்தின் பெறுமதியை எளிமையான முறையில் விளங்கிக் கொள்ளலாம்.

தற்போதைய சமூகத்தில் பணத்தைப் பொருளாதார நிபுணர்கள் பின்வருமாறு வரையறை செய்கின்றனர். பணமென்பது எதனையெல்லாம் செய்கின்றதோ அது பணமாகும். இக்கருத்தின்படி பணத்தின் மூலம் ஒரு கொலையைச் செய்தால் அதுவும் பணமெனப்படும். இப்படிப் பல சாதனைகளைச் செய்ய பணம் தேவைப்படுவதால் மனித சுவாசத்திற்கு பிராணவாயு எவ்வளவு அவசியமோ அதேபோல் தற்போதைய சமூகத்தில் பணம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் பணம் என்ற சாதனம் கண்டுபிடிக்கப்பட்டது மாபெரும் தவறு. இப்பணத்தை நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிற்க வைத்தால் கட்டாயமாக இப்பணமானது சமூகத்திலிருந்து தகர்த்தெறியப்படும்.

இவ்வாறான பிரச்சனைகளை நீக்கும் முகமாக அரசு சில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. உதாரணமாக உயர்ந்த வரி விதிப்பின் மூலம் சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்க எடுக்கும் முயற்சிகளைக் குறிப்பிடலாம்

நவநாகரிக டிசைன்களிலான
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்



**சுஜாதா ஜுவலர்ஸ்**

214, கஸ்தூரியார், வீதி,

யாழ்ப்பாணம்.

நாதன் அப்பளம்

நாதன்ஸ் பெஷல்

நல்லெண்ணெய் தயாரிப்பாளரும்

உரிமையாளர்: சி. பரமநாதன்
விற்பனையாளரும்

**நாதன் ஸ்ரோர்ஸ்**

87/1, (213C) ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 7581.

With the best Compliments

from

**THE JAFFNA POLY TECHNIC Ltd.**

Clock tower Road,
(B.M.C. Lane)
Jaffna.

Branch: 148/19, Stanley Road,
JAFFNA.

With the Best Compliments

of

**HANSCO**

42, Clock Tower Road,
JAFFNA.

# வரவு செலவுத் திட்டமும் இலங்கையும்

ஆக்கம்: திரு. அ. குமாரவேலு
B.A. Hons.

எதிர்வரும் ஆண்டிற்கென அரசாங்கத்தினால் முன்மொழியப்படுகின்ற செலவு மதிப்பீடுகளையும் அவ்வாண்டிற்கென அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படுகின்ற வரவு மதிப்பீடுகளையும் உள்ளடக்கிய ஒரு அறிக்கை அல்லது ஆவணம் வரவு செலவுத்திட்டம் ஆகும். ஒரு நாட்டு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவ்வரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின் வெளிப்பாடாக வரவு செலவுத்திட்டம் அமைந்துவிடுகின்றது. நாட்டு அரசாங்கத்தின் நிதிக் கொள்கையினைப் பிரதிபலிக்கும் இவ்வாவணம் அரசியல் ரீதியில்கூட பெருமளவிற்கு விமர்சிக்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் கொடுப்பனவுகள் நடைமுறைக் கொடுப்பனவு, மூலதனக் கொடுப்பனவு என்ற இரு பிரிவிலும் வரவுகள் நடைமுறை வரவு, மூலதனவரவு என்ற இரு பிரிவிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. 1936-ம் ஆண்டின் பின்பு கெயின்சின் பொருளாதாரக் கருத்துக்கள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பரவலான விளைவுகளை அளித்தன. அத்தகைய விளைவுகளில் பற்றுக்குறை வரவு செலவுத்திட்டத்தைச் சாதாரண காலத்திலும் கையாள முடியும் என்ற நிலையைப் பல நாடுகள் ஏற்றுக்கொண்டன அல்லது அவ்வழியில் ஈடுபட்டன எனக் கூறின் அது ஒரு மிகையான கூற்றாகாது.

இலங்கையின் வரவு செலவுத்திட்டதின் பிரதான பிரிவுகள் எவை? நடைமுறைக் கொடுப்பனவு மூலதனக்கொடுப்பனவு என்றால் என்ன? என்பதைப்பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று. எமது வரவு செலவுத் திட்டத்தின் அண்மைக்காலப் போக்கு எத்தகையது? அத்தகைய போக்கை உருவாக்கிய நிலைப்பாடுகள் எவை? அவற்றின் விளைவுகள் எவை? எவ்வாறாக எதிர்காலத்தில் அமையலாம் என்பதைப்பற்றிய சுருக்கமான கருத்தைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஏறக்குறைய 56/57ம் ஆண்டில் இருந்து பற்றுக்குறை வரவு செலவுத்திட்டப் போக்கையே இலங்கை அனுபவித்து அல்லது அனுபவிக்கவேண்டிய நிலையினுள் இருந்து வந்துள்ளது. அரசாங்க வருமான அதிகரிப்பு வீதத்தைவிட பன்மடங்கு வீதத்தால் அரசின் செலவுகள் அதிகரித்து வந்துள்ளன. இலங்கை அரசாங்கத்தின் செலவுகள் அதிகரித்து வந்தமைக்குப் பல காரணங்கள் இருந்து வந்துள்ளன.

தொடர்ச்சியான சனத்தொகையின் அதிகரிப்பு அரசின் பராமரிப்புச் செலவினங்களை உயர்வடையச் செய்துள்ளது. இலங்கையின் சனத்தொகையின் பருமன், அதன் வளர்ச்சி வீதம், அதன் வயதமைப்பு ஆகியன எமது பொருளாதாரத்தின் இயல்பு, அமைப்பு, பாங்கு, தன்மை ஆகிய குணம்சங்களுக்கு மாறுபாடான அல்லது எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தென்படுகின்றது. அரசாங்கத்தின் சமூகநலனோம்புச் செலவினங்கள் அண்மைக்காலத்தில் பெருமளவிற்கு அதிகரித்து வந்துள்ளன. இவ்வாறான செலவினங்கள் விரும்பத்தக்கவையா அல்லது விரும்பத்தகாததா என்பதைப் பொருளியல் கண்கொண்டு ஆராய்தல் பொருத்தமானதா என்ற பிரச்சனையும் கவனத்தில் எடுத்தல் வேண்டும். உண்மையில் பொருளியல் கண்கொண்டு மட்டுமல்ல அரசியல்க் கண்கொண்டும் ஆராயவேண்டியுள்ளது. நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பினூடாக ஆராய்கின்ற பொழுது இச்செலவினங்கள் தவிர்க்க முடியாததாக அல்லது அரசியல் செல்வாக்கைப் பெறுவதற்காகத் தேவைப்படுகின்றன. கல்வி, சுகாதார உணவு மான்ய, ஏனைய சமூக நேரடி நிவாரணங்களுக்காக செலவிடப்படும் தொகையின் பெரும்பங்கை அரசின் செலவில் ஈர்த்துக்கொள்ளுகின்றன. மொத்த நடைமுறைக் கொடுப்பனவுகளில் மாற்றல்

கொடுப்பனவுகளான, உணவு உதவு தொகைகள், ஓய்வுகாலச் சகாய நிதி, பொதுக் கடன் மீதானவட்டி ஆகியவை ஏறக்குறைய 50% த்தை அபகரித்து விடுகின்றன. மிக நீண்ட காலமாகத் தனியார்துறை தேக்கமடைந்து இருந்த நிலையில் பெருகிவரும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காகவும் அண்மைக்காலத்தில் அரசின் மூலதனச் செலவுகளும் அதிகரித்துள்ளன. நடைமுறையில் இருக்கும் பொருளாதார நிகழ்ச்சிகளினூடாகச் சேமிப்பை அதிகரிப்பதற்காக அரசு மேற்கொண்ட வட்டிவீத உயர்வு அரசின் கடன் செலவுகளை அதிகரித்துள்ளது. அத்துடன் வருடா வருடம் திரும்பச் செலுத்தவேண்டிய கடனின் அளவும் அதிகரித்து வந்துள்ளன. அரசாங்கத்திற்கு வருமான மூலங்களாக இருக்கவேண்டிய பல கூட்டுத்தாபனங்கள் இன்று அரசின் செலவின் மூலங்களாக உள்ளன. 1978-ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒவ்வொரு பேருந்துக்கும் 11 ஊழியர் காணப்படுகின்றனர். மேலதிக ஊழியம் பல கூட்டுத்தாபனங்களில் இருத்தல் அரசியல் ரீதியில் நியாயப்படுத்தப்பட்டாலும் சிக்கன இயல் என்ற வகையில் பொருளியலினூடாக ஆராய்கையில் இது ஓர் அரசியல் விபசாரமேயாகும். இந்த வகையில் கூட்டுத்தாபனங்கள் பல நட்டத்தில் இயங்குதல்கூட அரசின் செலவுகளை அதிகரித்துள்ளது. எந்த வகையிலும் செலவு அதிகரித்த வகையில் வருமானம் அதிகரித்திருப்பின் அரசாங்கம் பிரச்சனைகளுக்குட்பட முடியாது. வெளிநாட்டுக் கடன்களைப் பொறுத்த வரையில் பெருமளவுக்கு அதனை இலங்கை இன்று பெறக்கூடியதாக இருத்தல் பெருமைப்படக்கூடிய ஒன்றாக இருப்பினும் அதனைப் பெறவேண்டி இருத்தல் வெட்கப்படவேண்டிய ஒன்றாகும். எந்த நிலையில் ஆராய்கின்ற பொழுதும் இவ்வாறான சூழ்நிலைகள் அரசாங்கத்தின் செலவின் மீது ஒரு தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. அதனால் பற்றுக்குறை வரவு செலவுத்திட்டங்கள் தொடர் விளைவுகளாக அமைகின்றன. பின்வரும் புள்ளிவிபரங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன.

| ஆண்டு | அரசிறை | செலவு | தேறிய பணக் குறை |
|---|---|---|---|
| 1957-58 | 1280.0 | 1502.3 | 222.3 |
| 1958-59 | 1330-4 | 1743.8 | 418.4 |
| 1959-60 | 1403-8 | 1821.3 | 417.5 |
| 1960-61 | 1513.9 | 1976.4 | 462.5 |
| 1961-62 | 1620.6 | 2076 6 | 556.0 |
| 1962-63 | 1593.4 | 1985.3 | 391.9 |
| 1963-64 | 1759.0 | 2220.7 | 461.7 |
| 1964-65 | 1816.4 | 2246.8 | 430.4 |
| 1965-66 | 1833 3 | 2399-3 | 566.0 |
| 1966-67 | 1954.8 | 2561.6 | 606 8 |
| 1967-68 | 2156.4 | 2872 1 | 715.7 |
| 1968-69 | 2497.3 | 3284.9 | 787.6 |
| 1969-70 | 2736.4 | 3672.0 | 935.6 |
| 1970-71 | 2815.3 | 3898.6 | 1083.3 |
| 1971-72 | 4102.0 | 5396.8 | 1294.7 |
| 1973 | 4034.0 | 5025.7 | 991.7 |
| 1974 | 4787.0 | 5821.7 | 1024.8 |
| 1975 | 5083.5 | 7186.6 | 2103.1 |
| 1976 | 5738.9 | 8653.0 | 2914.4 |
| 1977 | 6686 0 | 8761.2 | 2126.8 |
| 1978 | 11632.5 | 17774.5 | 6140.0 |
| 1979 | 11431.0 | 18086.4 | 6655.4 |

(மில்லியன் ரூபாய்களில்)

மேற்காட்டப்பட்ட அட்டவணை தொடர்ச்சியாக இலங்கை பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கடைப்பிடித்தமையும், குறைநிலை நிதி அதிகரித்து வந்துள்ளதையும் 70-ம் ஆண்டுகளில் பற்றுக்குறையின் பங்கு பெருமளவிற்கு அதிகரித்துள்ளதையும் காட்டுகின்றது. குறை நிலைக்கு நிதிகாணுவதற்கு வெவ்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டுள்ளன. நாணய வெளியீடு, கடன் தொழிற்பாடுகள், உதவிகள் கொடைகள் ஆகிய வெவ்வேறு வழிகள் இதற்காக நாடப்பட்டுள்ளன. உள்நாட்டில் கடன்களைத்திரட்டுவதில் சந்தைக்கடன்கள், சந்தையில்லாக் கடன்கள் ஆகியவை நாடப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் தனக்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்கு மத்திய வங்கியின் முற்பணங்கள், திறைசேரி உண்டியல்கள், ரூபாய் ஆவணவெளியீடு, வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ஆகிய கருவிகளைப்

பயன்படுத்துகின்றது. பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கையாழுகின்ற பொழுது அதன் விளைவுகள் பலவகைப்பட்ட தாக இருக்கமுடியும், மொத்த வரவுசெல வுத் திட்டத்தின் பருமன் எவ்வளவு அதில் பற்றுக்குறையின் விதம் என்ன? இப் பற்றுக் குறை தேசிய வெளியீட்டில் வகிக்கும் பங்கு என்ன? என்பது போன்ற விடயங்களும் நிதியீட்டம் செய்வதற்காக உபயோகிக்கப் பட்ட வழிகள் எவை என்பது போன்ற நட வடிக்கைகளின் அடிப்படையில் விளைவுகள் உருவாகக்கூடும். பயன்படுத்தாத மூலவளங் களைப் பயன்படுத்தவும், சமூகஏற்றத்தாழ்வை நீக்கவும், மக்களின் பொதுவான வாழ்க்கை யின் குணநலன்களை முன்னேற்றவும், பொது வாக வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளமக் களை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லவும், வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும், வேறு பல விளைவுகளையும் இது தரக்கூடும். இதன் கருத்து இலங்கையில் இத்தகைய வரவு செலவுத் திட்டம் இதுமாதிரியான விளைவு களை உருவாக்கியதென்பதல்ல உருவாக்கும் நோக்கத்தை அது கொண்டிருந்தது எனில் அது தவறல்ல. இத் திட்டத்தின்கீழ் விளை வுகள் தீமையாக அமைவதற்கு காரணம் நிதியீட்ட வழிகள் ஆகும் பண நிரம்பலின் விரிவின் மூலம் நிதியீட்டம் நடைபெற்று வந்தமை இலங்கையின் வாழ்க்கைச்செலவு உயர்விற்கு ஓர் காரணமாக அமைந்ததென் பதை மறுக்கமுடியாது. ஆயினும் சில நன்மையான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. என்பதையும் ஏற்கமுடியும்.

---

# ஐக்கியம் தவறு

ஆக்கம்: செல்வன். க .ஞானதேவன்
(வர்த்தக பிரிவு, 2-ம் வருடம்)

நெற்பயிர் ஒரு சேர
நீண்ட அரிவாளோ
பற்கள் உடைந்து
பறந்து விட்ட......
கதையுண்டு!
மக்கள் முன்......
தந்தை என்றே
மருவவைத்த குச்சி சில
கைக்கிதமாய் உடையவில்லை
கற்பித்தார் தத்துவமாம்
அதுமட்டுமல்ல:.....
அடம்பன் கொடி திரண்டால்...
அதிலும்
மிடுக்கென்பார்
பசுக்கள் பல கூடிப்
பாய் புலியை
எதிர்த தென்பார்......
அவர்தினை
இவை திரண்டால்
அதுவே உதாரணமாம்...
மாணவர்கள்
நாம் திரண்டால்......
மா தவறும்
ஏன் இதுவோ?

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு
நாட்டின் நற்பணிக்கே உதவுகின்றது.

**மில்க்வைற்** தொழிற்சாலை

த.பெ. 77 யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233.

With the Best Compliments

from

**CAMBRIDGE**
**TUTORIAL COLLEGE**

*44, Stanley Road,*
*Jaffna.*

With the Best Compliments

from

**MASTER INSTITUTES**

*B.M.C. Lane, Jaffna.*

*With the best Compliments*
*from*

*Jewelleries*

*Sovereigns*
*and*
*Brilliants*

**K.T.M. JEWELLERS**
*67, Kannathiddy,*
*Jaffna.*
Phone; 286

# இலங்கையில் திட்டமிடல்

ஆக்கம்: திரு. கே. ரஞ்சித்
B,A HONS (ECON)

இலங்கையில் 1948-ம் ஆண்டில் திட்டமிடல் முயற்சிக்கான ஆரம்பம் காணப்பட்டாலும் 1954-ம் ஆண்டிலேயே திட்டமிடல் நடைமுறைப் படுத்தப்பட ஏதுவாயிற்று. இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளை நிவிர்த்தி செய்ய வேண்டுமாயின் அதன் அடிப்படைப் பொருளாதார அமைப்பை மாற்ற வேண்டுமென்ற கருத்து பரவலாகக் காணப்பட்டது. சமவுடமைப் பண்பினைப் பிரதிபலிக்கும் திட்டமிடல், வளர்முக நாடுகளில் தேசிய பொருளாதார திட்டமிடல் என மாறியது.

தேசியப்பொருளாதார திட்டமிடல், என்பது பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி என்ற இலக்குகளை மையமாகக் கொண்டு நாட்டிலே கிடைக்கக் கூடிய மூலவளங்களை அல்லது ஆக்க சாதனங்களை இணைவு படுத்துகின்ற முயற்சியாகும். விலைப் பொறிமுறையின் தளம்பலான பொருளாதார வளர்ச்சியினை நீக்கி துரிதமான பொருளாதார வளர்ச்சியினை அடைந்து கொள்ளும் நோக்குடன் தேசியப் பொருளாதார திட்டமிடல் குழந்தைப்பருவ பொருளாதார நாடுகளால் கடைப்பிடிக்கப் படலாயிற்று. பொருளாதார வளர்ச்சி என்பது தேசிய வருமானத்தில் அல்லது தலாவருமானத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பைக் குறிக்கும், ஆனல் பொருளாதார அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் ஏனைய புறக்காரணிகளான கல்வி, அரசியல், சமூகம், கலாச்சாரம் வாழ்க்கை நிலைமைகள் போன்றவற்றில் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைக் குறிக்கும்.

இலங்கையில் வரலாற்று ரீதியாக திட்டமிடலை நோக்கும் பொழுது இதுவரை திட்டமிடலின் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை. 1954-ம் ஆண்டுக்குப் பின்பு 1956-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 10-ஆண்டுத்திட்டம் சில புறக்காரணிகளால் தோல்வியைத் தழுவியது. மீண்டும் 1971-ம் ஆண்டு உருவான ஐந்தாண்டுத் திட்டமும் பயங்கரவாதம், வெளிநாட்டு உதவி கிடைக்காமை, இயற்கை அழிவு அல்லது கடும் வரட்சி, அரசாங்கத் துறையில் நிலவிய அமுலாக்க தேக்க நிலைமைகள் போன்றவற்றின் காரணமாக வெற்றியளிக்கவில்லை.

இலங்கையில் மேற்கண்ட திட்டங்களைத் தவிர செயற்திட்டங்கள் அல்லது முன்னெறியங்கள் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கினைப் பெற்றன. உதாரணம் மகாவலி செயற் திட்டமாகும். இவ்வாறு திட்ட அமைப்பைப் பாகுபடுத்தினலும் உண்மையில் மூன்று விதமான பிரதான திட்டப்பிரிவுகள் காணப்படுகின்றது.

1. குறுங்காலத் திட்டம்
2. இடைக்காலத் திட்டம்
3. நீண்டகாலத்திட்டம்

குறுங்காலத் திட்டத்தின் மூலம் இடைக்காலத்திட்டம் வழி நடத்தப்பட்டு நீண்டகாலத்திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இவற்றுள் நீண்டகாலத் திட்டமே அதிக காலகட்டத்தைக் கொண்டுள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் நீண்டகாலத் திட்டம் குறிப்பிடத்தக்க செல்வாக்கை வகிக்கவில்லை.

இலங்கையில் இருவேறுபட்ட அரசாங்கங்கள் ஆட்சி நடாத்தி வருகின்றன. இவை முதலாளித்துவ, சமவுடைமைப் பண்புகளை சமநோக்குடன் அணுகாமல் அமுல் நடத்தாமல், மாறி மாறி முதலாளித்துவ பண்பு, சமவுடமைப் பண்பு ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இலங்கை ஒரு கலப்புப் பொருளாதார நாடு என்ற கருத்துக் காணப்படுவதற்கு முதலாளித்துவ, சமவுடைமைப் பண்புகள் சம ஆதிக்கத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனல் கலப்புப்

பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்புகள் சமநிலைமை அற்றுக் காணப்படுவதனுல் குழப்பமடைந்த கலப்புப் பொருளாதாரமாக இலங்கை காணப்படுவதை பொருளியலாளர் கள் அடிக்கடி எச்சரிக்கின்ருர்கள்.

உண்மையில் இலங்கை தேசிய பொருளாதார திட்டமிடலை கடைப்பிடிக்கத் தொடங்கியதிலிருந்து கலப்புப் பொருளாதாரம் என்ற தகுதியைப் பெற்றது. திட்டமிடல் இலங்கையில் துரித பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டுமானுல் தகுந்த முறையில் திட்டமிடல் அமுலாக்கம் செய்யப்படல் வேண்டும். இலங்கையின் பொருளாதார அமைப்பைப் பொறுத்தவரையில் திட்டமிடலின் மூலமே உண்மையான பொருளாதார சுபீட்சத்தை அடையலாம் என்ற கருத்து இன்று பரவலாகக் காணப்படுகின்றது.

குறைவிருத்தி நாடுகள் முதலாளித்துவத்தின் குறைபாடுகளை உணர்ந்து கொண்டமையினுல் திட்டமிடலினைக் கடைப்பிடிக்க பல முயற்சிகளை மேற்கொண்டன. இதன் காரணமாக நாட்டின் மூலவளங்களை ஒழுங்குபடுத்தி அதன்மூலம் தேசிய உற்பத்தியில் நாட்டு மக்களின் வருமான அதிகரிப்பிலும் அக்கறை காட்டத் தலைப்பட்டன.

டட்லி சியஸ் என்பவரின் கூற்றின்படி பொருளாதார அபிவிருத்தியின் நோக்கம் மனிதனின் உள்ளார்ந்த சக்திகளினுல் அவன் பூரணமான விருத்தியடைவதற்கும் தனது திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டுவதற்கும் துன்பத்தினைக் குறைத்து கூடியவரையில் இன்பத்தினை அனுபவிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தலாகும். உலகவங்கித்தலைவர் மக்ினமாராவின் கூற்றுப்படி தேசிய வருமானத்தில் குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி அடைதல் முக்கியம் ஆனுல் இந்த அதிகரிப்பு சமூகத்தின் பொருளாதார வசதியைப் பொறுத்தவரையில் கீழ் மட்டத்தில் இருக்கும் மக்கள் மேலெழும் போதுதான் உண்மையான அபிவிருத்தி ஏற்படும். இக்கூற்றுக்களிலிருந்து வறுமை எனும் நச்சுச் சுழலை உடைப்பதற்கு அல்லது அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு திட்டமிடல் ஓர் ஆயுதமாகக் காணப்படலாம். இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு திட்டமிடலினூடாக கிடைக்கக் கூடிய மூலவளங்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டியது அவசியம். இலங்கையின் திட்டமிடல் அமைச்சு இப்பணிகளைச் செய்யலாம்.

இதுவரை இலங்கையின் திட்டமிடல் வரலாற்றையும் அதன் தன்மையையும் சுருக்கமாக நோக்கினுலும் பொதுவாகத் திட்டமிடலின் ஆரம்ப நிலைமைகளையும் அவதானித்தல் வேண்டும். திட்டமிடலை வகுக்கும் பொழுது நாட்டின் சரியான கணிப்பீட்டு புள்ளி விபரங்களைச் சேர்த்துக் கொண்டு வரையறுக்கப்பட்ட காலத்துக்குள் தீர்மானங்களை இயற்றல் வேண்டும். பின்பு நிர்வாக அமைப்பு சிறப்பாக இயங்கும் போதுதான் திட்டமிடலின் குறிக்கோள் பூர்த்தியடையும். குறைவிருத்தி நாடுகளில் திட்டமிடலைப பொறுத்தவரையில் நிர்வாக அமைப்பு பல பிரச்சினைகளை ஏற்படுத்துவதோடு சிக்கல் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. ஆகவே திட்டக் குறிக்கோள், காலவரையறை, திட்டத்தின் வெற்றி ஆகியன இங்கு பிரதான பிரிவுகளாகும்.

மேலும் இலங்கையைப் பொறுத்தவரையில் 'கீழ்மட்டத்திலிருந்து திட்ட மிடல்' என்ற அம்சம் 1970-ம் ஆண்டுக்குப்பின் சேர்க்கப் பட்டாலும் கீழ் மட்டத்தில் வாழ்கின்ற பொதுமக்களின் விருப்பம் அல்லது ஆலோசனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதுவும் முக்கிய ஒரு குறைபாடாகும். தொகுத்து நோக்கின் குறைவிருத்திப் பொளாதாரப் பண்புகளை, அல்லது போத்தல் கழுத்துப் பண்புகளை (Bottle necks) உடைப்பதற்குத் தேசியப் பொருளாதாரத் திட்மிடலின் உறுதுணை அவசியம்.

# சுதந்திர வர்த்தக வலயம்

ஆக்கம்: செல்வி. சி. கலாதேவி
(வர்த்தக பிரிவு 2-ம் வருடம்)

சுதந்திர வர்த்தக வலயமானது 1949-ம் ஆண்டில் முதன் முதலில் அயர்லாந்திலுள்ள சணன் என்ற பிரதேசத்தில் உருவாக்கப்பட்டது. வெளிநாட்டு முதலீடுகளைக் கவரக்கூடிய முறையிலும் கட்டுப்பாடற்றதுமான கைத்தொழிற் பேட்டையையே இது குறிக்கின்றது. இன்றைய உலகில் நாற்பதுக்கு மேற்பட்ட வலயங்கள் காணப்படுகின்றன. மேலும் கட்டில்லா வர்த்தக வலயம் என்னும் கருத்தினை ஆராய்கின்ற பொழுது உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்யக் கூடியதும், ஏற்றுமதி இறக்குமதித் தடைகள் அற்றதும், தீர்வைகளற்றதுமான ஓர் பிரதேசமாகும். இவ்வலயம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் அவ் நாட்டின் சாதாரண சட்டங்கள் கூட செயற்படமாட்டாது.

இவ்வாறான வலயங்கள் ஒரு நாட்டில் எத்தனையும் காணப்படலாம். உதாரணமாக தாய்லாந்தில் மூன்று வலயங்கள் காணப்படுகின்றன. அடுத்து சிங்கப்பூர் நாடுமுழுவதும் ஓர் சுதந்திர வர்த்தக வலயமாகவே அமைந்துள்ளது. இவ்வாறான வலயம் அமைவதற்கு ஒரு நாட்டில் சில சாதகமான சூழ்நிலைகள் காணப்படவேண்டும். எந்த ஒரு நாட்டிலும் இவ்வலயத்தை அமைப்பதற்கு குறைந்த விலையில் தரமான மனித வலுவைப் பெறக்கூடியதாக அமைதல் வேண்டும் ஓரளவுக்கேனும் மூலவளங்கள் காணப்படவேண்டும். இவை மட்டுமல்லாது போக்குவரத்து வசதிகள். அடிப்படை முதலீட்டு வசதிகள், செய்தித் தொடர்புகள் ஓரளவுக்கேனும் காணப்படவேண்டும்.

இவ்வாறான சூழ்நிலைகள் இலங்கையில் ஓரளவுக்காயினும் காணப்படுவதால் 1977-ம் ஆண்டு பதவிக்கு வந்த புதிய அரசு முதன் முதலாக இலங்கையில். சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவத் திட்டமிட்டது. இதன்படி 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் அரசாங்கம் உத்தியோக பூர்வமாக சுதந்திர வர்த்தக வலய பிராந்தியத்தினை கட்டுநாயக்க 200 ஏக்கர் பிராந்தியத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தது கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவிடம் இத்திட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கொள்கைரீதியான திட்டங்களாவன தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆண்டிலிருந்து முதல் பத்து ஆண்டுகள்வரை வரி விடுதலை அதன்பின் சலுகையுடன் கூடிய மொத்த விற்பனைவரி இறக்குமதி, ஏற்றுமதித் தீர்வைகள், துறைமுகக் கட்டணங்கள் போன்றவற்றிலிருந்து விதிவிலக்கு. வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் செலாவணிக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

தற்பொழுது ஏறக்குறைய 100 ஏக்கர் நிலப்பரப்பில் மொத்தம் 76 தொழிற்சாலைகள் இயங்குவதாக அமைகின்றது. இதன் தலைவராக திரு. உபாலி விஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான வலயத்தை இலங்கையில் அமைப்பதனால் பல நன்மைகளைப் பெறக்கூடிய சாத்தியம் உண்டு. இவ்வலய அமைவினால் அந்நிய செலாவணி வரவுகள் அதிகரித்துச் செல்லும். அதாவது வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையினுள் வருகின்றபொழுது அந்நிய செலாவணியைக் கொண்டு வருகின்றன. இலங்கையின் ஏற்றுமதியானது, பன்முகப்படுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும். அதாவது ஏற்றுமதியில் கைத்தொழிற் பொருட்கள் அதிகரித்துச் செல்வதனால் ஏற்றுமதியானது அதிகரித்துச் செல்லும் இதனூடாக இலங்கையில் பயன் படுத்தாத மூல வளங்களைப் பயன்படுத்த வாய்ப்புண்டு. இதனால் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் இதனால் வேலையற்றோர் பிரச்சனை ஓரளவுக்கேனும் தீர்வடையும் தொழில்நுட்ப நிர்வாக அறிவு பரவலடையும் இதனால் நவீன தொழில் நுட்பங்களை நீண்ட காலத்தில் நாம் பெறக்கூடியதாக இருக்கும். மேலும் இவ்வலயமானது அமைகின்ற பிரதேசம் நவீன வளர்ச்சியைப் பெறக்கூடிய வாய்ப்பு உண்டு. இவற்றின் காரணமாக இலங்கை அரசின் வருமானம் உயர்வதுடன் தேசிய வருமானமும் உயர்வதுடன் செல்லும்.

இவ்வாறான வலய அமைப்பினால் பல நன்மைகள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பல தீமையான விளைவுகளுமுண்டு என்று கூறலாம். இவ்வலய அமைவினால் உள்நாட்டு அரசியல் இறைமை பாதிப்பாக அமையலாம். அதாவது வெளிநாட்டு முதலீடுகள் தம்முடைய முதலீடுகளுக்குப் பாதுகாப்பைப் பெறுவதற்காக உள்நாட்டு அரசியலில் தலையிடலாம். இதன் காரணமாக உள்நாட்டு அரசியல் இறைமை பாதிப்படையலாம். வெளிநாட்டு முதலீடுகளின் அடிப்படை நோக்கம் இலாபம் பெறுவதாகும். இவ் இலாபத்தைப் பெற வேண்டுமென்பதற்காக இம்முதலீடுகள் தொழிற்சுரண்டல், மூலவளச் சுரண்டல் ஆகியவற்றில் ஈடுபடும். இச்சுரண்டலின் மூலமாக நாட்டின் நலன்கள் பாதிப்பாக அமையலாம். இவ் வலயத்தினால் தொடர்ந்து வெளிநாட்டு முதலீடுகளின் ஊடாக இலாபம் வெளியேறுவதால் இறுதியில் எமது நாட்டின் மூலதன ஆக்கம் குறையுமெனலாம் எமது நாட்டின் கலாச்சாரமும் பாதிப்படையும்.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின்கீழ் செயற்பட்டுவரும் சுதந்திர வர்த்தக வலயம் துரித முன்னேற்றமடைந்து வருவதாக புள்ளிவிபரத் தகவல்கள் காட்டுகின்றன. தொடக்கத்திலே அதாவது 1978-ம் ஆண்டின் முடிவில் கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவானது ரூ. 7,16,240 இலட்சம் முதலீட்டுடன் 52 கைத்தொழில்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 74 சதவீதமானவை வெளிநாட்டு முதலீடாகும். இவற்றுள் 32 கைத்தொழில்கள் பிடவைக் கைத்

தொழிலைச் சார்ந்ததாகும். ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது சுதந்திர வர்த்தக வலயம் விரைவான முறையில் வளர்ச்சியடைந்து சென்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அனுமதிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டங்களில் 43 திட்டங்கள் இதுவரை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. 14 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன 22 தொழிற்ச்சாலைகளுக்கான நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

எனவே இத்தகைய தன்மை கொண்ட எமது நாட்டின் சுதந்திர வர்த்தக வலயம் இன்று தனது ஆரம்ப நிலையிலேயே உள்ளது. ஆகவே பரீட்சாத்தகரமாக எமது நாட்டிலுள்ள சுதந்திர வர்த்தக வலயம் தனது பங்களிப்பினை எமது நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையப் போகின்றது என்பது அதன் வளர்ச்சியில் தங்கியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---


வர்த்தக மாணவர் மன்றம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து
வணிக ஒளி சிறப்புற வெளிவர
எமது ஸ்தாபன உரிமையாளரினதும் ஊழியர்களினதும்
நல்லாசிகள்

சித்திரா அச்சகம்,

310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். போன்: 7618

# இலங்கையின் பொருளாதாம்

ஆக்கம்: செல்வன். சு. கிருஷ்ணகுமார்
(வர்த்தக பிரிவு, 2-ம் வருடம்)

இலங்கை சுதந்திரமடையமுன் அந்நியர் ஆட்சியினுல் பெற்றுக்கொண்ட அடிப்படைப் பலவீனங்கள் பல சரித்திர ரீதியாக இலங்கையின் பொருளாதாரத்தை அவதானிக்கும் பொழுது அது விவசாயப் பொருளாதாரமாக அதாவது கிராமியப் பொருளாதாரமாகவே இருந்து வந்துள்ளதென்பதை அறிய முடிகின்றது. இதற்குச் சான்ருக பல நூற்ருண்டுகாலமாக சிறிய நீர் நிலைகளினை ஒன்ருேடு ஒன்று தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்பட்ட பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களைக் காட்டலாம். இப் பொருளாதாரத்தின் முக்கிய உணவுப் பயிராக நெல் காணப்பட்டது.

கி. மு. 5ம் நூற்ருண்டளவில் இலங்கையில் பணப்புழக்கம் ஏற்பட்டதாக தொல் பொருளாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதன்பின்பும் நீண்டகாலமாகப் பண்டமாற்றுப் பொருளாதாரம் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. உள்நாட்டு வர்த்தகத்தில் மட்டுமன்றி வெளிநாட்டு வர்த்தகத்திலும் இந் நிகழ்ச்சியே காணப்பட்டது. பெரும்பாலும் அக்காலத்தில் காணப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதிகள் வருமானம் கூடிய வர்க்கத்தின் நுகர்வுப் பொருட்களாக அமைந்தது.

16ம் நூற்ருண்டளவில் இலங்கையின் பொருளாதாரத்தில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டன இக்காலப்பகுதியில் போத்துக்கேயரின் இலங்கை வருகை மேற்கு நாடுகளுக்கிடையே ஒரு பிரதான வர்த்தக தூதாக அமைந்தது. இவர்களின் ஆடம்பர நுகர்ச்சிப் பொருளாகிய கறுவாவைச் சேர்ப்பதற்காக இலங்கை வந்த போத்துக்கேயர் தமது பொருளாதார வளர்ச்சி கருதி இலங்கையில் அரசியல், சமூக, கலாச்சார அமைப்புக்களிலும் குறுக்கிட்டனர். போத்துக்கேயரின் வருகையே இலங்கையின் திரிபுப் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்பமெனலாம். இதன் பெறுபேருக இலங்கையின் பொருளாதாரம் சுய தேவையினின்றும் திசை திருப்பப்பட்டு ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாக மாறியது. இலங்கையிலுள்ள வளங்களை சூறையாடினரே தவிர இலங்கையை ஒரு வளம்மிக்க நாடாக அவர்கள் மாற்ற முயலவில்லை.

1840ம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சியானது எமது பொருளாதாரத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தின இதனூடாக பெற்ற அடிப்படைப் பலவீனங்கள் தற்பொழுது இலங்கையின் பொருளாதாரத்தை பெருமளவு தளம்பும் தன்மைக்கு கொண்டுவந்துள்ளதைக் காணலாம். உதாரணமாக ஏற்றுமதியால் தற்பொழுது 60% வகிக்கும் தேயிலையின் உலக சந்தைவிலை விழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களைக் கூறலாம் ஆங்கிலேயர் தம்மிடமிருந்த செல்வாக்கின் காரணமாக உள்நாட்டு விவசாயத்துறையைப் புறக்கணித்து எதிராக பெருந்தோட்ட அமைப்பினை சிறப்பாக இயக்கினர். இதனுல் இலங்கையின் பொருளாதாரம் முற்ருக பெருந்தோட்டப் பொருளாதாரமாக மாறியது.

இலங்கையின் பொருளாதார வரலாற்றைக் கொண்டு நோக்கும்பொழுது இரட்டைப் பொருளாதாரமாகவும் அதேவேளையில் ஏற்றுமதிப் பொருளாதார அமைப்பாகவும் உள்ளது.

19ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பெருந்தோட்ட வளர்ச்சியின் காரணமாக இன்றைய இலங்கையின் பொருளாதாரம் இரட்டைத்தன்மையினைக் கொண்டதாக மாற வழிவகுத்தது.

1. நவீனதுறை என அழைக்கப்படும் அந்நிய ஆதிக்கப் பொருளாதாரம்.

2. பழமையைப் பேணி வந்த கிராமியப் பொருளாதாரம்.

நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட துறை ஒருபக்கம் அமைய குடித்தொகையில் 65% மும் ஊழியப்படையில் 50 சத விதத்தினரையும் கொண்ட விவசாயத்துறை மறுபக்கம் காணப்பட்டது பெருந்தொகை ஊழியர்களை உள்ளடக்கியதாக அமைந்த நிலையிலும் இதன் வளர்ச்சி பிழைப்பூதிய நிலையிலேயே காணப்பட்டது. இவ்வாறே இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரம் என வரையறை செய்யப்படுகின்றது.

தற்பொழுது இலங்கையில் மக்களுக்கு தேவையான பொருட்களை பெரும்பாலும் இறக்குமதி மூலமே பூர்த்தி செய்கின்றோம் அத்தியாவசிய பண்டங்களான அரிசி, மா, சீனி, பிடவை போன்ற நுகர்வுப் பொருட்கள் மட்டுமன்றி கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலதனப் பொருட்களும் நடுத்தரப்பொருட்களும் இறக்குமதிமூலமேபெறப்படுகின்றன. இலங்கையின் ஏற்றுமதித்துறையினை மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் மரபு ரீதியான ஏற்றுமதிகள் என வகுக்கலாம்.

மரபுவழி ஏற்றுமதிப் பொருட்கள் என்பது இலங்கை நீண்டகாலமாக ஏற்றுமதி செய்து வருகின்ற தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய மூன்று பொருட்களையும் குறிப்பிட்டு நிற்கின்றது. இப் பொருட்கள் மொத்த ஏற்றுமதியில் 90% வகித்தன மேலும் மரபு ரீதியற்றவை என தற்பொழுது இலங்கை ஏற்றுமதி செய்யும் இரத்தினக்கல், தைத்த ஆடை, கடலட்டை போன்றனவற்றைக் குறிப்பிடும் இவை மொத்த ஏற்றுமதியில் 10% ஆகும் எது எவ்வாறு இருப்பினும் இலங்கையின் மொத்த ஏற்றுமதியை நிர்ணயிக்கும் சக்தி தனித்த ஓர் பொருளாகிய தேயிலையிலேயே உண்டு. இதன் அண்மைக் கால விகிதாசாரம் மொத்த ஏற்றுமதியில் 40 சத விகிதமாகும்.

தற்பொழுது இலங்கையின் பொருளாதாரத்தை குறைவிருத்திப் பொருளாதாரமென வரையறை செய்யக் காரணம் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் பார்க்க இலங்கையின் தலா வருமானம் குறைவாகக் காணப்படுதலேயாகும். எமது நாட்டு உற்பத்தித் திறன் குறைவடையக் காரணம் தொழில் நுட்ப சாதனங்களின் பற்றுக்குறையாம். தற்பொழுது இலங்கையின் முதலீடுகளுக்குத் தடையாக வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவும், பெருகும் குடித்தொகையின் வேகமும் அமைந்துள்ளன. மூலதனமின்மையும் தொழில் நுட்ப வசதிப் பற்றுக்குறையும், உற்பத்தி வளங்களின் முழுமையான உற்பத்தியை பெறமுடியாதிருக்கின்றது.

கடந்த 20 ஆண்டுகளில் இலங்கையின் தேசிய வருமானத்தின் வளர்ச்சி வீதமானது 4% ஆகும் 1977ம் ஆண்டு பதவிஏற்ற அரசின் நடவடிக்கைகள் காரணமாக தேசியஉற்பத்தி அதிகரித்துள்ளது. விவசாயத்துறையின் பங்கு குறைவடைந்து ஏனைய துறைகளின் பங்கு அதிகரித்துள்ளது. வருமானப் பங்கீடு சமமற்றுக் காணப்படுகின்றது. தலாவருமானம் முன்னையதைவிட அதிகரித்துள்ளது. குறிப்பாக இலங்கையின் கைத்தொழில்கள் மேல் மாகாணத்தில் கொழும்பைச் சுற்றிவர அமைந்துள்ளன. இவற்றிற்கு தேவையான மூலப் பொருட்களை 75% ஆனவை இறக்குமதி மூலமே பெறப்படுகின்றது. இவற்றைத் திரட்டும் தந்திர உபாயமாக குறிப்பாக மூலதனத்தினை திரட்டும் முகமாக உருவாக்கப்பட்டதே சுதந்திர வர்த்தக வலயமாகும்.

ஆரம்பகாலத்தில் இலங்கையின் வர்த்தகப் போக்குகள் முதலாளித்துவ நாடுகளுடனும் பின்னர் மூன்றும் மண்டல நாடுகளுடனும் அண்மைக் காலங்களில் முதலாளித்துவ நாடுகளுடனும் மாற்றமடைந்துள்ளது. வர்த்தக மாற்றுவிகிதம் தொடர்ந்து பாதகமான போக்கினையே கொண்டுள்ளது. ஏற்றுமதி விலை அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதி விலைகள் பெருமளவு அதிகரித்துச் செல்கின்ற காரணமே இதற்கான காரணமாகும்.

சென்மதி நிலுவையைப் பொறுத்தவரையிலும் இது பாதகமான விளைவினையே காட்டுகின்றது. இப்பற்றாக்குறை வெளிநாட்டு, உதவிகளாலும், கடன்களாலும் நிரப்பப்படுகின்றமை எதிர்காலத்தில் பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும்.

இலங்கையின் அந்நிய செலாவணிப் பிரச்சனை நீண்டகாலமாக காணப்படுவதுடன் வெளிநாட்டுச் சொத்துக்கள் பெருமளவு குறையவும் காரணமாகின்றது. இச் செலாவணிப் பற்றாக்குறை நிலவ ஏற்றுமதி உழைப்புக்களின் வீழ்ச்சியும் இறக்குமதி விலைவாசி ஏற்றமும் காரணங்களாகும். உலக சந்தையில் இலங்கையின் இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் பெருமளவு அதிகரித்துச் சென்றமையே வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சிக்கு மூலகாரணியாகும். ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் இறக்குமதிச் செலவைக் குறைப்பதும் செலாவணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வழியாகும்.

இலங்கையின் பணநிரம்பலானது கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துச் செல்கின்றது. இவ்வதிகரிப்பானது பணவீக்க நிலையை உருவாக்கியுள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் விலைமட்டங்கள் கடந்த 20 ஆண்டுகாலப் பகுதிகளில் சராசரி 6% ஆல் அதிகரித்துச் சென்றுள்ளதைக் காட்டுகின்றது.

அதிகரித்த பிறப்பு வீதமும் குறைந்த இறப்பு விகிதமுமே இலங்கையின் குடித்தொகைப் பெருக்கத்திற்கு அடிப்படைக் காரணமாகும் இது 15 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட பாட்டாளி வர்க்கமானது ஒப்பீட்டு ரீதியில் குறைவாக காணப்படுகின்றது. பெருகும் குடித்தொகையை கட்டுப்படுத்தல் ஒன்றே இலங்கையின் பொருளாதாரத்தை சுபீட்சமாக வழிநடத்தவல்ல கோலாக அமையும்.

# மலர்க்குழுவினர் 1981

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர்: | திரு. எஸ். சந்திரபோஸ் |
| பிரதம ஆசிரியர்கள்: | செல்வன். அ. அமிர்தரஞ்சன்<br>செல்வி. ந. வத்சலகுமாரி |
| துணை ஆசிரியர்: | செல்வன். சு. இருஷ்ணகுமார் |
| குழுச் செயலாளர்: | செல்வன். ப' சிவலிங்கம் |
| உறுப்பினர்கள்: | செல்வன். ஆர். விஜயன்<br>கே. குலேன்<br>இரா. ரவிந்திரன்<br>செல்வி. க. கௌரி<br>கே. சித்தி நுவைசா<br>ஆர். சாந்தினி<br>எஸ். சநூரியா<br>எம். இந்திராணி<br>பி. சுகந்தி |

# நன்நாள் எந்நாளோ?

ஆக்கம்: செல்வன். A.T. பாலகணேசன்
(வர்த்தகப்பிரிவு 2-ம் வருடம்)

''ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'' என்ற உண்மையை உணர்ந்திருந்த போதிலும் ஆறறிவு படைத்த மனித சமூகம் இன்றும் பல்வேறு காரணங்களினால் முரண்பட்டுக்கொண்டே வருகின்றது. முரண்பாடுகளின் இறுதி விளைவே பேரழிவு ஆகும். தன்னைப் போலவே மற்ற மனிதனுக்கும் உரிமைகளுண்டு என்ற ஜனநாயகத் தத்துவத்தைக் கூட மறந்து விடுவதால் அவை யுத்தங்களாகப் பரிணமித்து நாட்டின் அபிவிருத்திக்கே பங்கம் விளைவித்து விடுகின்றது. இதனால் பாதிக்கப்பட்ட நாடுகள் நீண்ட காலப் பயணத்தையே தொடர நேரிடுகிறது.

உலகே உயிரினங்களின் வாழ்வுக்கு உகந்ததல்ல எனக் கூறக்கூடிய மகா கொடூரமான நிலையைக்கூடத் தோற்றுவிக்குமளவு வலிமை பொருந்திய ஆயுதங்களையே மனிதன் பாவிக்குமளவுக்குக் கூட முரண்பாடுகள் கூர்மையடையலாம்.

எத்தனையோ நடந்து முடிந்த யுத்தங்களை எண்ணிப்பார்க்கும்போது அவை ஏற்படுத்திய பாரதூரமான விளைவுகள் மீட்சி பெறுவதற்கே முடியாத நிலைக்கு உந்தப்பட்டுள்ளன. உலகயுத்தம் என்றும் உள்நாட்டுக் கலவரம் என்றும் நடைபெறும் போர்கள் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தின ஏற்படுத்துகின்றன, ஆகவே இனிமேலும் இது போன்ற விளைவுகள் ஏற்படுமா? என வினாவினால் இல்லை என்ற கூற்றை துணிந்து கூறுவது பொருந்தாக் கூற்றாகவே தோன்றி வருகிறது.

அண்மையில் நடந்து கொண்டிருக்கும் ஈராக் ஈரான் யுத்தம் சிறந்த ஒரு பாடத்தை கற்பித்திருக்குமா?

பொருளாதாரப் பிரச்சனைகள் மக்கள் மத்தியில் தலைகாட்டத் தொடங்கியதோ அன்றே போராட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. பற்றுச்குறை அமைப்புக்களும் தமது பலவீனங்களை மறைப்பதற்காக மக்களிடையே போட்டியை வளர்த்துவிடுகின்றன. இதன்மூலம் மக்கள் வாழ்வின் ஒவ்வொரு தேவைகளுமே போட்டியினூடாகவே நிறைவு செய்யவேண்டிய ஒரு போராட்ட உலகில் நாம் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டோம்.

பால்ப்புட்டிகளோடும் சகோதரக் குழந்தைகளோடும் பற்றுக்குறைப் போட்டியின் ஒத்திகையோடு பிறக்கும் குழந்தை பாடசாலையிலும் போட்டிப்பரீட்சை போட்டி உடற்பயிற்சி என உருவாகி நாட்டிலும் பல்வேறு போட்டிகள் என்று சந்திக்கின்றது. எனவே விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கை வளர்க்கும் அறிவியல் போக்கின் ஆதிக்கத்தைவிட போட்டி மனப்பாங்கின் ஆதிக்கமே அதிகமாகிவிடுகிறது. இது சிறு சிறு நிகழ்ச்சிகளுடன் நின்றுவிடுவதில்லை.

15-ம் நூற்றுண்டில் ஐரோப்பிய நாடு கடல் கடந்து நாடுகளைக் கண்டுபிடிப்பதிலும் ஆசிய ஆபிரிக்க நாடுகளை வர்த்தக அடிமை நாடுகளாக்கியமையும் அரசியலில் சமயத்தில் தமது ஊடுருவலை நடத்தியமையும் பல வம்சப் போர்களையும் உருவாக்கின நடந்து முடிந்த இரு உலக யுத்தங்களை எடுத்தியம்பும்போது இன்று இதன்பக்க விளைவாக எத்தனையோ நாடுகள் அல்லலுறுகின்றன.

யப்பான் நாடு இன்று ஓர் முன்னணியில் திகழினும் அங்கு பகம் புல்லே தலை நீட்ட முடியாத அளவுக்கு நாசகாக்கி, ஹிரோசிமா பகுதிகள் தோற்றுவிக்கப்பட்டன அங்கவீனர்களாகச்சிசுக்கள் பிறந்திறந்த காட்சிகளும் பெண்வர்க்கம் குறைந்து ஒரு குடும்

பஸ்தன் பலபேர்களை பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பொருளாதார அழிவுகளும் உண்டுபண்ணப்பட்டது.

ஜேர்மனி வல்லரசு என்ற நிலையிலிருந்து இறக்கப்பட்டு ருசியா வல்லரசாக உயர்த்தப்பட்டதும் தனது ஆதிக்கத்தினுல் போலந்து, கங்கேரி, ருமேனியா, பல்கேரியா, கிழக்கு ஜேர்மனி, செக்கோசெலவேக்கியா, யூகோசிலேயவியா ஆகிய கிழக்கைரோப்பிய நாடுகள் பொதுவுடமை நாடுகளானதும் மேற்கைரோப்பிய நாடுகள் தொடர்ந்தும் தனியுடமை நாடுகளானதாலும் ஐரோப்பியா மேற்கு கிழக்கு என்ற பிரிவினைக்குள்ளாகியது. இதனுல் தனியுடமை பொதுவுடமை சித்தாந்தப் போட்டியை வலுவடையச் செய்ததோடு. இன்று வரை வல்லரசுகள் இரு முகங்களாக அணி திரளுவதற்குரிய காரணியாக உள்ளது.

போர்களால் எத்தனையோ மனித உயிர்கள் பலியாக்கப்படுகிறது பொருளாதார சிதைவுகளும் அரசியல் மாற்றங்களும் உலகமே கதிகலங்கும் அளவிற்கு போர்கள் நடக்கின்றன. பஞ்சம் பட்டினி பொருளாதார ஸ்த்திரமின்மை வறியதோர் சமூகம் தோற்றுவிப்பதாகவே காணப்படுகிறது. இது ஒரு தொற்று நோயா எனவும் ஆராய்வு செய்ய நேரிடுகிறது உண்மையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இது போன்ற விளைவுகள் தலைதூக்கி தாண்டவம் ஆடுமாயின் வறியவர்கள் நாம் பிச்சை போடுங்கள் என கையேந்தும் நிலையினையோ அல்லது முற்ருக அழிந்துவிடும் நிலையினையோ தான் எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

நாம் கண்மூடித்தனமான ஒரு சமாதானத்தை விரும்புகிருேம் என்பதல்ல இன்றைய செய்திப்பத்திரிகைகளேயோ றேடியோக்களையோ அவதானிப்பின் அச்செய்திகளில் 80% த்திற்குமதிகமான இடத்தை எடுப்பவை போர்ச் செய்திகள், எல்லைச் சண்டை, பணயக்கைதிகள், வல்லரசுநாடுகளின் ஆக்கிரமிப்பு, பொருளாதாரச் சூறையாடல் இவ்வாறு பலவேறுபட்ட நிகழ்வுகளுக்கான செய்திகள் இவைகளை இப்படியே வைத்து சமாதானம் செய்யவேண்டும் என நாம் எண்ணவில்லை அதேவேளை "கலகத்தில் தான் நீதி பிறக்கும்" முள்ளை முள்ளால் தான் எடுக்கலாம்'' என்பது போன்ற மணிமொழிகளை ஏற்கிருேம் ஆனல் கலகமே உலகமாகிவிடுவதை வன்மையாக வெறுக்கின்ருேம்.

> நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன.
> தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன.
> மக்கள் புரட்சியை விரும்புகிருர்கள்

என ஓர் அறிஞன் இன்றைய உலகின் விருப்பைச் சுருக்கமாக எடுத்தியம்பியுள்ளான் எனவே விருப்பங்கள் பூரணமாகத் தீர்க்கப்பட்டபின்னரே முற்ருகப் போராட்டம் ஒழியும் என நாம் நம்புகிருேம். இந்த நன்நாள் எந்நாளோ என ஏங்கும் இளம் தலைமுறைகளான நாம் இந்தப் பொன்நாளை நோக்கில் வைத்து உழைக்கப் பொருத்தமான வழியைத் தேர்வு செய்வோம்.

---

"வறுமை, போதிய பொருள்வளமின்மை, கல்வியின்மை, பொதுநலத்திற் கவனமின்மை, சனத்தொகைப் பெருக்கம் ஆகிய பிரச்சினைகள் தென் கிழக்காசிய மக்களான நம்மை விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியில் நமக்கே உரித்தான புதிய முறைகளைக் காணவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன.''

# முதலாளித்துவம் மரணப்படுக்கையில்

ஆக்கம்: செல்வன். அ. அமிர்தரஞ்சன்
(வர்த்தக பிரிவு 2-ம் வருடம்)

பொருளாதாரவரலாற்றில் கைத்தொழிலாக்க சகாப்தத்தை எவ்வாறு நவீனகாலம் என அழைக்கமுடியுமே அத்துணைப் பொருத்தத்துடன் அதனை முதலாளித்துவ சகாப்தம் எனவும் அழைக்க முடியும். முதலாளித்துவ முறையில் உற்பத்திச் சாதனங்கள் ஒரு சிலரிடமே குவிந்துள்ளது. உற்பத்தியின் அளவு பெரிதாகவும், சந்தை பரவலாகவும், பணவிநியோகம் சமமற்றதாகவும் காணப்படுகின்றது. பொருளாதார இயந்திரத்தின் இயக்கும் சக்தியாக இலாபம் பெறுதல், பெறவிளைதல், அதனை அதி உயர்ந்த மட்டத்திற்கு எடுத்துச் செல்லல் ஆகியவை அமைந்துவிடுகின்றன. முதலாளித்துவம் ஊற்றெடுக்கும் மண் கைத்தொழிலாகும் ஐரோப்பா விவசாயத்தை பொருளாதாரத்தின் அடி நாதமாகக் கொண்டிருந்தவரை முதலாளித்துவம் என்ற இலாப மனிதன் உருவாக முடியாது இருந்ததை வரலாறு வடிகட்டி வெளிப்படுத்துகின்றது ஜேர்மனிய வரலாற்று ஆசிரியர்கள் 1760-1914க்கும் இடைப்பட்ட காலத்தை முதலாளித்துவத்தின் செழித்து வளர்ந்த வாலிபப் பருவம் என வரையறை செய்கின்றனர். கைத்தொழிற் புரட்சியின் விளைவால் உலகம் சுருங்கியது. மிகத் தூரமான கிழக்கை மிகத்தூரமான மேற்குடன் இணைத்துவைத்தது.

செழித்து வளர்ந்து வந்த முதலாளித்துவம் என்ற இலாப மனிதனுக்கு அடிக்கடி சுகவீனம் வந்தது உண்மை ஆனல் அவையெல்லாம் மிகக் குறுகியவேளையில் காரமான மருந்துகள் என்ற ஒருபக்க அடக்குமுறைகளினல் போக்கடிக்கப்பட்டது ஆனலும் இருபதாம் நூற்ருண்டின் முதற் கால்நூற்ருண்டின் பின் ஏற்பட்ட நோய் முதலாளித்துவத்தை மரணப்படுக்கையில் தள்ளிவிட்டது. இலாப மனிதன் அடிக்கடி எழும்பினன் எனினும் இனிமேல் எழும்பவே முடியாதவன் என்ற வகையில் முதலாளித்துவத்தின் கழுத்தைச்சுற்றி பொதுநலம் என்ற பாசக்கயிறு இறுகி வருகின்றது. இருபதாம் நூற்ருண்டில் பொருளாதாரச் சூழல் மாற்றமடையத் தொடங்கியது. கட்டுப்பாடற்ற போட்டிமுறைக்கு இருபக்கத்தில் இருந்து எதிர்ப்புக்கள் கிளம்பின. தனிப்பட்ட உற்பத்தியாளர்தன் விருப்பு முறையில் உடன்படிக்கைகளை மேற்கொண்டு ரஸ்ற்றுக்களையும் காட்டல்ஸ்களையும் நிறுவி பொருளாதார நோக்கைக் கட்டுப்படுத்தினர். மறுபுறத்தில் அரசாங்கத்தின் அடுத்தடுத்த தலையீடுகள் இடம்பெற்றன. ஆனலும் தனியார் முதலாளித்துவம் என்ற கதை மாறி ஒழுங்குபடுத்தப்பட்ட முதலாளித்துவம் என்ற புதிய உரு இந் நூற்ருண்டில் வழங்கப்பட்டது. இந்த அபிவிருத்தி முதலாளித்

துவ முறையின் சக்தி நலிந்ததை வெளிப்படுத்தியது கைத்தொழில் அதிபர்கள் ஆபத்து என்ற ஓர் நோய் தமது சுரண்டலுக்கு எதிராக வரு வதை விரும்பவில்லை எனினும் முத லாளித்துவம் நிலைமைக்கேற்ப சரிப் படுத்த முடியாததாகவும், முன்னேற் றம் குறைந்ததாகவும், ஆற்றல் குறைந்ததாகவும், திறமை குன்றிய தாகவும் தென்பட்டது. இக் கடுமை யானதும் வலுவானதுமான முதலா ளித்துவ எதிர்ப்பு அதனை திடீரென முதுமைப்பருவத்தில் தள்ளியதுமட்டு மன்றி அதனை மரணப்படுக்கையை இறுக அணைக்கச்செய்தது.

முதலாளித்துவ முறையை உரு வாக்கிய ஏதுக்கள் சக்தி இழந்தா லும் ஓரளவுக்கு வலுவோடு இன்றும் செயற்படுகிறது. ஆதலால்தான் முத லாளித்துவம் இன்னும் இறக்காமல் உயிர் ஊசலாடும் நிலையைக் கொண் டுள்ளது. மேற்குலக ஐரோப்பியரின் மனப்பாங்கு இன்றும் முதலாளித்துவ முறையை சிறிதும் விட்டுக்கொடுக் காத நிலையிலேயே அமைந்துள்ளது. பாட்டாளி வர்க்கத்தில் ஒரு பிரிவி னர்கூட முதலாளித்துவ உணர்ச்சிக ளுக்கு வயப்பட்டுள்ளனர். அவ்வு ணர்ச்சி சூதாடும் இயல்புணர்ச்சியா கும் இவ்வுணர்ச்சியில் இருக்கும் அவர் கள் கூட மிக விரைவில் விடுபடும் அறிகுறிகள் தென்பட்டுள்ளமையால் முதலாளித்துவம் மரணத்தைத்தழு வும் முதல் இரு உலகப்போர்களும் முதலாளித்துவத்தின் பலவீனத்தை எடுத்துக் காட்டியுள்ளன. அடுத்துவ ரக்கூடிய போர்கள் முதலாளித்து வத்தை வற்றச்செய்து அதன் வீழ்ச் சியைத் தவிர்க்க முடியாததாக்கும் சனத் தொகையின் வளர்ச்சிக்கான காரணமும் விளைவும் முதலாளித்து வமேயாகும். முதலாளித்துவ முறை யின் படி இத்துணை உற்பத்தி நடை பெற்றிராவிட்டால் இத்துணைச் சனத் தொகையைப் பராமரித்திருக்க முடி யாது. சனத்தொகை இந்தவகையில் பெருகி இராவிட்டால் முதலாளித்து வம் தொழிலாளர் விநியோகத்தை யும் சந்தைவாய்ப்பையும் பெற்றி ருக்க முடியாது. இப்பருவம் 20ம் நூற்றாண்டில் முடிவெய்தியது பிர தான ஐரோப்பிய நாடுகளில் இன்று தேறிய விளைவுவீதங்கள் அந்நாடுக ளின் பழைய மட்டங்களில் உள்ள சனத் தொகைக்கே போதாது காணப் படுகின்றன. இதுவே முதலாளித்து வம் அழியும் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றது.

எந்த ஒரு பொருளாதாரமுறை யுமே அழிந்துவிடும் என்பதை வர லாறு காட்டுகின்றது. இச் சந்தர்ப் பத்தில் ''லாசாலின்'' கருத்து முக்கி யமானது. மூலதனம் ஒரு வரலாற்று வகை என இவர் கூறினார். வரலாற் றில் உருவாகிய வியப்பான ஒரு பொருள் முதலாளித்துவம் ஆகை யால் அது அழிந்தேயாக வேண்டும். முதலாளித்துவத்தின் இரும்புப்பிடி காரணமாக எத்தனையோ மக்கள் உலகம் பூராகவும் தமது இரத்தத்தை இழந்துள்ளனர். ஒரு சிலரின் வாழ்க்கை வளம் பெறுவதற்கு பல கோடி மக்கள் தம்மை இழந்தனர். தமது சிறார்களின் வாழ்க்கையைப் பாழடித்தனர். சுரண்டலின் மொத்த உருவமான முதலாளித்துவம் இங்கி

லாந்தின் கைத்தொழிற் புரட்சியின் போது தலைவிரித்தாடியது. அங்கு தொழிலாளர் இரக்கமின்றி வேலை வாங்கப்பட்டனர். முதலாளித்துவத்தின் கண்களுக்கு ஆண், பெண் உருவ அமைப்புக்கூடத் தெரியாதிருந்தது. 16 மணித்தியாலம் தொழிலாளர் வேலை செய்தனர். ஒரு நாளின் மிகுதி 8 மணித்தியாலத்தில் தமது வழமையான வேலைகளைக் கவனித்த தொழிலாளி 3 மணித்தியாலங்களே உறங்கினன். இன்னொருவன் மிக நீண்டநேரம் உறங்கவேண்டும் என்பதற்காக பெருந்தொகை தொழிலாளிகள் மிகக் குறைந்தநேரம் உறங்கினர் இந்தவகையில் மக்களைச் சுரண்டியமுதலாளித்துவம் எதிர்ப்புக்களால் சிறிது மாற்றம் உற்றது ஆயினும் வெவ்வேறு உருவங்களில் தனது சுரண்டலை அது தொடர்ந்து மேற்கொண்டு வந்தது.

முதலாளித்துவம் இன்று அழிவின் விளிம்பை எட்டியுள்ளது. ஆனல் சாகுந்தறுவாயில் இருக்கும் மனிதனைப்போலன்றி ஒரு பொருளாதார முறைமையானது நாம் நியாயமாகக் கணிக்கும் கால அளவிலும் பார்க்க அதிகமாக அது உயிர்வாழ முடியும், முதலாளித்துவம் வெட்ட வெட்ட தளிர்த்த ஒரு மரம், அது தனது வரலாறு முழுவதிலும் பழைய நிலையை அடைவதற்கு தனது பெரும் சக்திகளை யெல்லாம் வெளிப்படுத்தியுள்ளது. அதன் மறைவு சீக்கிரத்தில் அமையுமா என்பது சந்தேகமானதே. தற்போது முதலாளித்துவ மரத்தின் ஆணிவேரில் பழுது. ஏற்பட்டுள்ளது. ஆகையால் அதுமறைவது எப்போது? காலம் குறித்துக் கூறமுடியுமா? அல்லது இன்றைய விமரிசர்கள் கூறுவது போன்று மரணப்படுக்கையிலேயே தொடர்ந்திருக்குமா? அல்லது இரண்டாம் சாள்ஸ் மன்னனுக்கு நேர்ந்தது போன்று, பொருத்தமில்லாத ஒரு தருணத்தில் அதன் இறுதிநாள் அமையுமா? என்பதே இன்றைய வினக்கள் ஆகும். எவ்வாருயினும் முதலாளித்துவத்தின் மரண ஊர்வலத்தில் அது நீண்ட காலம் வாழ்ந்த ஒன்று என்பதற்காகவாவது, நாம் கலந்து கொள்ள தயாராவது நியாயமான ஒன்றேயாகும்.

---

## விளம்பரக் குழு

செல்வன். ப. சிவலிங்கம்.
" அ. அமிர்தரஞ்சன்.
" க. ஞானதேவன்.
" சு. கிருஷ்ணகுமார்
" ஆர். பால்ராஜ்.
" தா. பாலகணேசன்

# மன்றக் குறுக்கெழுத்துப் போட்டிக் குழுவின்

# அறிக்கை

எமது பாடசாலையில் வளரும் வர்த்தக மாணவ மன்றத்தின் அளப்பரிய செயற்த்திட்டங்களில் ஒன்ருன குறுக்கெழுத்துப் போட்டித் திட்டத்தைப்பற்றி எடுத்தியம்புவதில் நாம் பெருமகிழ்ச்சி யடைகின்ருேம்.

இத்திட்டம் குறுகியகாலத்தில் அமுலாக்கப்பட்டு சிந்தனையைத்தூண்டி மாணவ சமுதாயத்தின் அறிவு எனும் கருவி சிறப்பாக இயங்க வழி வகுத்ததோடு மட்டுமல்லாது பயன்மிக்க பரிசுகளையும் வழங்கி வந்துள்ளது. இத் திட்டத்தினை திறம்பட நடாத்துவதற்காக எமதிருவர் கைகளில் ஒப்படைத்து நல்லாதரவை நல்கிய எமது மன்றத் தலைவருக்கும், அதைச் செயலாற்ற ஏனைய வழிகளிலும் முன்னின்று ஒத்துழைப்பு நல்கிய செயலாளர் அவர்கட்கும், தக்க சமயங்களில் தக்கபடி ஆலோசனை நல்கிய எமது போட்டிக்குழுவின், ஆலோசகர் திரு. சு. சந்திரபோஸ் ஆசிரியர் அவர்கட்கும் இவற்றிற்கெல்லாம் மகுடமிட்டாற்போல் எமது இப்போட்டியை வரவேற்று தமது அறிவாற்றலை வெளிப்படுத்தி நல்லாதரவுதந்த மன்ற அங்கத்தினர்க்கும், ஏனைய மாணவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

எமது ஆக்கத்தினுலும், உங்களது ஆதரவாலும் நடாத்தப்பட்டு வெற்றிவாகை சூடிய இரு போட்டிகளின் விபரங்களையும் உங்கள்முன் சமர்ப்பிப்பதோடு மட்டுமல்லாது உங்களது அறிவுத்திறனை மேலும் பரீட்சித்துப் பார்ப்பதற்கு இம்மலருடன் ஓர் குறுக்கெழுத்துப் போட்டியையும் இணைத்துள்ளோம் இப்போட்டியினிற்கும் உங்களது ஒத்துழைப்பை நல்குவீர்களென எதிர்பார்க்கின்ருேம்.

14-1-1981
வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

போட்டி ஆசிரியர்கள்
கே. ஞானதேவன்
ஆர். பால்ராஜ்

இடமிருந்து வலம்:-

1. வர்க்கடம் எனும் பதத்தினை இது சுலபமாக விளக்குகின்றது.

2. அண்மையில் வட பகுதியில் பரீட்சார்த்தமாக திறந்து வைக்கப் பட்ட நிர்வாகச் செயலகம், இப்படி அழைக்கப்படுகின்றது. (கடை எழுத்து மறைவு)

3. அருணகிரிநாதர் அருளிச் செய்த முருகன் புகழ் பாடும் பாமாலைக ளில் ஒன்று. (கடையெழுத்து மறைவு)

4. பந்தயத்திற்காக வீதிக் கரைகளில் உருட்டி விளையாடும் இவற்றின் மேல் சிறுவர்க்கு அலாதிப் பிரியம். (எழுத்து மாறிக் கிடக்கின்றது)

5. பலி என்னும் சொல்லை இவ்வாறு கூறுவதுமுண்டு.

P.T.O.

---

பெயர்: ..............................................................

வகுப்பு: ........................................................

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | | | 6 த | | // |
| 2 மி | | | க | | 8 |
| | // | 5 கா | | // | ஊ |
| | // | | // | 7 அ | // |
| 3 | 9 ஙீ | | | | பூ |
| 4 ளீ | | ளீ | | மா | // |

மேலிருந்து கீழ்:-

1. உணவுக் குழாய்களில் தொடர்ச்சியாக இவைகள் அதிகரிப்பதை நடுநிலைப் படுத்தவே நாய் புல்லை உண்ணுகின்றது.

5. பெண்களின் அழகிய கரங்களை இம் மலர்க்கு ஒப்பிடுவர்.

6. ஒட்டிய மாமரங்களில் ஒட்டுக் கட்டைக்கும், ஒட்டு முளைக்கும் இடையில் இது இன்மையால் விளைவு குன்றலாம்.

7. கம்பர் கண்ட வலிமை மிக்கதான ஓர் பாத்திரம் (க. எ. மறைவு)

8. படையையும் பயிர்ச் செய்கையையும் குறிக்கும் ஓர் சொல்.

9. நேரம் தவறி வருவதை இப்படியும் அழைப்பர். (க. எ. மறைவு)

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 1

பரிசுபெற்றோர்:-

1 வது இடம் செல்வி. எஸ். தாட்சாயினி (8ம் வகுப்பு)
2 வது இடம் செல்வன். எஸ். முகிதீன் (7ம் வகுப்பு)
3 வது இடம் செல்வி. எஸ். ஜெயகாந்தி (வர்த்தக பிரிவு 1ம் வருடம்)

ஆறுதல்ப் பரிசுகள்:-
செல்வி. எம். புஸ்பராணி (வர்த்தக பிரிவு 1ம் வருடம்)
செல்வன். பி. தேவானந் (க. பொ. த. சாதாரணம்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 2

பரிசு பெற்றோர்:-
1 வது இடம் செல்வன். ந. சிவானந்தன் (வர்த்தக பிரிவு 2ம் வருடம்)
2 வது இடம் செல்வி. நா. வசந்தகுமாரி ,,
3 வது இடம் செல்வி. பி. சோமேஸ்வரி (10ம் வகுப்பு)

ஆறுதல் பரிசு பெற்றோர்:-
செல்வி. அ. ரமணி (9ம் வகுப்பு)
செல்வி. அ. விக்கினேஸ்வரி (வர்த்தக பிரிவு 2ம் வருடம்)

## குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 3

முதலாவது பரிசு:- ரூபா 50 பெறுமதியான பரிசுகள்
இரண்டாவது பரிசு:- ரூபா 30 ,, ,,
மூன்றாவது பரிசு:- ரூபா 20 ,, ,,

போட்டிக்கான நிபந்தனைகள்:-
1. போட்டிக் கூப்பன்கள் யாவும் தெளிவாகவும் ஒழுங்காகவும் நிரப்பப் பட்டு இருத்தல் வேண்டும்.
2. வைத்தீஸ்வர வித்தியாலய மாணவர்கள் எல்லோரும் பங்குபற்றலாம் (தற்பொழுது கல்விகற்பவர்கள்)
3. கூப்பன்கள் யாவும் 15-2-1981 க்கு முன்னதாக மூடிய தபால் உறையில் போட்டி ஆசிரியரிடம் ஒப்படைக்கவேண்டும்.
4. தலைவர், செயலாளர், பொருளாளர், குறுக்கெழுத்துப்போட்டி ஆசிரியர்கள் ஆகியோர் இப் போட்டியில் பங்குபற்ற முடியாது.
5. பரிசுகள் அதிபர் அவர்களால் பாடசாலை மண்டபத்தில் வைத்து 25-2-1981 அன்று வழங்கப்படும்.
6. நடுவர்களின் முடிவே தீர்ப்பானது.



# நன்றி மறப்பது நன்றன்று



அறிவும் ஆக்கமும் மிக்கதொரு
சிந்தனை ஊற்றாக இவ்வொளி ஒளிபாச்ச
இணைந்து செயற்பட்டோர்
உறுதுணையாய் நின்று உதவிபுரிந்தோர் வரிசையிலே............
அதிபர் அவர்கட்கும்
போசகர் அவர்கட்கும்
ஆசிச் செய்தி வழங்கியோர்
ஆக்கங்களை தந்துதவியோர்
விளம்பர தாரர்கள்
நன்கொடை வழங்கியோர்
பழைய மாணவர்கள்
நலன் விரும்பிகள்
சித்திரா அச்சகத்தினர் அனைவருக்கும்
''நன்றி மறப்பது நன்றன்று''
என்னும் எம்தமிழ் மொழிக்கிணங்க
நெஞ்சார நன்றி நவில்கின்றோம்.

—மலர்க்குழு—

யாழ் நகரின் ஒரே ஒரு முன்னணி நிறுவனம்

# HICKS INSTITUTES

**39/17, POWER HOUSE ROAD,
JAFFNA.**

*Branch:*
101/10, STANLEY ROAD,
JAFFNA.

**B.Q.**
**G.A.Q.**
**First in Commerce**
First in Law
**Banking**
G.C.E. (A/L) 81, 82.
G.C.E. (O/L) 81, Decmber

பகல் நேர, மாலை நேர, வார இறுதி வகுப்புக்கள்
சுருக்கெழுத்து தட்டெழுத்து

விசேட ஆங்கில வகுப்புகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**HICKS INSTITUTES**
39/17, POWER HOUSE, ROAD,
JAFFNA.

அன்பளிப்பு

வர்த்தக மாணவ மன்றத்திற்கு எமது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# திசா ரேய்ஸ்

70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

☎ 648

மாணவர்களே!

உங்கள் நன்மை கருதி எமது ஸ்தாபனம் நீங்கள் பாடசாலை சென்று வருவதற்கு குறைந்த கட்டணத்துடன் ஒரு சேவையை நடாத்துகின்றது. உங்கள் நன்மையைத் தமது கருத்தில் கொண்டு இயங்கும் எமது ஸ்தாபனம் உங்கள் ஆக்கபூர்வமான பணி சிறப்படையவும் மேலும் மேலும் இப்பணியை நடாத்தவும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிளை:

ஓ.கே. ரவல் சேவிஸ் அன் ரூர்ஸ் லிமிட்டட்.

**O.K. Travel Service & Tours Ltd.**

சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7618